www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පුමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 10 | ஏப்ரல் 2003 | பக்கம் 12 | விலை 12/- | சுழற்றி 57

# ஏகாதிபத்திய யுத்தப் பிசாசுகளே ஈராக் யுத்தத்தை உடன் நிறுத்துங்கள்!



கடந்த மாதம் 20ம் திகதி ஈராக் மீதான நேரடி யுத்தத்தை அமெரிக்கா தொடுத்துள்ளது. பிரித்தானிய ஆட்சியாளர்களையும் சேர்த்துக் கொண்டு இரண்டரை லட்சத்திற்கு மேற்பட்ட துருப்புகளுடனும் சகல பேரழிவு தரவல்ல ஆயுதங்களுடனும் ஈராக் நாட்டிற்குள் அமெரிக்கா புகுந்துள்ளது.

ஈராக்கில் மனிதப் பேரழிவு தரும் ஆயுதங்கள் உண்டென்று அமெரிக்கா கூறி வந்த கட்டுக் கதையை ஐ.நா. ஆயுதப் பரிசோதனைக் குழு அப்படி எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று கூறிவிட்டது. ஈராக் அதிபர் சதாமைப் பதவி கவிழ்க்க வேண்டும் என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டை ஐ.நா. பாதுகாப்புச் சபை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை. உலக பயங்கரவாதத்திற்கு ஈராக் ஆதரவு கொடுத்து வருகிறது என்ற குற்றச் சாட்டையும் எவரும் ஆதரிக்கவில்லை.

ஐ.நா. பாதுகாப்புச் சபையினது ஒப்புதல் இன்றி அமெரிக்க பிரித்தானிய மக்கள் உட்பட லட்சோப லட்சம் உலக மக்களின் கடுமையான கண்டன எதிர்ப்பின் மத்தியிலேயே அமெரிக்கா யுத்தப் பிசாசாக மாறி ஆக்கிரமிப்பு யுத்தத்தை ஈராக் மீது தொடுத்துள்ளது.

இந்த யுத்தம் வேறு எதற்கும் அல்ல. ஈராக்கின் எண்ணெய் வளத்தை கொள்ளையிடுவதற்கும் மத்திய கிழக்கில் தனது ஆதிக்கப் பிடியை வைத்திருப்பதற்குமேயாகும். அமெரிக்க ராட்சத எண்ணெய்க் கம்பெனிகளது

**எண்ணெயைக் கொள்ளையிட ரத்தத்தைக் குடிக்காதே! இன்று ஈராக் நாளை இலங்கை!**

முதலாளிகளின் தேவைக்கும் விருப்பத்திற்குமாகவே ஈராக் யுத்தம் நடத்தப்படுகிறதேயொழிய அமெரிக்க பிரித்தானிய மக்களின் தேவை விருப்பிற்காக அல்ல. பிரான்ஸ். ஜேர்மனி உள்ளிட்ட மேற்குலக நாடுகளும் மூன்றாம் உலக நாடுகளும் கூட ஈராக் யுத்தத்தை எதிர்க்கின்றன. சீனா. றஷியா. இந்தியா என்பனவும் ஆதரிக்கவில்லை.

எனவே எண்ணெய்க்கான அமெரிக்க-பிரித்தானிய ஏகாதிபத்தியப் பிசாசுகளின் இவ் யுத்தத்தால் ஈராக்கிய மக்களின் இரத்தமும் உயிர்களும் குடிக்கப்படுகின்றன. நாட்டின் வளங்களும் சொத்துக்களும் அழிக்கப்படுகின்றன. அமெரிக்க ராட்சத முதலாளிகளுக்காக அமெரிக்கப் பிரஜைகளான துருப்புகள் பலியிடப்படுகின்றனர்.

ஏகாதிபத்தியம் என்றால் என்ன என்பதையும் அது எத்தகைய இழி செயல்களையும் படு பாதகம் நிறைந்த பயங்கரச் செயல்களையும் செய்ய வல்லது என்பதையும் ஈராக் யுத்தத்தினை அவதானிக்கும் ஒவ்வொருவரும் கண்டு கொள்ளமுடியும்.

நமக்குத் தூரத்தில் ஈராக் நாட்டில். அதுவும் முஸ்லீம் நாட்டிற்குத் தானே அமெரிக்கா அடிக்கிறது என யாரா வது எண்ணினால். அவர்கள் அறிவீலிகளாகவும் தூர நோக்கற்ற மடையர்களாகவுமே இருக்க முடியும்.

இலங்கை அரசாங்கம் இதுவரை தனது கண்டனத்தையோ எதிர்ப்பையோ வெளிக் காட்டவில்லை. அவ்வாறே தமிழ்த் தலைமைத்துவங்களும் பேசா மடந்தைகளாக இருந்து வருகின்றனர். அது அவர்களது ஏகாதிபத்திய அடிவருடும் வழமைக்கு உட்பட்டதாகும்.

ஆனால் இலங்கை மக்கள் இந்த அநியாய யுத்தத்தை எதிர்க்கிறார்கள் என்பதை ஆங்காங்கே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மூலம் வெளிக் காட்டி வருகிறார்கள். புதியபூமி அம் மக்களோடு இணைந்து தனது வன்மையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் தெரிவிக்கின்றது. இன்று ஈராக்கில் நடப்பது நாளை இலங்கைக்கும் ஏற்படலாம். ஏன் வடக்கு கிழக்கிற்கும் நடக்கலாம்.

எனவே அமெரிக்க-பிரித்தானிய யுத்தப் பிசாசுகளே ஈராக்கில் யுத்தத்தை நிறுத்தி அங்கிருந்து திரும்பிப் போங்கள் என்ற முழக்கத்தை உலக மக்களோடு சேர்ந்து உரத்து முழங்கி எதிர்ப்போம்.

# வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வை ஏற்படுத்துங்கள்

## புதிய ஜனநாயக கட்சி பிரதமரிடம் நேரில் வற்புறுத்தல்!

- பாதுகாப்பு வலயங்களை அகற்றுங்கள்
- விளைநிலங்களை விவசாயிகளிடம் கொடுங்கள்
- கடல் பரப்பை மீனவர்களிடம் ஒப்படையுங்கள்
- பாடசாலைகளை மாணவர்கள் ஆசிரியரிடம் விடுங்கள்
- தொழிற்சாலைகளை தொழிலாளர்களிடம் கொடுங்கள்
- கோயில்களை பக்தர்களிடம் கையளியுங்கள்

தற்போதைய சமாதான முயற்சி வெற்றி பெறுவதற்காக இலங்கை மக்களின் பெரும்பான்மையானோரின் ஆதரவை திரட்டுவதற்கும் ஜனாதிபதியின் இடையூறுகள் இல்லாமல் அரசியல் யாப்புரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் தலைமையிலான ஐ.தே.மு. அரசாங்கம் திட்டமிட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று பிரதமருக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளிலேயே அதிக காலத்தை செலவிடாமல் திட்டமிட்ட வகையில் சமாதான பேச்சுவார்த்தைகள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும். காலத்தை நீடிக்கின்ற போது பேரினவாதிகளுக்கும் சமாதான விரோதிகளுக்கும் இடம் கொடுப்பதாகவும். மக்களை அவர்களின் வலையில் சிக்க வைப்பதற்கும் துணை புரிவதாகவும் அமைந்து விடும் எனவும் பிரதமரிடம் சுட்டிக் காட்டப்பட்டது.

வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தவும் அரசியல் தீர்வை காண்பதற்குமென இரண்டு வகையான நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக மீளமைப்பு. மீள்குடியேற்ற. புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வடக்கு கிழக்கில் தற்போது இருக்கும் இராணுவ. யுத்த கால நிர்வாகத்திற்கு மாறாக ஜனநாயக பூர்வமான சிவில் நிர்வாக முறை ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தோடு மீளமைப்பு. மீள்குடியேற்ற. புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போதுமான நிதியை ஒதுக்கி மேற்படி சிவில் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

ஏற்கனவே குடியிருந்த இடங்களில் மீள்குடியேற மக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். அதிபாதுகாப்பு வலயம் என்பதை அகற்றி அப்பகுதிகளிலும் குடியேறுவதற்கு மக்களை அனுமதிக்க வேண்டும். வேலையிழந்தும் வேலையில்லாமலும் இருப்போரின் பிரச்சினைகளை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் இயங்கிய தொழிற்சாலைகள் மீளத் திறக்கப்பட வேண்டும். புதிய தொழில் முயற்சிகளும் தொடங்கப்பட வேண்டும்.

எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி மீனவர்கள் அவர்களது தொழிலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும்.

விவசாயிகள் விசாயத்தை மேற்கொள்ள மானியங்களும். வசதிகளும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும்.

வடக்கு கிழக்கில் கல்வி. சுகாதார. போக்குவரத்து சேவைகளை சீராக்குவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தேசிய இனங்களின் சமத்துவம். சுயநிர்ணய உரிமை. சுயாட்சி. தேசிய இனங்களிடையே ஐக்கியம் ஆகிய அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

அரசியல் தீர்வு காண்பதில் வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன். அப்பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்களினது பிரச்சினைகளும். மலையகத் தமிழ் மக்களினதும். வடக்கு கிழகிற்கு வெளியில் வாழும் முஸ்லிம் மக்களினதும். வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களினது பிரச்சினைகளும் பேச்சுவார்த்தையில் ஆராயப்பட வேண்டும்.

இணைந்த வடக்கு கிழக்கில் பூரண மான சுயாட்சி வழங்கப்பட வேண்டும். அதில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பும் சுயாட்சியும் உறுதி செய்யப்பட வேண்டும்.

தொடர்ச்சி 3ம் பக்கம்..

# தமிழர் கூட்டமைப்பில் விரிசல் கூட்டணிக்குள் குத்து வெட்டு!

கடந்த பொதுத் தேர்தலின் போது அவசர அவசரமாக உருவாக்கப்பட்டது தான் தமிழர் தேசிய கூட்டமைப்பு. பரம்பரை ஆதிக்க அரசியல் கட்சிகள் இரண்டு. ஆயுதம் ஏந்தி அட்டகாசம் புரிந்த தமிழ் இயக்கங்கள் இரண்டு. முன்னையவை இரண்டும் தமிழ் மேட்டுக்குடி உயர்வர்க்க சக்திகளின் சார்பாக நின்று அரசியல் நடாத்தி வந்தவர்கள். ஆனால் எல்லாத் தமிழ் மக்களுக்காகவும் இயங்குவதாகவே பாசாங்கு செய்து வந்தவர்கள். அதனால் அவர்களது அரசியல் செப்படி வித்தைகளும் பாராளுமன்றக் கதிரைகள் பதவிகள் அதன் காரணமான அரசியல் துரோகங்கள் ஏராளம். பின்னையவை இரண்டு தமிழ் இயக்கங்களும் ஆயுதம் தாங்கி நின்று செய்து கொண்டவை பற்றி தமிழ் மக்கள் மத்தியில் நன்கு அறியப்பட்டவை. அவற்றின் காய்ந்து போன ரத்தக் கறைகள் என்றுமே துடைக்கப்பட முடியாதவை.

இத்தகைய நான்கு கட்சிகளும் கொழும்பின் உயர்வர்க்க தமிழர். வெளி நாடுகளின் தூதுவர்கள் போன்றது விருப்பத்திற்காக தமிழர் கூட்டமைப்பாகி பாராளுமன்ற ஆசனங்களைப் பெற முன் வந்தன. புலிகளைத் தம் பக்கம் வளைத்து பழையவற்றை எல்லாம் மறந்து ஏகப்பிரதிநிதிகள் என்ற முழக்கத்தோடு தேர்தலில் வெற்றி பெற்றனர். இவர்களது பிரதான எதிரி பேரினவாத கட்சிகள் அல்ல. பாராளுமன்ற எதிர்த் தரப்பான ஈ.பி.டி.பி.யாகவே இருந்தது. வழமையான துரோகிகள் கண்டுபிடிக்கப்பட்டு அதுவே வாக்குகள் பெறப் பயன்படுத்தப்பட்டது. வெற்றியும் கிடைத்தது.

தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான வேலைத்திட்டம் என்ன? அடிப்படைக் கொள்கை யாது? என்று புதிய-ஜனநாயகக் கட்சி கேள்வி எழுப்பிய போது அதற்குப் பதில் கூறப்படவில்லை. தமிழ் மக்களும் வழமை போன்று சாஞ்சா சாயிற செம்மறியாட்டுக் கூட்டம் போன்று வாக்களித்து மட்டுமன்றி மெத்தப் படித்த பல்கலைக்கழக மாணவர்கள் கூட்டம் கூட்டமாகப் பிரசாரம் செய்து கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்தனர்.

அன்று விதைத்ததை இன்று அறுக்க வேண்டிய கட்டம் வந்துள்ளது. தமிழர் தேசிய கூட்டமைப்பு வெறும் பெயர் மட்டுமே. தேர்தலுக்குப் பின் இதனை கூட்டமைப்பாக இயங்க எடுத்த முயற்சி எதுவுமே பலன் தரவில்லை. எல்லா எம்.பி.மாரும் வன்னியில் மட்டுமே ஒரு நாள் ஒன்றாக இருக்க முடிந்தது. அது புலிகளின் அழைப்பினால் மட்டுமே

**ஆனந்தசங்கரி உப சபாநாயகர்?**

சாத்தியமானது. அதிலும் கூட ஆனந்தசங்கரியானவர் காய் வெட்டி விட்டு இந்தியா சென்று விட்டார்.

கூட்டமைப்புக் கட்சிகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு புறமாக தத்தமது பாராளுமன்றப் பதவிகளைப் பயன்படுத்தி தமக்குரிய வேலைகளில் மும்முரம். அவற்றுக்குள்ளும் கோஷ்டி மோதல். காங்கிரசிற்குள் விநாயகமூர்த்தி-



கஜேந்திரகுமார் இழுபறி. கூட்டணிக்குள் ஆனந்தசங்கரி-மாவைசேனாதிராசா மோதல். ரெலோவுக்குள் வன்னி-யாழ்ப்பாணம் எனப் புகைச்சல். ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்கனவே பிளவு - இப்போது இந்தியா பக்கமா புலிகள்

தொடர்ச்சி 2ம் பக்கம்.

படிப்பகம்

www.padippakam.com



# வடக்கு கிழக்கில் ஊழல் பெருச்சாளிகள்

யுத்தம் இடம்பெற்றாலும் சரி சமாதானம் வந்தாலும் சரி ஊழல் செய்யும் உயர் அதிகாரிகளுக்கு எல்லாம் ஒன்றுதான். "நக்கிற நாய்க்கு செக்கும் சிவலிங்கமும் ஒன்றுதான்" என்பது போல அவர்கள் தமது கைங்கரியங்களைச் செய்து வருகிறார்கள். உயர் அதிகாரிகளே அவ்வாறெனில் அடுத்தடுத்த நிலையில் உள்ளவர்கள் தத்தம் நிலைக்கு ஏற்ப ஏதோ செய்து கொள்ளவே செய்வார்கள். ஆனால் எல்லா அதிகாரிகள். ஊழியர்களையும் ஊழல் பட்டியலுக்குள் அடக்க முடியாது. நேர்மையும் மக்கள் சார்பும் கொண்ட பலரை பல மட்டங்களிலும் காணலாம்.

ஆனால் ஊழல் புரிவதற்கென்றே உருவெடுத்து வந்த உயர் அதிகாரிகளை பிரதேச சபைகளில் இருந்து திருகோணமலை மாகாண சபை நிர்வாகக் காரியாலயங்கள் வரை காணலாம். உதாரணத்திற்கு யாழ் செயலகத்தின் முதல் நிலை உயர் அதிகாரியான ஒருவர் தனது வீட்டு நஷ்ட ஈடாக இரு தடவைகளில் இரண்டு லட்சத்தைப் பெற்ற கதையை புனர்வாழ்வு அமைச்சரே அம்பலப்படுத்தி இருந்தார். குடாநாட்டிற்கான பால் மா தேவையற்றது எனக் கூறி இதே அதிகாரி அதனைத் தடுத்தமையையும் அமைச்சர் கூறி இருந்தார். இது பற்றி அந்த உயர் தமிழ் அதிகாரி இதுவரை எந்த விளக்கமும் கொடுக்கவில்லை.

இது ஒரு புறம் இருக்க இப்போது வடக்கில் பிரதேச சபைகள். மாநகர. நகர சபைகள் விஷேட ஆணையாளர்களின் பொறுப்பில் வந்துள்ளன. பழைய கணக்குகள் தட்டிப் பார்க்கப்படுகின்றன. எந்தெந்த வழிகளில் யார் யாருடைய கைகளுக்கும் பைகளுக்கும் பொதுப் பணம் சென்றடைந்தன என்ற விபரங்கள் வெளிவர ஆரம்பித்துள்ளன. இச் சபைகள் ஊடாக வீதிகள் போடப்பட்டன. விளக்குகள் ஏற்றப்பட்டன. ஆனால் அவற்றின் பேரில் சில அதிகாரிகள் வீடு. வளவு வாங்கி வாகன வசதிகள் பெற்று செல்வச் சிறப்போடு வாழ்வை வளப்படுத்திக் கொண்டனர். ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களது வீடுகளும் வயிறுகளும் தொழில்களும் வெறுமை தான். எல்லாம் தமிழின் பெயரால். போராட்டத்தின் பெயரில்தான் நடந்து கொண்டன. பிழைக்கத் தெரிந்த உயர் அதிகாரிகள் தாராளமாக தம்மை உயர்த்திக் கொண்டுள்ளனர்.

மக்கள் இந்த ஊழல் பெருச்சாளிகளுக்கு எதிராக விரல் சுட்டி எழாத வரை. எல்லாம் மேலே இருக்கும் கடவுள் கேட்பார் என்று இருக்கும் வரை ஊழல் மன்னர்கள் வாழ்ந்து கொண்டே தான் இருப்பார்கள். மக்களும் கீழே இருந்து கொட்டாவி விட்டு துன்பத்தில் அழுந்த வேண்டியதுதான்.

# வவுனியா நூலகங்கள் மூடப்பட இருக்கின்றன?

வவுனியாவில் உள்ள பொது நூலகங்களை மூடுவதற்கு அரசு முடிவெடுத்துள்ளதா என்ற கேள்வி மக்களிடையே எழுந்துள்ளது. நூலகங்களுக்குத் தேவையான ஊழியர்களை நியமிப்பதில் அரசாங்கம் பின்னடித்து வருகின்றது. வவுனியா நகரசபை நூலகம், செட்டிகுளம். பாவற்குளம் உட்பட பல நூலகங்கள் நூலகர் இன்றியே இயங்கும் பரிதாப நிலையை அடைந்துள்ளன.

நகரின் மத்தியில் இருக்கும் வவுனியா பொது நூலகம் வளர்த்தெடுக்கப்பட வேண்டிய முக்கிய நூலகங்களுள் ஒன்று. இது இன்றைய நிலையில் இயங்குவதற்கே முப்பத்துநான்கு 34 ஊழியர்கள் தேவைப்படுகின்றனர் ஆனால் 10 ஊழியர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

தரம் II தகுதியில் இருக்கும் இந்நூலகத்திற்கு தரம் II நூலகர் ஒருவரும் தரம் III நூலகர் இருவரும் நியமிக்கப்பட வேண்டும். ஆனால் 1999ல் நூலகர் காலமானதால் ஏற்பட்ட வெற்றிடம் தகுதியானவர்கள் இருந்தும் கூட இன்னும் புதிய நூலகருக்கான நியமனம் வழங்கப்படாமலே இருக் கின்றது. இந்நூலகம் நூலக சேவை யாளர்களாலே இயக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே பாவற்குளம். செட்டிகுளம் நூலகங்களும் இயங்குகின்றன. பம்பைமடு பிரதேசசபைக்குரிய கூமாங்குளம் நூல் நிலைய நூலகர் இடமாற்றம் பெற்றும் அதற்குரிய நூலகர் நியமிக்கப்படாமலே இருக்கின்றது.

வவுனியா நகரசபை கலைக்கப்பட்டதனால் அது விசேஷ ஆணையாளரின் கீழ் இயங்கி வருகின்றது. நூலக நியமனங்கள் பற்றி பல தடவை கோரியும் செவி சாய்க்கப்படவில்லை என ஆணையாளர் கூறுகின்றார்.

வவுனியாவின் நல்வாழ்வுக்கு நகரசபை தேர்தல் ஒத்தி வைக்கப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இவற்றைச் செவ்வனே இயக்க நடவடிக்கை எடுக்கமாட்டார்களா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். இவ்வாறே நூலகங்கள் இயங்கிவரின் இறுதியில் கட்டிடங்களே மிஞ்சும்; சேவை நடைபெறாது என்பதை உணர்ந்து சகலரும் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டியது அவசியமானதாகும். சுயநலம். அரசியல் லாபம். பதவிப் போட்டி. பணம் பண்ணும் வழி முறை இவைகள் தான் இன்றைய பிரதான போக்குகளே அன்றி பொது நலம். சேவை. மக்கள் சார்பு என்பவை யாவும் உச்சரிப்பதற்கும் மறந்து போன விடயங்களாகும். ஆதலால் மக்கள் விழிப்படைந்து வற்புறுத்தி நிற்காவிடின் நூலகங்கள் உள்ள நிலையை விடவும் சீரழிந்து கொள்ளவே செய்யும்.

- ஆர். விமலேஸ்வரன்-

# யானைவரும் பின்னே...

துருக்கியில் 62.000 அமெரிக்கத் துருப்புக்களை நிலைகொண்டு ஈராக்கிற்கு எதிராக யுத்தம் நடாத்த இருந்த திட்டத்தை துருக்கியப் பாராளுமன்றம் நிராகரித்து விட்டது. ஆனால் துருக்கிய பிரதமர் மீண்டும் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து அதன் சம்மதத்துடன் அமெரிக்கத் துருப்புக்களை அந்த நாட்டில் நிலைகொள்ள வைப்பதென முடிவுசெய்து கொண்டார்.

இதற்கு முன்னோடியாக அந்த நாட்டில் "பல ஏற்பாடுகளைச் செய்வதில் வியாபாரிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

அலி ராமூஸ் என்பவர் டியார்பக்கீர் என்ற இடத்தில் ஒரு விபச்சார விடுதி நடாத்தி வருகிறார். அதே பிரமுகர் மார்டின் என்ற இடத்தில் இரண்டாவது விபச்சார விடுதியை ஆரம்பிக்க அனுமதி கோரியிருந்தார். இந்த வேண்டுகோளை மார்டின் கவர்னர் நிராகரித்து விட்டார். நாட்டில் இது சம்மந்தமாக மக்கள் மத்தியில் நிலவும் மனோ நிலையைக் கருத்திற்கொண்டே தான் இந்த முடிவிற்கு வந்ததாகத் தெரி வித்தார்.

அமெரிக்கத் துருப்புக்களுக்கு மட்டுமல்ல இந்தியத்துருப்புக்களுக்கும் பங்களாதேஷிலும் இலங்கையிலும் பலர் "வசதி"கள் செய்து கொடுத்தனர். இன்றும் பங்களாதேஷிலும் இலங்கைத் தமிழ் பெண்களும் இந்தியாவிற்கு விரோமான போக்கு கடைப்பிடிப்பது ஆச்சரியத்துக்குரியதல்ல. இந்தியத் துருப்புக்கள் பங்களாதேஷிலும் இலங்கையில் வட-கிழக்கில் பெண்கள் மீது பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியது மறக்கப்படக்கூடியதல்ல. தமிழ்த் தலைவர்கள் இதை மறந்து இந்தியாவுக்கு காவடி எடுப்பதும் ஆச்சரியப்படக் கூடியதல்ல.

இந்தியாவைப் பகைக்கப்படாது என்பதிலும் அமெரிக்க அத்துமீறல்களைக் கண்டிக்கப்படக்கூடாது என்பதிலும் நமது சுதந்திரமான ஊடகங்கள் மிக்க அவதானமாகவே நடந்து வருகின்றன. முஸ்லிம்களின் பிரதிநிதி என்கிற முஸ்லிம் காங்கிரசும் அமெரிக்காவை கண்டிக்க வில்லை.

அதேசமயம் ஈராக்கிய தூதுவரை அழைத்து அவரை எச்சரித்துள்ளார் நமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர். நாட்டில் அமெரிக்க எதிர்ப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதை அவரும் அவரது அரசும் விரும்பவில்லை என்பதே அதன் அர்த்தம்.

ஈராக்கில் என்ன வகையில் ஆட்சி இருக்க வேண்டுமென்பதை அந்த நாட்டு மக்கள்தான் முடிவுசெய்ய வேண்டும். தமது நாட்டைப் பாதுகாக்க என்ன ஆயுதம் வைத் திருக்க வேண்டும் என்பதைக் கூற அமெரிக்காவிற்கு என்ன தகுதியுண்டு. இந்தோனேஷியாவில் சுகார்னோவை கவிழ்த்து கொலைகாரன் சுகார்ட்டோவை பதவியில் அமர்த்துவதற்காக பல இலட்சம் தேசபக்தர்களைக் கொன்று குவித்த அமெரிக்கா இன்று ஈராக்கிய மக்களுக்காக கவலைப் படுகிறதாம்.

தமிழ். சிங்கள. முஸ்லிம் தலைவர்கள் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஆதரவாகச் செயற்பட்டாலும் இலங்கையில் உள்ள இடதுசாரி. ஜனநாயக சக்திகள் உலக இடதுசாரி. ஜனநாயக சக்திகளுடன் இணைந்து அமெரிக்காவைக் கண்டிக்கிறது.


இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரே ஒரு வெகுஜன அரசியல் பத்திரிகை

புதியபூமி

ஒவ்வொரு மாதமும் 1ம் திகதி வெளிவருகிறது.

வருட சந்தா - 200 ரூபா ஆறு மாதம் - 100 ரூபா
வெளிநாடுகளுக்கு US $ 20.00
(தபாற் செலவு உட்பட)

✍ செய்திகள்-கட்டுரைகள் அனுப்புங்கள்
✍ உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்

பணம் அனுப்பும் வங்கி விபரம் : சோ. தேவராஜா
கணக்கு இலக்கம் : 0672-21-2002634-6
Bank of Ceylon, Central Super Market, Colombo 11.



ஆசிரிய பீடம் / நிர்வாகம் : புதிய பூமி
S-47. 3வது தளம். கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
(C.C.S.M. Complex) கொழும்பு - 11. இலங்கை. Tel: 435117, 335844 Fax : 01-473757


# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## கம்பன் கருணை

விடுதலைப் புலிகளின் விடுதலைப்பரணி பாடிப் புகழ்பெற்ற புதுவை இரத்தினதுரையின் படம் கடைசியாக வெளியான மல்லிகையின் முகப்பை அலங்கரித்துள்ளது. டொமினிக் ஜீவா மல்லிகை மூலம் ஆயிரந்தலை வாங்கிய ஆபூர்வ சிந்தாமணி பட்டம் பெற இன்னும் வெகுகாலம் இருக்கிறது. என்றாலும் இன்னொரு தலை உருண்டிருக்கிறது. உருட்டியவர் வேறு யாருமல்ல. சாட்சாத் கம்பன் வாரி கொம்பனி முதலாளிதான். புதுவையாரை அண்மைக் காலத்தில் பாராட்டி நிற்காத இந்த ஆன்மிக வியாபாரிக்கு ஏன் புது மயக்கம். உண்மையில் புதுவையாரைப் பற்றி எதையுமே சொல்லாத ஒரு ஐந்து பக்க நீளப் பிதற்றலால் யாரும் எதையும் புதிதாக அறியவில்லை. டொமினிக் ஜீவாவின் நீர்த்துப் போன இலக்கிய. அரசியல் பார்வைக்கு அது முக்கியமுமில்லை. தன் இடதுசாரி அடையாளத்தைக் கொஞ்சம் தூக்கிப் பிடித்து வந்த புதுவையார் இப்போது அதை அடக்கி வாசிப்பதற்கும் விடுதலைப் புலிகளுடன் விட்டுப் போன உறவைப் புதுப்பித்து மீளவும் யாழ்ப்பாணத்தில் சிலர் தொடங்கத் துடிக்கும் கம்பனிக்கும் தரகர் ஜீவா வசதி செய்து கொடுத்திருக்கிறாரா? அந்த அனுமான் சாமிக்குத் தான் வெளிச்சம்.

## கம்பனுக்கு மதிப்பிறக்கமா?

கம்பன் கழகத்தின் பேரால் 25 லட்சத்துக்கு வீடு வாங்கப்பட்ட கதை கம்பரை அவமதிப்பதாக என்னிடம் ஒரு பக்தர் சினந்து பேசினார். வெள்ளவத்தையில் 25 லட்சத்துக்கு ஒரு குடிசை தான் கிடைக்கும். கம்பன் கழகம் 1 கோடி 20 லட்சத்துக்கல்லவா சொத்து வாங்கி இருக்கிறது. கம்பர் மன்னிப்பார். கழகம் மன்னிக்க வேண்டும். கம்பன் பெயரால் எதுஎதுவோ எல்லாம் நடக்க வேண்டும்.

## அமைச்சரின் ஆணை!

அமெரிக்காவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை ஊக்குவிக்கக் கூடாது என்று ஈராக்கியத் தூதரை அழைத்து அயல் விவகார அமைச்சர் திரோன் ஃபெர்னான்டோ எச்சரித்துள்ளார். அப்படியானால் இலங்கை அரசியல்வாதிகளை அழைத்துச் சாராயப் பார்ட்டி வைப்பதையும் தனக்கு எதிராகப் பேசுகிறவர்களை மிரட்டுவதையும் உள்நாட்டு அலுவல்களில் தலையிடுவதையும் அமெரிக்கத் தூதரகம் நிறுத்த வேண்டும் என்று அமைச்சர் எப்போது எச்சரிப்பார்?

## தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம்!

பேராசிரியர் சிவத்தம்பிக்கு வரலாறு தெரியுமோ என்னவோ. வரலாற்றைத் திரிக்க மட்டும் தெரியும். திரிபுவாத அரசியலோடு ஒட்டி வளர்ந்த அவரிடமிருந்து தோழர் மாஓ சேதுங் பற்றி நல்லதாக எதையும் கேட்பது கடினம்.

இந்திய விஸ்தரிப்புவாதம் பற்றி இப்போது அவர் நம்புகிறாரோ இல்லையோ. அது அவர் 1989-89 காலத்தில் அனுபவித்தது மட்டுமல்லாமல் பின்பு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக்கு அழையா விருந்தினரைப்போல் அனுபவித்துங் கூட.

இப்போது ஜே.வி.பி. ஒரு காலத்தில் 'மா ஓ வாதிகள்' என்று கருதப்பட்டதாக ஆங்கிலத்தில் அவர் எழுதி வரும் பந்தியில் குறிப்பிட்டுள்ளார். இந்திய விஸ்தரிப்புவாதம் என்று தோழர் சண் சொன்னதைத் திரிந்து விஜே வீர மலையக மக்களுக்கு எதிராகப் பாவித்தது . பற்றிப் பேராசிரியர் அறியமாட்டார் என்றால் எதுவுமே பேசாதிருப்பது சிறப்பு.

தோழர் மா ஓவுக்கு எதிராக கிம் இல் சுங் படிமம் ஒன்றைக் கட்டியெழுப்ப வடகொரியத் தூதரகத்துக்கு சோவியத் தூண்டுதல் இருந்ததும் வடகொரியத் தூதரகத்தை ஜே.வி.பி. பாவித்து வடகொரியாவைத் தொந்தரவில் மாட்டி விட்டதும் பேராசிரியருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஜே.வி.பி.க்கு அன்றைய சீனாவுடனான பகைமையும் அவர் அறியாத ஒன்றாக இருக்கலாம். அவர்கள் சே கெவாரா வாதிகள் என்றுதான் அழைக்கப்பட்டார்கள் என்பது கூடவா பேராசிரியருக்குத் தெரியாது.

பேராசிரியர் சிவத்தம்பி வரலாற்று அறிஞரல்ல. அது ஒரு குறைபாடுமல்ல. ஆனால் தெரியாத விடயம் பற்றித் தெரிந்த மாதிரி எழுதுவது ஆபத்து. ஆனால் மனமறியப் பொய்யைச் சொல்லும் போது பொருத்தும்படி சொல்லவாவது. கொஞ்சம் விசாரிப்பது நல்லதுதானே!

## குற்றமுள்ள நெஞ்சுகள்

யாழ்ப்பாண நூலகத் திறப்புவிழா விடயத்தில் சாதியக் கண்ணோட்டத்தில் நடந்து கொண்டவர்கள் சிலருக்கு அது பற்றிப் பிறர் சுட்டிக் காட்டியதுதான் பிரச்சினையாகத் தெரிகிறது.

நமது பிரச்சனை ஆனந்த சங்கரியார் சாதிய எதிர்ப்புப் போராளியா இல்லையா என்பதல்ல. மேயர் கந்தையன் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதியா என்பதுமல்ல. தாம் வேண்டிய ஒரு கருமத்தைச் சாதிப்பதற்காக வேளாள மேட்டுக்குடிகளது சாதித் தடிப்பைப் பயன்படுத்தியது உண்மையா இல்லையா என்பது ஒரு கேள்வி. நூலகம் திறக்கப்படாமல் நடந்த சில சண்டித்தனங்கள் சாதி வெறியை வெளிப்படுத்தியனவா. இல்லையா என்பது இன்னொரு கேள்வி. 'சாதி ஒழிந்து விட்டது. எனவே சாதிப் பிரச்சனை பற்றிப் பேச வேண்டாம் என்று இந்தப் பம்மாத்துக்காரர்கள் சொல்லுவதற்கும் பழைய கதைகளை நினைவூட்ட வேண்டாம் என்று சிங்களப் பேரினவாதிகள் சொல்லுவதற்கும் அதிகம் வேறுபாடு இல்லை. சாதியம் ஒழிந்து விட்டதா இல்லையா என்பதைச் சொல்ல வேண்டியோர் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரே ஒழிய மேட்டுக்குடிகளின் செல்லப் பிள்ளைகளில்லை.

# தமிழர் கூட்ட...

1ம் பக்க தொடர்ச்சி...

பக்கமா என முரண்பாடு. இவற்றின் மத்தியில் தமிழர் கூட்டமைப்பு என்ற பெயரைச் சில ஊடகங்கள் அலங்காரமாக உச்சரித்து வருகின்றன.

இவ்வேளை ஆனந்தசங்கரியார் பாராளுமன்றத்தில் உப சபாநாயகர் பதவி மீது அக்கறை காட்டி நிற்கிறார். அண்மையில் யாழ் நகரில் பேசும் போது அப்பதவி எதிர்க் கட்சிக்கு உரியது என்றும் பிரதமர் தமக்கு அதை வழங்கக் கேட்டிருப்பதாகவும் சாடை காட்டித் தனது முழு விருப்பத்தை மறைமுகமாகத் தெரிவத்திருக்கிறார். உறுதியான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை எந்தப் பதவியும் வேண்டாம் என்று தமிழ் மானத்துடன் கூற சங்கரியாரின் பதவி மோகம் விடவில்லை. முன்பு மு. சிவசிதம்பரம் அதே பதவியில் இருந்தார் தானே. நான் என்ன குறைவா? என்றே அவர் கேட்டு வருகிறார் என்றும் அறிய முடிகிறது. அன்பார்ந்த தமிழ்ப் பெரும் குடி மக்களே நடப்பவற்றை நன்கு அறியுங்கள். தூரநோக்குடைய தெரிவாள அரசியல் சிந்தனைக்கு தமிழ் மக்கள் வருவதை விட வேறு வழி இல்லை. அரசியலில் ஏமாறத்தக்கதாக இருக்கும் வரையே தமிழ் அரசியல் தலைமைகளின் ஏமாற்று தமிழ் மக்கள் மத்தியில் செல்லுபடியாகும் என்பதை உணர்ந்தால் போதுதானதாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரியார்?

"ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி ஆறு கடந்த பின் நீ யாரோ நான் யாரோ" என்பது அர்த்தமுள்ள முதுமொழி. இது இப்போது தமிழர் கூட்டமைப்புக் கட்சிகளுக்கு நன்கு பொருந்தி உள்ளது. கடந்த தேர்தலின் போது புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற வாசகத்தை வைத்து கூட்டமைப்பினர் வாக்கு வேட்டை நடாத்தினர். காலத்திற்குக் காலம் தமிழர் அரசியல் ஆதிக்கத் தலைமைகள் ஏதாவது "இன்றைய ஸ்பெசல்" ஒன்றை பொதுத் தேர்தலில் தேடிக் கொள்வது வழக்கம். அந்த வகையில் 2001ம் ஆண்டும் பொதுத் தேர்தலில் புலிகள் இயக்கத்துடன் அண்டி நின்றாலே வாக்கு குவியும் என்பது கூட்டமைப்பினருக்கு தெரிந்த விடயம். அதனால் புலிகளே ஏகப் பிரதிநிதிகள் என்பதை விஷேடமான முழக்கமாக்கினர். தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு ஒரு வார்த்தையும் கூறவில்லை. அதனால் கூட்டமைப்பினர் அதிர்ந்து போயினர். ஆனார் ஓரிரு தினங்களில் லண்டனில் இருந்து அன்டன் பாலசிங்கம் மாவீரர் தின உரைக்கு விளக்கம் கொடுத்து கூட்டமைப்பிற்கு வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார். தப்பிப் பிழைத்தனர் கூட்டமைப்புத் தம்பிரான்கள்.

இப்போது ஒரு வருடம் சென்ற நிலையில் கூட்டமைப்பினர் நான்கு திக்குப் பாலகர்களாக இருந்து தத்தமது சொந்த அரசியலை நடாத்துகிறார்கள். அண்மையில் ஆனந்தசங்கரியார் தன்னை யாரென்று கூறி இருக்கிறார். வன்னியில் இடம்பெற்ற கூட்டத்திற்குச் செல்லாது தனது தாய் நாடான இந்தியா சென்று திரும்பி இருந்தார். அதன் பின் அவருக்கு ஒரே உசார். விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாகத் தாம் ஒரு போதும் ஏற்கவில்லை என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார். அவரது தேர்தல் பிரசாரங்களைப் பத்திரப்படுத்தி வைத்திருப்போர் பார்த்தால் உண்மை புலப்படும். அது மட்டுமன்றி இந்தியா தாய் நாடு என்றும் சேய்கள் செய்யும் பிழைகளை மன்னித்து சமாதானத்திற்கு இந்தியா உதவ வேண்டும் என்றும் கேட்டுள்ளார். முன்பு ஜெயலலிதாவிற்கு எதிராக எதுவும் செய்ய வேண்டாம் எனவும் வேண்டுகோள் விடுத்தவர் இதே சங்கரியார் தான். ஏற்கனவே இந்தியாவிற்கு சங்கரியார் போன்றவர்களோடு இருந்து வந்த மனக் கொதிப்பு அண்மைய இந்தியப் பயணத்தோடு மறைந்து விட்டது போலும். சங்கரியாரின் பேச்சில் அது தொனிக்கிறது. ஆனந்தசங்கரியார் என்பதை அவரது அண்மைய பேச்சு தெளிவாக்கியிருக்கிறது.

# இந்திய உதவியுடன் பெருங்கப்பல் கட்ட முயற்சி

அண்மையில் இலங்கைக்கு இரண்டு இந்திய எம்.பி.மார் வந்திருந்தனர். ஒருவர் டாக்டர் விஜேய் மல்யா மற்றவர் பீ.ஜே. பாண்டா. டாக்டர் மல்யா இந்திய பாராளுமன்ற பாதுகாப்புக் குழுவின் உறுப்பினருமாவார். இந்த மல்யா யூபி கூட்டுக் கம்பனிகள் தொகுதியின் தலைவருமாவார். இந்தக் கூட்டுக் கம்பனிகளில் இந்தியாவின் மிகப்பெரிய மதுபானத் தயாரிப்பாளர்களான யுனைட்டெட் புறுவறீஸ் லிமிட்டட்டும் ஒன்று என்பது கவனிக்கத்தக்கது.

இந்தியாவின் 'பாதுகாப்பில்' இந்த மதுபான உற்பத்தியாளருக்கு எத்தனை கரிசனை. அந்த நபர் இந்தியப் பாராளுமன்றத்தில் இருப்பதும் ஆச்சரியப்படக் கூடியதுமல்ல.

இந்த நபர் அமைச்சர் ரவி கருணாநாயக்காவுடன் இலங்கைக் கடற்படைக்கு பெரிய கப்பல் கட்டும் முயற்சியில் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார். இலங்கையின் கடற்படையை நவீனமயப்படுத்துவது யாரை யாரிடமிருந்து பாதுகாக்க? எங்கும் எதிலும் இந்திய அமெரிக்க ஆதிக்கப் போட்டி நடக்கிறது. இரையாகிப் போவது இலங்கை மக்களேயாவர்.

# கத்தோலிக்கமும் கத்தரிக்காயும்

ஒன்றை நிராகரிக்க வேண்டுமாயின் கத்தரிக்காயோடு ஒப்பிட்டுக் கூறுவார்கள். அவ்வாறே கத்தோலிக்கமும் கத்தரிக்காயும் என்றவாறு நடந்து கொண்டிருக்கிறார்கள் அமெரிக்க ஆளும் புஷ் நிர்வாகத்தினர். அமெரிக்க மக்கள் உட்பட உலக மக்கள் ஈராக் மீது போர் தொடுக்காதே என்றே உரத்துக் குரல் எழுப்பி வருகிறர்கள். அமெரிக்காவின் பிரதான மதம் கத்தோலிக்கம். அதன் உலகத் தலைவர் பாப்பரசர். ஒன்றுக்குப் பல தடவைகள் ஈராக் மீது போர் தொடுக்க வேண்டாமென்று ஆண்டவர் பெயரால் புஷ் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டார் பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர். ஆனால் கத்தோலிக்கமும் கத்தரிக்காயும், பாப்பரசரும் மண்ணாங்கட்டியும் என்பது போன்றே புஷ்சும் அவரது போர் வெறிக் கூட்டாளிகளும் உதாசீனம் செய்து கொண்டனர். அதே போன்று இஸ்லாம் பற்றி உரத்துக் கூறும் அரபுலக ஆட்சியாளர்கள் ஒரு முஸ்லீம் நாடு தாக்கப்பட்டு வரும் வேளையில் அமெரிக்க விசுவாசம் காட்டி நிற்கிறார்கள். எங்கே இஸ்லாம் மத ஒருமைப்பாடு போய் விட்டது. எனவே முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகளுக்கும் ஆளும் உயர்வர்க்க சக்திகளுக்கும் மதம் ஒரு போர்வை மட்டுமே. சொத்து சுகங்களும் வர்க்க இருப்பும் ஆட்சி அதிகாரமுமே முதன்மையானதாகும். மதம் மக்களை திசை வைத்திருப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி மட்டுமே என்பது தெளிவாகிறது.

# யூ.என்.பியின் வரி மன்னிப்பு?

யூஎன்.பி. அரசு எப்பொழுதுமே பெரு முதலாளிகளின் நலன்களைப் பாதுகாப்பதில் முன்னின்று வந்துள்ளது. அதே சமயம் சாதாரண மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த மானிங்களை உலக வங்கியின் ஆணைப்படி வெட்டிக் குறைத்தும் வந்துள்ளது.

உரத்திற்கான மானியம். வெட்டப்பட்டு மண் எண்ணெய்க்கான மானியம் குறைக்கப்பட்டமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். கோதுமை மாவிற்கான மானியம் தொலைபேசி. மின்சாரம். நீர் என்பனவற்றின் கட்டணங்களை அதிகரிக்கப்பட்டு சாதாரண பாவனையாளர்கள் இம்சிக்கப்படுகின்றனர்.

பெரு முதலாளிகளின் நலனுக்காக அரசு செய்யும் சலுகைகளும். வசதிகளும் உலக வங்கியின் ஆசிர்வாதத்துடனேயே இடம்பெற்று வருகிறது.

அரசாங்கம் மிகப் பாரிய வரி மன்னிப்பு ஒன்றை இப்போது அறிவித்துள்ளது. 2002ம் ஆண்டு மார்ச் மாதம் 31ம் திகதியில் சமர்ப்பிக்கப்பட்ட விபரத் திரட்டில் பகிரங்கப்படுத்தப்பட்ட அல்லது பகிரங்கப்படுத்தும் விபரங்களை இறை வரித் திணைக்களம் ஏற்றுக் கொள்ளும். குறித்த திகதியில் இறை வரித் திணைக்களம் அனுப்பியிருந்த மதிப்பீட்டு அறிவித்தல்கள் மீளப் பெற்றுக் கொள்ளப் படும். ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்படும்.

இந்தவருடம் யூன் 30ம் திகதிக்கு முன் எந்த நபராவது வெளிப்படுத்தும் விபரங்களை இறை வரித் திணைக்களம் ஏற்றுக் கொள்ளும். இந்தக் கால எல்லைக்குள் எவர் மீதும் வழக்குத் தாக்கல் செய்யப்பட மாட்டாது. ஒருவர் எவ்வளவு தொகைப் பணத்தையும் வெளியிடலாம். அது எவ்வாறு பெறப்பட்டது என்று இறை வரித் திணைக்களம் விளக்கம் கேட்கமாட்டாது. எனவே பல பிரமுகர்கள் முறைகேடாகச் சம்பாதித்த கறுப்புப் பணத்தை யூன் 30க்கு முன் வெளிப்படுத்தி அதைச் சட்ட ரீதியான சம்பாத்தியமாக அரசு ஏற்றுக் கொள்ளும். ஐக்கிய தேசியக் கட்சி யாருடைய நலன்களையும் தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்கிறது என்பதை மக்கள் புரிந்து கொண்டால் போதுமானதாகும்.

# இப்படியும் ஒரு விளம்பரம்

தற்போது திரைப்பட அரங்குகளில் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்ற வகையிலான பாலியல் வெறியைத் தூண்டும் படங்கள் காண்பிக்கப்படுகின்றன. அப்படங்கள் பற்றிய போஸ்ரர்கள். கட் அவுட்டுகள் ஆபாசமானவை. அதே ஆபாச படங்களுடன் பத்திரிகைகளிலும் விளம்பரங்கள் வெளிவருவதுண்டு.

அண்மையில் ஒரு திரைப்பட கதாநாயகிக்கு வித்தியாசமான அறிமுகம் கொடுக்கப்பட்டு விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. 'அண்மையில் விபச்சார வழக்கொன்றில் கைது செய்யப்பட்ட.......... என்ற நடிகை நடித்த படம்' என்று அவ்விளம்பரத்தில் இருந்தது.

அவ்விளம்பரம் ஒரு தமிழ் தினசரியில் வெளியாகி இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சாதாரண விளம்பரங்களுக்குத் துருவித் துருவி விசாரிப்பதை வழக்கமாகக் கொண்ட அந்த தமிழ் பத்திரிகை இவ்வாறான விளம்பரத்தை எவ்வாறு, எந்த பத்திரிகா தர்மத்துடன் பிரசுரித்தது என்பது தெரியாது.

'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்பதுடன் ஆபாச படங்களும் பத்திரிகை விளம்பரங்களில் வெளியாவதுடன் காலம் போய் அதில் நடிக்கும் நடிகைகள் விபச்சாரம் செய்பவர்கள் என்றும் விளம்பரம் செய்யப்படுகின்ற காலம் வந்துவிட்டது.

அந்தளவுக்கு பாலியல் உணர்ச்சிகளை கேவலமான கடைச்சரக்காக்கி விற்பனை செய்கின்ற படங்கள் உட்பட மோசமான நலிவு பண்பாடுகளிலிருந்து நாட்டு மக்களைக் குறிப்பாக சிறுவர்-சிறுமியர்களையும், இளைஞர்-யுவதிகளையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேள்டும்.

அந்த நலிவுப் பண்பாடுகளைத் தோற்கடிக்கக் கூடிய புதிய பண்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேள்டும்.

# நவீன கருவிகள் தேவையாம்

ஆர்ப்பாட்ட ஊர்வலங்களின் போது அவற்றைத் தடுப்பதற்குத் தேவ்வயான நவீன உபகரணங்கள் தம்மிடம் இல்லையென உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா திருவாய் மலர்ந்துள்ளார். முன்னைய அரசுக்கெதிராக இன்றைய ஆட்சியாளர்கள் ஆர்ப்பாட்டங்கள் செய்த போது பாதுகாப்புப் படையினர் மூரக்கத்தனமாக நடந்து கொண்டதாகப் பிரச்சாரம் செய்தவர்களுள் இந்த அமரதுங்காவும் ஒருவர்.

அவர் இன்று கூறுவது என்ன?

"சன்டே லீடருக்கு" அளித்த பேட்டியொன்றில் அரசாங்கத்திடம் ஆர்ப்பாட்டங்களைத் தடுப்பதற்கு வேண்டிய ஆயுதங்கள் நவீன கருவிகள் இல்லையென்றும் மற்ற நாடுகளில் அவை இருக்கின்றன என்றும் தெரிவித்தார். அது மட்டுமல்ல ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்குத் தேவையான நவீன கருவிகளைக் கொள்வனவு செய்யக் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் விரைவில் அவை கொள்வனவு செய்யப்படுமென்றும் தெரிவித்தார்.

அம்மா ஆண்டால் என்ன? ஐயா வந்தால் என்ன? அரசு என்பது அடக்குமுறை இயந்திரம் என்பதும், ஜனநாயகம் என்பது அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும் வசதி பெற்ற உயர் வர்க்கத்தினருக்கும் மட்டுமே என்பதை இதன் மூலம் மக்கள் நடைமுறையில் தெரிந்து கொள்கிறார்கள்.

# திருச்சிற்றம்பலம்!

யாழ் நூலகத்தைத் திறக்க விடாதது பற்றி விசாரிக்கச் சென்ற பத்திரிகையாளர்களிடம் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் சிற்றம்பலம் கரையார் சமூகத்தவரான பிரபாகரனைத் தேசியத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கும் எம்மிடையே சாதிப் பிரச்சனை இல்லை என்று (30.03.2003 ஞாயிறு தினக்குரலில்) சொல்லியிருக்கிறார். பேராசிரியர் எப்பொழுது தொடக்கம் இதனை ஏற்றார் என்பதுதான் கேள்விக்குரியது. அது இருக்க, யாழ்ப்பாணத்தில் சாதி ஒடுக்குமுறை இல்லை என்று இவர் சப்பைக்கட்டுக் கட்டுவதன் நோக்கம் என்ன?

தமிழையும் அரசகருமமொழியாக ஏற்றுக் கொண்ட எம்மிடையே இனவாதம் இல்லை என்று சிங்களப் பேராசிரியர் எவரும் சொன்னால் நாம் ஏற்போமா?

ஒரு தலித்தையும், முஸ்லிமையும் சனாதிபதியாக ஏற்றுக் கொண்டுள்ள இந்தியாவில் சாதிவெறியும் இந்து மதவெறியும் இல்லை என்போமா? ஒரு பெண் சனாதிபதியாக உள்ள இந்த நாட்டில் பெண் ஒடுக்குமுறை இல்லை, பெண்கள் சமமாக நடத்தப்படுகிறார்கள் என்போமா?

அதிலும் முக்கியமாக, பல்கலைக்கழகப் பேராசிரியர் எவரும் சொன்னால் எதுவும் உண்மையாகிவிடுமா? உண்மைகளை உண்மையாகக் காண்பதே தமிழர்களின் உண்மையான விடுதலைக்கு வழிவகுக்கும்.

# தொலைபேசிக் கட்டணம் 250%

இலங்கையில் லாபத்தின் மேல் லாபம் குவிக்கும் நிறுவனம் சிறிலங்கா ரெலிகொம் ஆகும். அந்த நிறுவனத்தின் பங்குகள் அண்மையில் விற்கப்பட்ட வேளை பெரும் போட்டி நிலவியது. அதன் தலைவராக வந்துள்ளவர் இலங்கை கிறிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் சுமதிபாலா என்பராகும். தற்போதைய நிர்வாகம் தொலைபேசிக் கட்டணங்களை 250%த்தால் அதிகரிப்புச் செய்ய அரசாங்கத்திடம் விண்ணப்பித்துள்ளது.

பல நாடுகளில் உள்ளூர் தொலைபேசி அழைப்புகளுக்கு கட்டணம் அறவிடப் படுவதில்லை. ஆனால் ரெலிகொம் நிர்வாகம் சர்வதேச அழைப்புகளுக்கு கட்டணத்தைக் குறைத்து உள்;ர் அழைப்புகளுக்கு கட்டண அதிகரிப்பைச் செய்ய உத்தேசிக்கிறது. குறைந்த அலகுகளைப் பாவிப்பவர்களின் கட்டணத்தையும் கூட்டிக் கொள்ள நிற்கிறது. இதன் மூலம் பெரும் வர்த்தகர்கள், வியாபாரிகள், பல்தேசிய நிறுவனங்கள் அதன் நிர்வாகிகளுக்கு தொலைபேசிச் சலுகை வழங்கப்படுகிறது. வீட்டுப் பாவனையாளர்களின் மாதாந்த வாடகையும் உயர்த்தப்படுகிறது.

யூஎன்.பி. ஆட்சியில் வரி மன்னிப்பு, வரிக் குறைப்புச் சலுகை உட்பட தொலைபேசிக் கட்டணச் சலுகையும் வசதி, வாய்ப்புப் படைத்த உயர் வர்க்கத்தினருக்கே என்பது நடைமுறையில் காண முடிகின்றது. இதே போன்று இன்னும் எத்தனையோ விடயங்கள் யூஎன்.பி. யால் மக்கள் மீது சுமைகள் சுமத்தப்பட உள்ளன.

**வடக்கு கிழக்கில்**

1ம் பக்க தொடர்ச்சி.

அங்கிருக்கின்ற சிங்கள மக்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப பட வேண்டும்.

மலையகத் தமிழ் மக்கள் செறிவாக வாழ்கின்ற பகுதியில் அவர்களின் சுயாட்சியை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று வடக்கு கிழகிற்கு வெளயில் வாழும் முஸ்லிம் மக்களினதும். தமிழ் மக்களினதும் பாதுகாப்பும் சுயாட்சியும் உறுதி செய்யப்பட வேண்டும். அனைத்து தேசிய இனங்களும் மத்திய அரச அதிகாரத்தில் பங்கெடுக்கவும். அவற்றுக்கு மத்திய அரசில் உரிய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மேற்படி விடயங்களை புதிய-ஜனநாயகக் கட்சி பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் கவனத்திற்கு கொண்டு சென்றது. கடந்த 27ம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது புதிய-ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா மேற்படி விடயங்களை பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

அவ்விடயங்களை கவனத்தில் கொள்வதாக தெரிவித்த பிரதமர் தற்போதைய சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க சமாதானத்திற்காக தொடர்ந்து உழைத்து வருகின்ற இடதுசாரிக் கட்சிகளும். இடதுசாரி தொழிற்சங்கங்களும் ஐ.தே.மு. அரசாங்கத்திற்கும் அவைகளுக்கு மிருக்கும் அரசியல் முரண்பாடுகளுக்கு அப்பால் தமக்கு அதரவு தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அரசாங்கத்தின் சமாதான முன்னெடுப்புகள் ஆரம்ப நிலையிலேயே இன்னுமிருக்கின்றன. அவற்றை விரைவாகவும். அர்த்தமுள்ளதாகவும் முன்னெடுக்க சமாதானத்திற்கு ஆதரவான சக்திகள் அனைத்தும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இடதுசாரி அமைப்புகள் ஐ.தே.மு. அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதில் கொள்கை ரீதியான முரண்பாடுகள் இருக்கலாம். ஆனால் "அரசாங்கத்திற்கு அப்பால் எல்லா சக்திகளும் சுதந்திரமாக இயங்கக் கூடிய வியூகத்தை அமைத்து செயற்படலாம். இனவாதிகள், யுத்தவாதிகள். சமாதான விரோதிகள் ஆகியோரை தோற்கடிக்க இடதுசாரி அமைப்புகள் தமக்கு ஆதரவு வேண்டும்". என்றும் கேட்டுக் கொண்டார்.

"யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி அவரிடம் கேட்டபோது தனது அரசாங்கம் யுத்தம் செய்யப்போவதில்லை என்றும் பேச்சுவார்த்தையின் மூலமே இனப்பிரச்சினையை தீர்ப்பதில் உறுதியாக இருப்பதாகக் கூறினார். அத்துடன் விடுதலைப் புலிகள் இயக்கமும் இனி யுத்தத்தில் ஈடுபடாது என்று நம்புவதாகவும். அவர்கள் யுத்தத்தை தொடங்குவதாயின் கப்பல் தாக்கப்பட்ட போதும். மானிப்பாய். குச்சைவெளி சம்பவங்களை அடுத்தும் யுத்தத்தை தொடங்கியிருக்கலாம். அவர்கள் அச்சந்தர்ப்பங்களிலும் யுத்தத்திற்கு திரும்பி செல்லாதபடியால் மீண்டும் யுத்தம் செய்யமாட்டார்கள் என்று நம்புவதாகவும் தெரிவித்தார்.

இங்கு சுட்டிக்காட்டப்பட்டது மட்டுமன்றி சர்வதேச சமூகமும் எமது சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம் போதாது என்றே சுட்டிக் காட்டியுள்ளது. அவற்றை முன்னேற்றமடையச் செய்ய சகலரின் ஒத்துழைப்பும் அவசியம் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# தாய்லாந்து முதல் யப்பான் வரை ஊர்ந்து சென்ற சமாதான யாத்திரை

சிற்சில மீறல் சம்பவங்கள் நடைபெற்ற போதும் யுத்த நிறுத்தம் ஒரு வருட காலத்திற்கு மேலாக நீடிக்கிறது. தாய்லாந்து. ஒஸ்லோ. யப்பான் என்று பேச்சுவார்த்தைகள் நீண்டு கொண்டு போகின்றன. தாய்லாந்து முதல் யப்பான் வரையும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பற்றி மதிப்பிடுவதும். அதன் மூலம் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டம் கண்டுள்ள வளர்ச்சி பற்றியும் விளங்கிக் கொள்வது நல்லது.

வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்காக அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் மனித உரிமைகள். ஜனநாயகம் என்பதற்கான உத்தரவாதம் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களாகும். இவை ஒரு தரப்பிற்கு மட்டுமன்றி இரண்டு தரப்பிற்கும் பொதுவானதாகும்.

இலங்கை இராணுவத்தினரின் அதி பாதுகாப்பு வலயப் பிர்தேசங்களை விட ஏனைய இடங்களுக்கு (பல வித மட்டுப்பாடுகளுடனும் அசௌகரியங்களுடனும் கூடிய) போக்குவரத்து அனுமதிக்கப்பட்டுள்ளது.



யுத்தத்தினால் அழிக்கப்பட்ட வடக்கு கிழக்கை மீண்டும் கட்டியெழுப்ப இடம் பெயர்ந்த மக்களை அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீண்டும் குடியேறவும், சுதந்திரமாக நாளாந்த நடவடிக்கையில் ஈடுபடவும் அனுமதிக்க வேண்டும். யாழ் குடாநாட்டில் பெரும்பகுதி அதி பாதுகாப்பு வலயமாக இருக்கிறது. அதில் மக்கள் மீண்டும் குடியேற அனுமதிக்கப் படவில்லை. அதே போன்று வடபகுதியில் பல இடங்கள் அதி பாதுகாப்பு வலயமாக இருக்கின்றன.

ஐ.நா.சபைக்கு கீழியங்கும் பல நிறுவனங்கள் வடக்கு கிழக்கில் மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட தயாராக இருக்கின்றன. ஆனால் இதுவரையான பேச்சுவார்த்தைகளில் அதி பாதுகாப்பு வலயப் பிரச்சினை தீர்க்கபடாமலே இருப்பதால் மீளக் குடியேற்றம் என்பது கைவிடப்பட்டதாக இருக்கிறது.

அதி பாதுகாப்பு வலயப் பகுதியில் தற்போதைக்கு மீள் குடியேற்றங்களைச் செய்ய முடியாது என்பது இலங்கை இராணுவத்தின் நிலைப்பாடாகும். அது பற்றி விபரமான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி இந்திய இராணுவ நிபுணர் சதீஸ் நம்பியாரை இலங்கை அரசாங்கம் கேட்டிருந்தது. அவர் இங்கு வந்து நிலைமைகளை அறிவதற்கு முன்பே 'குடியேற்றம் சாத்தியமில்லை' என்பதற்கான காரணங்களையே வெளிப்படுத்தி வந்தார். பின்னர் இங்கு வந்து நிலைமைகளை அவதானித்துச் சென்றார். அவரது அறிக்கைக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அதி பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்கள் மீள் குடியேற்றுவது தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று இன்னும் தெரியவில்லை. புலிகள் இயக்கத்தின் தற்போதைய நிலைப்பாடும் தெரியவில்லை. எனவே இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கான முக்கிய விடயங்களில் ஒன்றான மீளக் குடியேற்றம் ஆறப் போடப்பட்டு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவது என்பதுதான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவும். விடுதலைப் புலிகள் இயக்கமும் கொண்டிருந்த ஆரம்ப நிலைப்பாடாகும். தற்போது இருக்கும் மாகாண சபைகள் திட்டத்தின் கீழ் இடைக்கால நிர்வாக ஏற்பாடுகளை ஜனாதிபதியே பிரகடனம் செய்ய வேண்டும். பிரதமரினதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் விருப்பம் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு உத்தியோகபூர்வமாக தெரிவிக்கப்பட வில்லை. (தெரிவித்திருந்தால் அவர் இணங்கியிருப்பார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை) ஜனாதிபதி தடையாக இருக்கக் கூடும் என்ற காரணத்திற்காகவன்றி. காரணங்கள் தெரிவிக்கப்படாமலே 'இடைக்கால நிர்வாகம்' கைவிடப்பட்டது.

உலக வங்கியின் ஏற்பாட்டின் கீழ் 'சிரான்' என்ற நிறுவனத்தினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று அறிவிக்கப்பட்டது. உலக வங்கியின் உப தலைவர் இங்கு வந்து சென்றார் யப்பானிய விசேட தூதுவர் இங்கு வந்து போனார். சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்தால் தான் இலங்கை அரசாங்கத்திற்கு வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும். இல்லாவிட்டால் உதவிகள் கிடைக்கமாட்டாது என்று உலக வங்கியும் யப்பான் உட்படப் பல நாடுகளும் அறிவித்துவிட்டன. வடக்கு கிழக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகள்



மேற்கொள்வதற்கு சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் அவசியம் என்று கூறப்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து எப்படியும் இலங்கைக்கான வெளிநாட்டு உதவிகளை பெற்றுவிட வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிலை. மறுபுறம் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவிகளை பெற்றுவிட வேண்டும் என்பது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிலையாக மாறியுள்ளது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. உதவிகளைத் தருவதாக ஆசை காட்டிக் கொண்டு உலக வங்கி போன்ற நிறுவனங்களும் அமெரிக்கா.

**நமது விஷேட அரசியல் நிருபர்**

யப்பான் போன்ற நாடுகளும் அவற்றின் பின்னே இலங்கை அரசாங்கமும், விடுதலைப் புலிகள் இயக்கமும் இழுபடும் நிலையை ஏற்படுத்தியுள்ளன. சமாதான நடவடிக்கைகளை குழப்பும் நோக்கத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி பிரதமர் ரணிலை மிரட்டி இலங்கையில் இந்தியா அதனது சந்தையையும். பொருளாதார நன்மைகளையும் பெருக்கி வருகிறது.

நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் ஆரம்பந்தொட்டே கதைக்கப்பட்டு வருகின்ற விடயம் யாதெனில் சிறுவர்களை படையில் சேர்க்கக் கூடாது என்ற அம்சத்தை பிரதானப்படுத்திய மனித உரிமைகள். ஜனநாயக உரிமைகள் பற்றிய விடயமாகும். அபிவிருத்தி. மீள் குடியேற்றம். அரசியல் தீர்வு என்பன பற்றி பேசப்படும் என்று பேச்சுவார்த்தைகளுக்கு முன்பும் பின்பும் தெரிவிக்கப்பட்டு வந்தபோதும் அவை இரண்டாம் பட்சமானவையாக்கப்பட்டு அல்லது நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாது யுத்த நிறுத்த மீறல்கள் பற்றியும் ஜனநாயக உரிமைகள். மனித உரிமைகள் போன்றன பற்றி பேசுவதும் அவற்றுக்கு குழுக்கள் அமைப்பதும் என்றவாறு பேச்சுவார்த்தைகள் நீண்டு செல்கின்றன. ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் நடைபெறும் போதும் அதன் முடிவிலும் இலங்கை அரசாங்கம் சிங்கள இனவாதம் மேலோங்காமல் இருப்பதை நோக்காக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் எதனையும் விட்டுக் கொடுக்கவில்லை என்பதை காட்டுவதிலும், விடுதலைப் புலிகள் இலங்கை அரச வியூகத்தை ஏற்றுக் கொண்டே பேசுகிறார்கள் என்பதை காட்டுவதிலுமே அக்கறையாக இருந்து வருகிறது. யப்பான் பேச்சுவார்த்தையின் போதும். அதன் பிறகும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்த கருத்துக்கள் அரசாங்கங்கத்தின் அந்த அக்கறையை மேலும் நிலைநாட்டி வருகிறது.

மறுபுறத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தத்துவாசிரியர் அன்டன்பாலசிங்கம் அரசாங்கத்தைச் சாடுகின்ற மாதிரியான கருத்துக்களை தமிழ் ஊடகங்களுக்குத் தெரிவித்து வருகிறார். அதாவது தமிழ் மக்களை மகிழ்வூட்டும் வகையில் அரசாங்கத்தை விமர்சிப்பதாகவும். கடந்த கால போராட்ட வெற்றிகளை நினைவூட்டுவதாகவும் அவர் கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார். யப்பான் பேச்சுவார்த்தையின் போதும் அதன் பிறகும் அவர் தமிழ் ஊடகங்களுக்குத் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் காரசாரமாக இருந்ததுடன் தமிழ் மக்களை திருப்திப்படுத்தும் நோக்கத்தில் தெரிவிக்கப்பட்டதாகவே இருந்தன. ரணில் அரசாங்கமும் வெளிநாடுகள் குறிப்பாக அமெரிக்கா. யப்பான். நோர்வே போன்ற நாடுகளும் உலக வங்கி போன்ற நிறுவனங்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை அங்கீகரித்துவிட்டதாக தொடர்ந்து கூறிக்கொண்டிருக்க முடியாது என்பது உண்மைதான். அதேபோன்று பேச்சுவார்த்தையில் முக்கிய இலக்குகள் அடையப்படாவிட்டாலும் மக்களுக்கு கூறுவதற்கு எதுவும் இருக்காது என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

யுத்த நிறுத்த மீறல்கள் பற்றி காரசாரமாக கண்டிப்பதும் ஒவ்வொரு சம்பவம் பற்றியும் விசாரணைகளை மேற்கொள்வதும் தற்போதைய இடைவிடாத சம்பவங்களாகிவிட்டன.

சமஷ்டி முறையான அரசியல் தீர்வைக் காண்பதென ரணில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக சில மாதங்களாக தெரிவிக்கப்பட்டு வருகிறது. இலங்கை பாராளுமன்ற



எம்.பிக்கள் உலக நாடுகளில் நிலவும் சமஷ்டி முறைகள் பற்றி அறிவதற்காக சுற்றுலாக்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்களும் சமஷ்டி முறை பற்றிப் படிப்பதற்கு உலக நாடுகளுக்குச் செல்லவிருப்பதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இச்சந்தர்ப்பத்தில் சிங்கள மக்கள் மத்தியில் நடத்தப்பட்ட மதிப்பீடுகளின்படி சமாதானத்திற்கு எதிரான சிங்கள மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகத் தெரிகிறது. அதேபோன்று அன்டன்பாலசிங்கம் தமிழ் மக்களை விழித்து தெரிவித்த

தொடர்ச்சி 11ம் பக்கம்.

# மலையக மக்கள் எழுத்தாளர் சி.வி.வேலுப்பிள்ளையின் சிந்தனை - செயலைத் திரிக்கும் முயற்சியே

- ம. அழகேசன் -

## "தேயிலை தேசம்" - மொழிபெயர்ப்பு

1970இல் சி.வி.வேலுப்பிள்ளை எழுதி வெளியிட்ட BORN TO LABOUR (உழைக்கப் பிறந்தவர்கள்) என்ற நூல் 2003இல் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடப்பட்ட போது 'உழைக்கப் பிறந்தவர்களாகவன்றி' தேயிலை தேசமாக்கப்பட்டுவிட்டது.

'BORN TO LABOUR' என்ற ஆங்கில நூல் மு. சிவலிங்கத்தினால் மொழி பெயர்க்கப்பட்டு துரைவி வெளியீடாக தேயிலை தேசம் என்ற பெயரில் வெளிவந்துள்ளது. அந்நூல் கொழும்பில் வெளியிடப்பட்டது.

அந்நூலுக்கு தேயிலை தேசம் என்று பெயரிடப்பட்டதும். வெளியீட்டு விழாவில் சி.வி.வேலுப்பிள்ளை பற்றி குறிப்பிட்ட சில கருத்துக்களும் அவரை திரித்துக் காட்டுவதற்கான முயற்சிகளாக இருக்கக் கூடாது என்பதற்காக சில கருத்துக்களை முன்வைத்தாக வேண்டியிருக்கிறது.

தெளிவத்தை ஜோசப் அவரது முன்னுரையில் குறிப்பிடுவது போன்று Labour என்பது ஆங்கிலத்தில் மிகவும் தரக் குறைவான சொல்லல்ல. உற்பத்திக்காக மனிதன் வழங்குகின்ற உழைப்பே Labour என்பதாகும். Labour pain (பிரசவ வேதனை) என்பது மறு உற்பத்திக்கான வேதனை என்பதையே குறிக்கும். எனவே பொருள் உற்பத்திக்காக மனிதன் படுகின்ற வேதனையே Labour ஆகும். உற்பத்திக்கான வேதனைப்படுகின்ற மக்களை அப்படியே அழைப்பது பிழையாக இராது.

தேசம் என்பதன் தோற்றம். வளர்ச்சி தற்போதைய வளர்ச்சி என்பவற்றை பார்க்கின்ற போது இலங்கையில் தேயிலைக்கு ஒரு தேசம். றப்பருக்கு ஒரு தேசம். நெல்லுக்கு ஒரு தேசம் என பல தேசங்கள் உருவாக முடியாது. அத்துடன் தேசம் என்பதற்கான ஆங்கிலச் சொல் யேவழைெ. சி.வி. அவரது நூலில் வுநய ஊழரவெசல என்று குறிப்பிட்டிருப்பது தேயிலை தேசமா? Tea என்பது தேயிலை. Country என்பது நாடு. நாட்டுப்புறம் மலை. காடு போன்றவாறு பொருள் கொள்ளப் படலாம். சி.வி. நூலை எழுதிய காலம். அவரின் எண்ணம் என்பன தனியே தேயிலை செய்கை பண்ணப்படும் பகுதியை ஒரு தேசமாக கொள்வதற்கானதாகாது. சி.வி. முழு மலையகத்தை - றப்பர். தேயிலை பெருந்தோட்டங்களையும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களையும் ஒன்றாக பார்த்தவர் என்பதை அவருடைய எழுத்துக்கள் தெளிவுபடுத்தும். அவருடன் நெருங்கி பழகியவர்களுக்கும் நன்றாகப் புரியும்.

எனவே Born to Labour என்ற நூலில் அவர் Tea Country என்று குறிப்பிட்டதற்கு சரியான பொருள் 'தேயிலைக் காடு' என்பதாகும். 'தேயிலைக் காடு' என்பது தோட்டத் தொழிலாளர்களை அகௌரவப்படுத்தும் நோக்கிலன்றி தேயிலை விளையும் பகுதி என்ற நோக்கில் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

1983ம் ஆண்டு இனவன்முறையை அடுத்து அவர் எழுதிய கட்டுரையில் மலையகத் தமிழ் மக்களுக்கு மூன்று தெரிவுகள் இருப்பதாக எழுதியிருந்தார். 1. இங்கு பாதுகாப்பில்லை என்று இந்தியாவுக்குச் சென்று விடுவது. 2. வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று குடியேறுவது. 3. மலையகத்திலே வாழ்ந்து அவர்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்து கொள்வது. இதில் மூன்றாவதையே வரவேற்பதாக





குறிப்பிட்டிருந்தார். ஆனால். மலையகத் தமிழ் மக்களின் தேசம் பற்றி அவர் குறிப்பிடவில்லை. அவர் குறிப்பிடாத ஒன்றை அவர் வாழ்ந்த காலத்துடன் ஒவ்வாத ஒன்றை அதாவது 'தேசம்' என்பதை அவர் எண்ணியிருந்ததாக கூறுவது மிகைப்படுத்தலாகும்.

சி.வி. ஒரு மாக்சிஸ்ட் அல்ல.. அவர் ஒரு மக்கள் எழுத்தாளர். பாராளுமன்ற உறுப்பினர். தொழிற்சங்கவாதி தொழிலாளர்களுக்காக போராடியவர். அவர் ஒரு இனவாதியோ பிரதேசவாதியோ அல்ல. ஒரு இடதுசாரிக்குரிய பண்புகளை கொண்டிருந்தார். சிறிது காலம் செங்கொடிச் சங்கத்தில் இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவராக இருந்த அய்யாத்துரை ம.ம.முன்னணியில் இணைந்து விட்டார் என்பதற்காக தொ.தே.சங்க ஆரம்பத் தலைவர்களின் ஒருவரான சி.வி.யை மலையக மக்கள் முன்னணியின் - செயலாளர் மு.சிவலிங்கம் அவருக்கு வேண்டிவாறெல்லாம் பார்ப்பது பொருந்தாது.

'உழைக்கப் பிறந்தவர்கள்' என்பது மு.சிவலிங்கத்திற்கு பிடிக்காமல் இருக்கலாம். சி.வி.யின் எண்ணம் அதுதான். அதே பெயரில் துரைவி பதிப்பகம் 55 எழுத்தாளர்களின் கதைகளை ஒரு தொகுப்பாக வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தேயிலை தேசம் நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள தெளிவத்தை ஜோசப் தேயிலை தேசத்தை தலித்துகள் உருவாக்கியதாக கூறும் அதேவேளை சி.வி.வேலுப்பிள்ளையை பெரிய வீட்டுப் பிள்ளைகளில் ஒருவராக காட்டுவதிலேயே அதிக விருப்பம் கொண்டுள்ளார். அதனால்தான் இவரை போன்றவர்களுக் கெல்லாம் இப்போது 'உழைப்பு' என்ற சொல்லும் பிடிப்புடையதாக இல்லை. மலையகத் தமிழ் மக்களில் அதிகமானோர் தலித்துகள் என்று கூறுவதில் பெருமைப்படுமளவிற்கு

தொடர்ச்சி 11ம் பக்கம்.

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 10 ஏப்ரல் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 57

எஸ்.47. 3ம் மாடி. கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117. 335844 பாக்ஸ்: 01-473757

# ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கம் பேசுமா?

அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஈராக் மீதான யுத்தத்தை தொடக்கி வைத்து விட்டு மனைவியுடன் வார விடுமுறைகளை சந்தோஷமாக கழிக்கிறார். ஈராக்கிலே மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்; கொல்லப்பட்டுள்ளனர்: அமைதியிழந்து தவிக்கின்றனர்; பாதுகாப்பற்றிருக்கின்றனர்: பல குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் இங்கிலாந்து குழந்தையொன்றை புஷ் கொஞ்சுகின்ற படமொன்று பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதிகளில் மக்கள் உணவின்றி நீரின்றி கஷ்டப்படுகின்றனர். ஈராக் முழுவதும் குண்டு வெடிக்கும் சத்தமும். தீப்பிழம்புகளுமாக இருப்பதை காண முடிகிறது. இது யுத்தத்தினால் ஈராக்கிற்கும் ஈராக் மக்களுக்கும் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலை ஆகும்.

யுத்தம் தொடங்குவதற்கு சில நாட்களுக்கு முன்பிருந்தே அதன் தாக்கம் இலங்கையில் உணரப்பட்டு விட்டது. இலங்கை தேயிலை ஏற்றுமதியில் வீழ்ச்சியடைந்துள்ளது. ஈராக் தான் இலங்கையின் தேயிலையை அதிகமாக வாங்குகிறது. யுத்தம் தொடங்கிய பிறகு இலங்கையின் தேயிலை ஏற்றுமதி 40 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையின் தேயிலையை வாங்குகிற ஏனைய மத்தியகிழக்கு நாடுகளும் தேயிலை வாங்குவதை நிறுத்தியுள்ளன. பெற்றோல் விலையும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மத்தியகிழக்குநாடுகளில் தொழில் புரிந்தவர்கள் திரும்பி வரத் தொடங்கியுள்ளனர். இதனால் வருமானம் இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளில் ஈராக் மீதான அமெரிக்க. பிரிட்டிஷ் போர் தொடங்கப்படுவதற்கு முன்பிருந்து உலகளாவிய மக்கள் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இலங்கையிலும் நடைபெறுகின்றன. இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இனவாத ஜே.வி.பி. போன்ற சக்திகளும் கூட ஈராக் மீதான யுத்தத்தை எதிர்த்து இயக்கங்களை முன்னெடுத்து வருகின்றன.

ஆனால் ஜனாதிபதி சந்திரிகாவோ. பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவோ ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிராக திட்டவட்டமான கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. இலங்கையில் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறிவரும் அவர்கள் ஈராக் மீதான யுத்தத்தை திட்டவட்டமாக எதிர்க்கவில்லை. அந்த யுத்தத்தினால் இலங்கைக்கு ஏற்படப்போகின்ற பொருளாதார பாதிப்புகளை அறிந்திருந்தும் அந்த காரணத்திற்காகவும் கூட அவ்யுத்தத்தை திட்டவட்டமாக எதிர்க்கவில்லை. ஏனெனில் அவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வாய் திறக்க விரும்பவில்லை. புஷ்ஷின் மனதைப் புண்படுத்த விரும்பவில்லை. அந்தளவிற்கு அவர்களின் ஏகாதிபத்திய விசுவாசம் ஆழமானது.

ஏற்கனவே நடைபெற்ற குவைத்-ஈராக் யுத்தத்தினால் தொழிலிழந்து நாடு திரும்பியவர்கள் அனைவருக்கும் இன்னும் நட்டஈடு கொடுத்து முடிக்கப்படவில்லை. நட்டஈடாக இன்னும் முழுத் தொகையும் இலங்கைக்கு வழங்கி முடிக்கப்படவில்லை. வழங்கப்பட்ட பணத்தொகையை இன்னும் உரியவர்களுக்கு இலங்கை அரசாங்கம் கொடுத்து முடிக்கவில்லை. ஈராக் மீதான யுத்தம் நீடிக்குமாக இருந்தால் மத்தியகிழக்குநாடுகளுக்கு வேலைக்காக சென்றிருக்கும் இலங்கையர்களில் அதிகமானோர் வேலையற்ற நிலையில் இலங்கை திரும்ப வேண்டியிருக்கும். இதனால் அவர்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் பெரும் பாதிப்பு ஏற்படும்.

மத்தியகிழக்குநாடுகளிலிருந்து அதிக விலைக்கு எரிபொருளை இறக்க வேண்டிய நிலை ஏற்படும் அல்லது இறக்க முடியாத நிலை ஏற்படும். இதனால் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர்வதுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் அதிகரிக்கலாம். தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சியால் இலங்கைக்கான வருமானமும் குறைவடையலாம்.

ஏற்கனவே உள்நாட்டு சிவில் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார சிக்கலினால் இலங்கை மக்களின் வாழ்க்கைச் செலவு என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ளது. ஈராக் மீதான யுத்தத்தினால் ஏற்படப்போகின்ற விளைவால் மேலும் பாதிப்புகளும் ஏற்படலாம். மக்கள் மேலும் பொருளாதார நெருக்கடிக்குள்ளாகலாம்.

இவை இலங்கை மக்களுக்கு ஏற்படப்போகின்ற பாதிப்புகள். அந்த அடிப்படையில் அவ்யுத்தத்தை எதிர்ப்பது என்பது ஒரு வித நியாயமாகும். அத்துடன் மக்களுக்கும், அவர்களது உடமைகளுக்கும் ஏற்படும் பாதிப்புகளினால் அவ்யுத்தம் எதிர்க்கப்பட வேண்டும் என்பது இன்னொரு வகையான நியாயமாகும். சுயாதிபத்தியமுள்ள, சுதந்திரமான நாடொன்றினுள் அந்நியப் படைகள் நுழைவதையும் அந்நாட்டை ஆக்கிரமிப்பதையும். அந்நாட்டு மக்களையும், வளங்களையும் அழிப்பதையும் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த வகையிலும் ஈராக் மீதான அமெரிக்க-பிரிட்டிஷ் யுத்தம் எதிர்க்கப்பட வேண்டும்.

ஈராக்கில் பாரிய அழிவுகளை ஏற்படுத்தக்கூடிய ஆயுதங்கள் இருப்பதாக கூறிக்கொண்டே யுத்தம் தொடங்கப்பட்டது. தற்போது ஈராக் தலைவர் சதாம் ஹூசைனை கைது செய்வது அல்லது அழிப்பது என்பதுவே யுத்தத்தின் இலக்காகிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் யுத்தத்திற்கு சம்மதம் கிடைக்கவில்லை. றஷியா. பிரான்ஸ். ஜேர்மன். சீனா போன்ற நாடுகள் எதிர்ப்பு தெரிவித்த போதும் யுத்தத்தை புஷ்ஷும் பிளயரும் தொடங்கிவிட்டனர்.

இலங்கை மக்கள் தொடர்ச்சியாக யுத்த எதிர்ப்பு இயக்கங்களை முன்னெடுப்பதன் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மீது அழுத்தங்களை ஏற்படுத்தி அதனை ஈராக் மீதான யுத்தத்திற்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்க நிர்ப்பந்திக்க முடியும். இவ்வாறு உலகநாட்டு மக்களும். அரசாங்கங்களும் யுத்த எதிர்ப்பு நிலைப்பாட்டை முன்னெடுக்கும் போது யுத்தத்தை நிறுத்த வேண்டிவரும். அமெரிக்க ஏகாதிபத்தியமும். பிரிட்டிஷ் அரசாங்கமும் யுத்தத்தில் தோல்வியை தழுவுவதற்கான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டங்களும் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஈராக் போர் ஈராக் மக்களையும் நாட்டையும் மட்டுமன்றி மூன்றாம் உலகையும் நம்மையும் கடுமையாகப் பாதிக்கும் என்பதால் அதற்கு எதிராக நிற்பது அவசியம்.

- ஆசிரியர் குழு -

# ஏகாதிபத்திய உலகமயமாதலும் தேசியவாதப் போராட்டங்களும்

வெகுஜனன்

உலகின் இன்றைய முதல் தர ஏகாதிபத்தியம் அமெரிக்கா. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்பு இந்நிலை நோக்கி அமெரிக்கா தன்னை வளர்த்துக் கொண்டது. அவ்வாறு வளர்வதற்கு அதன் முன்பாக இருந்த மிகப்பெரும் தடை சோஷலிச நாடுகளும் சோஷலிச முகாமும் தான். முதலாளித்துவ ஏகாதிபத்திய அமைப்பு முறைக்கு ஒரே மாற்று அமைப்பு முறை சோஷலிசம் என்பது உலகின் முன் வேகமாக வளர்ச்சி கண்டிருந்தமையை முறியடித்துக்கொள்ள அமெரிக்கா பல நூறு வழிகளில் முயன்று கொண்டது.

இம் முயற்சிகளில் அமெரிக்கா வெற்றி பெற்றுக் கொண்டது. சோஷலிச நாடுகளையும் அவற்றுக்குத் தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் கட்சிகளையும் உள்ளிருந்தும் புறமிருந்தும் பலவீனப் படுத்தி சீர்குலைத்து இறுதியில் வீழ்ச்சியடைய வைத்துக் கொண்டதில் அமெரிக்காவின் பங்கு பாரியதாகும். சோவியத் யூனியனின்-கிழக்கு ஐரோப்பிய நா்டுகளின் சோஷலிச கட்டமைப்புகள் வீழ்த்தப்பட்டமை அமெரிக்கா அடைந்த வெற்றியாகியது. இந்நிலை மாக்சிசத்திற்கும் சோஷலிசத் திற்கும் தற்காலிகப் பெரும் பின்னடைவை ஏற்படுத்திக் கொண்டது.

இத்தகைய ஒரு சூழலில் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளின் மிகப் பரந்த நிலப்பரப்பிலே வளர்ந்து கொண்டிருந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு சோஷலிச சார்பு நிலைகளையும் விடுதலைக்கான மாக்சிச லெனினிச வழிகாட்டல்களையும் இல்லாதொழிக்க அமெரிக்கா சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தியது. வியட்நாம் யுத்தத்தில் படித்த பாடம் மக்கள் யுத்தத்தில் ஏகாதிபத்தியம் வெற்றிபெற முடியாது என்பதாகும். ஆனால் மாக்சிச லெனினிசக் கட்சிகளை இல்லாது செய்யக்கூடிய திட்டங்களை அது வகுத்துக் கொண்டது.

இதன் அடிப்படையிலே எழுபதுகளின் ஆரம்பத்துடன் மூன்றாம் உலக நாடுகளில் காணப்பட்ட தேசிய முரண் பாடுகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த அமெரிக்காவும் மேற்குலக முதலாளித்துவ நாடுகளும் முன் வந்தன. இன மொழி மதத் தேசியங்கள் தத்தமது நாடுகளின் ஆளும் வர்க்கங்களின் பெரும் தேசிய அல்லது பேரினவாத அகங்காரங்களால் அடக்கப் படும் நிலையில் இருந்து வந்தன. அதாவது சுதந்திரம் என்பதற்கு பிந்திய கால கட்டத்தில் தேச அரசுகளின் அதி கார வர்க்கங்கள் தேசிய சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதில் முன் னின்றன. இவ் இன முரண்பாட்டின் காரணமாக அதனை எதிர்த்து ஆயுதம் தாங்கிய போராட்டங்கள் எழுந்தன.

இத்தகைய தேசியவாதப் போராட்டங் களை ஊக்குவித்து முன் தள்ளுவதற்கு ஏகாதிபத்தியம் இரண்டு வழிமுறை களைப் பயன்படுத்தியது. ஒன்று தேச அரசுகளின் பக்கம் நிற்பதாகக் கூறிக் கொண்டு நிதி. ஆயுதங்கள். ஆலோசனை வழங்கி இன ஒடுக்கு முறைகளை உக்கிரப்படுத்திக்கொள்ள பகிரங்க ஆதரவு வழங்கிக் கொண்டது. இரண்டாவது தேசியவாதப் போராட்டங் களைத் தனக்கான சாதகம் வரும்வரை மறைமுகமாக ஆதரிப்பது போன்று போக்குக்காட்டி சுதந்திர சந்தை ஊடாக ஆயுதங்களைத் தாராளமாக விற்றுக்கொண்டது. தேசியவாதப் போராட்டக் களங்களிலே ஒரே நாட்டின் ஆயுதங்கள் இரு தரப்பிலும் வேண்டியளவு இருந்ததைக் காண இயலுமாயிற்று.

> **தேசியவாதம் ஏகாதிபத்தியத்தை பயன்படுத்தியதா? அல்லது ஏகாத்திபத்தியம் தேசியவாதத்தை பயன்படுத்தியதா? இதுவே நம் அனைவர் முன்னிலையிலும் உள்ள கேள்வியாகும்.**

ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ் இன முரண்பாடு காரணமான யுத்தம். பேச்சு வார்த்தை மூலம் தீர்வுக்கு கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளை எல்லாம் அமெரிக்கா மறைமுகமாக நின்று செயற்பட்டுக் குழப்பிக் கொண்டது. ஏனெனில் அவ் யுத்தத்தின் மறைவில் தனது பல்வேறு நோக்கங்களை ஈடேற்றிக்கொள்ள வேண்டியிருந்தமை யாகும்.

உதாரணத்திற்கு கூறுவதாயின் 1977ம் ஆண்டின் ஜே.ஆர்.-யூ..என்.பி. ஆட்சியின் வருகைக்குப் பின் இன மோதலும் முரண்பாடும் தீவிரப்படுத்தப் பட்டு பேரினவாத ஒடுக்குமுறை ராணுவ மயமாக்கப்பட்டு யுத்தம் விஸ்தரிக்கப்பட்டது. அதேகாலப் பகுதியில் தான் திறந்த தாராள மயம். தனியார் மயம் அரங்கிற்குள் கொண்டுவரப்பட்டு நிலைநிறுத்தப்பட்டது. நாட்டு மக்களின் கவனம் யுத்தத்தின் மீது திசை திருப்பப் பட்டுக் கொண்டிருக்க பல்தேசியக் கொம்பனிகள் நாட்டுக்குள் ஓசையின்றிப் புகுந்துகொள்ள வைக்கப்பட்டது. கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் நடந்திருப்பதை உற்று நோக்கின் யுத்தத்தின் மறைவில் ஏகாதிபத்தியம் உள்ளூர் ஆளும் பெரு முதலாளித்துவ பேரினவாத உயர்வர்க்க சக்திகள் மூலம் சாதித்துக் கொண்டவற்றைக் கண்டு கொள்ளலாம்.

மறுபுறத்திலே பேரினவாத ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டத்தில் தேசியவாத சக்திகள் ஆயுதம் தாங்கி நின்றமையை நிராகரிக்க முடியாது விட்டாலும் தூர நோக்கில் அடிப்படை யான வர்க்கப் போராட்டப் பாதையில் மாக்சிச லெனினிச வழிமுறைகள் மூலம் சமூக மாற்றத்திற்கான விடுதலைப் போராட்டம் முன் செல்வது தடுக்கப் பட்டி ருக்கிறது. மாக்சிசத்தின் மீதும் வர்க்கப் போராட்டத்தின் மேலும் நம்பிக்கை யீனங்களை வளர்க்கும் கருத்தியல் களும் நடைமுறைகளும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் மூலமான பொறிமுறை யாக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய முரண்பாடும் அதன் காரண மான போராட்டம்-யுத்தம் உச்ச நிலையை அடைந்த சூழலில் இன்று அதே ஏகாதிபத்தியமும் மேற்குலக நாடுகளும் யப்பானும் சமாதான தேவதைகளாக வேடமணிந்து எத்த னையோ விளக்கங்கள். பேச்சுக்கள். திட்டங்கள் எனக் கூறி சமாதானம் பற்றிப் பேசுகின்றன. இதன் மர்மமும் பின்னணியும் என்ன?

உண்மையாகவே ஏகாதிபத்திய உலக மயமாக்கலுக்கு இலங்கையின் முழு நிலப்பரப்பும் அதேவேளை யுத்தமற்ற சூழலும் தேவைப்படுகின்றன. தனது இருப்பையும் எதிர்காலத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டுள்ள ஏகாதிபத்தியத்திற்கு இனி தேசியவாதப் போராட்டங்கள் தேவையற்றவை ஆகிக் கொண்டுள்ளன. தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி உரிமைகள் பற்றி ஏகாதி பத்தியத்திற்கு துளியளவும் அக்கறை கிடையாது. எனவே உள்ளக சுயநிர்ணய உரிமை என்ற ஏமாற்றுத் தன சொற்றொடரை வாஷிங்டன் கொள்கை வகுப்பாளர்கள் உச்சரிக் கிறார்கள். அதனைச் சில புத்திஜீவிகள் கல்வியாளர்கள் மூலம் விளம்பரப் படுத்துகிறார்கள்.

அவர்களது நோக்கும் போக்கும் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலை எவ்வித தங்கு தடைகளோ அல்லது எதிர்ப்புக்க ளோ இன்றி முன்னெடுப்பதே ஆகும். அதன் தேவைக்கு ஏற்றவாறே தேசிய வாதப் போராட்டங்களைப் பயன்படுத்தி வந்துள்ளது. ஏகாதிபத்தியத்தை தேசிய வாத சிறு முதலாளித்துவ தலைமைகள் பயன்படுத்தி தமது நோக்கங்களில் வெற்றி பெற்றதா? அல்லது ஏகாதி பத்திய சக்திகள் அத்தலைமை களைத் தமது நோக்கத்திற்கு பயன்படுத்திக் கொண்டதா? என்பதை நடைமுறையில் வெளிவெளியாகக் கண்டு கொள்ள வேண்டிய சந்தர்ப்பம் இன்று தோன்றியுள்ளது. அதனை இன்னும் சிறிது பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டியும் இருக்கிறது.

# மாற்று இடதுசாரி அணிக்கு மற்றொரு முயற்சி!

## ஏழு அம்சத் திட்டம் முன்வைப்பு

1. தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகளை ஆதரிப்பதுடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து அனைத்து தேசிய இனங்களினது அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யும் வகையில் மனித உரிமைகள் வாழ்வதற்கான உரிமை. ஜனநாயகம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பங்கீடும் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்று நிறைவேற்றுவது.

2. வேலையின்மைக்கும் உழைக்கும் மக்களின் துன்பத்திற்கும் காரணமான 'மறுசீரமைப்பு' என்ற பெயரிலான திட்டங்களை எதிர்த்தல்.

3. உலக மக்களுக்கு அழிவுபூர்வமானது என்று நிரூபிக்கப்பட்டுள்ள சர்வதேச நாணய நிறுவனம்/உலக வங்கி ஆகியவற்றின் கொள்கைகளை நிறைவேற்றும் உலகமயமாக்கலை எதிர்த்தல்.

4. கஷ்டப்படுகின்ற மக்களுக்கு நிவாரணம் பெற்றுத் தரக் கூடிய சுற்றுச் சூழலையும் தேசிய நலன்களையும் பாதுகாக்கக் கூடிய சமூக பொருளாதாரத் திட்டத்தை உருவாக்குதல்.

5. இனவாதத்திற்கு எதிராக போராடுவதுடன் பேரினவாத அமைப்புகளுக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்தல்.

6. பெண்களுடைய போராட்டங்களுக்கும். சாதியத்துக்கு எதிரான போராட்டங்கள் உட்பட அனைத்து அடக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் பிரிவுகளினதும் போராட்டங்களுக்கும் ஆதரவு வழங்குவது.

7. எல்லாவித அரசியல் வன்முறைகளையும். குறிப்பாக அரச வன்முறைகளையும் எதிர்ப்பது.

மாற்று இடதுசாரி ஐக்கிய முன்னணியை கட்டி வளர்ப்பதற்கான இன்னொரு முயற்சி எடுக்கப்பட்டு வரகிறது. இது தொடர்பான கலந்துரையாடலொன்று கடந்த மாதம் 22ம் திகதி இரத்மலானையிலுள்ள 'கம் கரு செவன' மண்டபத்தில் நடைபெற்றது. தோழர்கள் வெஸ்லி முத்தையா. திஸ்ஸ அபயசேகர ஆகியோர் அதற்கான அழைப்பை விடுத்திருந்தனர். மேற்படி ஏழு அம்சங்களைக் குறைந்த பட்ச வேலைத்திட்டமாக வைத்து பரந்த இடதுசாரி ஐக்கிய முன்னணியை கட்டியெழுப்புவதற்கான முயற்சியாக அக்கலந்துரையாடல் நடைபெற்றது. கலந்துரையாடலில் பல இடதுசாரி கட்சிகளை சார்ந்தவர்களும். கட்சி சாராத இடதுசாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் தோழர் இ. தம்பையா கலந்துகொண்டு கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் இடதுசாரி ஐக்கியம் உறுதியானதாக கட்டப்பட வேண்டுமென வலியுறுத்தினார்

● ● ● ● ● ●

www.padippakam.com



# ஜே.வி.பி – சி.சு.க. சந்தர்ப்பவாதக் கூட்டணி!

## இனவாதமே அச்சாணி

ஜே.வி.பியுடன் கைகோக்க ஸ்ரீ.ல.சு.கட்சி இலங்கையின் பெரிய இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டணி ஏற்படுத்தியிருக்கிறது. பாராளுமன்ற இடதுசாரிகளின் பதவிமோகம் என்ற பலவீனத்தை ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஸ்தாபகரான பண்டாரநாயக்க அறிந்திருந்தார். அதனாலேயே அவரால் ஈழத்துத் த்தொத்ஸ்கியத்தின் தந்தையான பிலிப் குணவர்த்தனவை இடதுசாரி அரசியலிலிருந்து ஓரங்கட்ட முடிந்தது. பண்டாரநாயக்கவுடன் 1956ல் கூட்டணி அமைத்த பிலிப் பண்டாரநாயக்கவிடமிருந்து விலகிய பின்னால் இன்னும் இன்னும் பேரினவாத வலதுசாரித் திசையில் தான் போக முடிந்தது. அவரது கடைசி நாட்கள் யூஎன்.பி.யின் மடியில் முடிந்தன. அவரது பிள்ளைகள் இன்று இனவாதத்தின்து உரத்த குரல்களாகி விட்டனர்.

பிலிப் போன பாதையில் அடுத்த காலடி வைத்த சமசமாஜக் கட்சியின் என்.எம். பெரேரா – கொல்வின் தலைமை சிரிமா பண்டாரநாயக்கவின் திறமையைக் குறைவாக மதிப்பிட்டுத் தன்னைத் தானே ஏமாற்றியது. இன்று அவர்களது வாரிசுகள் முகவரி இழந்து பொதுசன முன்னணிக்குள் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றனர். கெனமன்–விக்கிரமசிங்க திரிபுவாதிகளின் கதியும் அதுவே ஆகி. சோவியத் யூனியனின் சரிவுக்குப் பிறகு திக்கறுறுத் தடுமாறுகிற உதிரிகளின் கூட்டமாக கம்யூனிஸ்ட் கட்சி என்ற போர்ப்பலகை மட்டுமே தஞ்சமாகி நிற்கின்றனர்.

பாராளுமன்றப் பதவி மோகத்தால் நடந்த இந்த முப்பெருஞ் சீரழிவுகளிலிருந்தும் த்ரொத்ஸ்கிய சமசமாஜப் பாரம்பரியம் எதையுமே கற்கவில்லை என்பதை கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன நமக்கு அண்மையில் உணர்த்தினார். ஒரு பாராளுமன்ற ஆசனத்துக்காக ஒரு ஐக்கிய முன்னணியையே பேரம் பேசுவதற்கு அவருக்கு இயலுமானது.

ஸ்ரீ.ல.சு.கட்சி மூலமே இலங்கையின் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் தமது அழிவைக் கண்டன. எனவே ஜே.வி.பி.க்கும் இவ்வாறு நேரும் என்பது ஒரு கணிப்பு. மறுபுறம் ஜே.வி.பி. ஸ்ரீ.ல.சு.கட்சியைத் தனக்குக் கீழ்ப்படுத்தி விடும் என்று இன்னொரு கணிப்பு. என்ன நடந்தாலும் இந்த இரண்டு கட்சிகளையும் ஒன்றிணைப்பது என்ன என்று கவனிப்போம்.

ஸ்ரீ.ல.சு.கட்சி இலங்கையின் தேசிய முதலாளியத்தின் கட்சி யூஎன்.பி.க்கும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கும் இருந்து வந்த ஒரே வேறுபாடு. யூஎன்.பி. என்றென்றும் ஒளிவு மறைவற்ற ஏகாதிபத்திய சார்பு ஆட்சியாகவே இருந்து வந்தது மட்டுமே. இன்று, இரண்டு கட்சிகட்குமிடையில் நடைமுறையிலான வேறுபாடு இல்லை. எனினும் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்களிடையே ஓரளவு சமூகச் சிந்தனையுள்ள பகுதி வரலாற்றுக் காரணங்கட்காக ஸ்ரீ.ல.சு.கட்சியை ஆதரிப்பதும் முகவரி இழந்த பாராளுமன்ற இடதுசாரிகள் யூஎன்.பி.யிடம் சரணாகதியாகியுள்ளது பற்றியும் நாம் மறக்கலாகாது.

ஜே.வி.பி.யின் முதலாவது தலைவர் விஜேவீர. தோழர் சண்முகதாசனின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியினுள் பிளவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் திரிபுவாதிகளால் அனுப்பப்பட்டவர். தோழர் சண்முகதாசனுக்கு எதிரான அனவாதப் பிரசாரத்தைப் பாவித்தே கட்சியைப் பிளவுபடுத்தினர். அதன் மூலம் இளைஞரணியின் ஒர பகுதியினரைத் தன்னுடன் கொண்டு செல்ல முடிந்தது. திரிபுவாதிகளுடன் இருந்த மஹிந்த விஜேசேகர அவரது உறவினர். அவரும் ஜே.வி.பி. தலைமையில் இருந்தார். யூஎன்.பி.யின் ஆட்சிக் காலத்தில் வேலை பெற்றுப் புதிய ஆட்சியில் வேலை இழந்த இளைஞர்கள் உட்படப் பல்வேறு இளைஞர்களும் ஜே.வி.பி.யில் சேர்ந்தார்கள்.

ஜே.வி.பி.யின் மார்க்சிசம் ஒரு போலி வேடமாகவே இருந்தது. மலையகத் தமிழருக்கு எதிரான துவேஷம் தொடக்கத்திலிருந்தே ஜே.வி.பி.யால் வெளிக்காட்டப்பட்டது. சே கெவாரா பற்றியோ அவரது சர்வதேச நோக்குப் பற்றியோ ஒரு விதமான அறிவும் இல்லாமல் தம்மை சே கெவாரா வாதிகள் என்று அழைத்துக் கொண்ட ஜே.வி.பி.யினரிடம் மார்க்சிச ஆய்வு போலியானது. பாராளுமன்ற இடதுசாரிகள் ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் சரணாகதி பெற்ற நிலையில் ஜே.வி.பி.யால் சிங்கள இளைஞர்களைப் போலி இடதுசாரிக் கோஷங்களை மறைவான இனவாத அரசியலுடன் இணைத்துக் கவர முடிந்தது. ஆனாலும் வெகுசன அரசியலோ. போராட்ட வேலைத் திட்டமோ இல்லாத ஜே.வி.பி.யால் மிகவும் குறைந்த எண்ணிக்கையாக இருந்த அரச படைகளையே எதிர்த்து நிற்க முடியவில்லை. ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமையிலான ஆட்சி. 1971ல் ஜே.வி.பி. கிளர்ச்சியை நசுக்கியது. பத்தாயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.

1977ல் ஜே.வி.பி.யை மீட்டெடுப்பதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் ஜே.ஆர்.ஜயவர்த்தன சார்பாக செயற்பட்ட றொணி டி மெல்லும் தொழிற்சங்கவாதத்தில் மூழ்கிச் சீரழிந்த பாலா தம்பு என்ற த்ரொஸ்கியவாதியுமாவர். ஸ்ரீ.ல.சு.கட்சிக் கூட்டங்களைக் குழப்புவதிலும் இடதுசாரிகளைத் தாக்குவதிலும் ஜே.வி.பி. வன்முறையைப் பாவித்தது. யூஎன்.பி. ஊக்குவிட்புடன் வளர்ந்த ஜே.வி.பி.க்கும் யூஎன்.பிக்கும் 1980 அளவில் முரண்பாடுகள் தோன்றின.

தேசிய இனப்பிரச்சினை முனைப்பற்ற காலத்தில். குறிப்பாக 1983 வன்முறைக்குப் பின் ஜே.வி.பி.யினுள் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு பற்றிய விவாதம் எழுந்தது. தமிழ் மக்களுக்கு ஏதோ வகையான சுயாட்சியை எதிர்த்துப் பேசிய லயனல் போப்பகே அக் கட்சியிலிருந்து விலக்கப்பட்டார். அதன் பின் ஜே.வி.பி.யின் இனவாதம் மேலும் ஓங்கியது. 1987 இந்திய–இலங்கை உடன்படிக்கையின் பின்பு ஜே.வி.பி. இந்திய துவேஷத்தின் மூலம் சிங்கள இனவெறியைக் கிளறிவிட்டது. உடன்படிக்கையை எதிர்ப்பதில் முதலில் ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் காணப்பட்ட உடன்பாடு நிலைக்கவில்லை. சிங்களப் பேரினவாத அரசியலில் ஸ்ரீ.ல.சு. கட்சியை மிஞ்சுவதற்குத் தீர்மானித்த ஜே.வி.பி. இந்திய–இலங்கை உடன்படிக்கை எதிர்ப்பைத் தனது ஏகபோகமாக்க முயன்று அதன் மூலம் ஆட்சியைப் பிடிக்கச் செய்த முயற்சியின் விளைவாக அரை லட்சத்திற்கும் ஒரு லட்சத்துக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் கொல்லப்பட்டனர்.



வலதுசாரி அமுனுகம. அநுராவும் சிகப்பு இனவாதியான ஜே.வி.பி. விமல் வீரவன்ச இனைந்திருக்கும் காட்சி.

இக்கால இடைவெளியில் ஜே.வி.பி.யின் கைகளில் யூ.என்.பி. பிரமுகர்கள் மட்டுமன்றி அப்போது ஸ்ரீ.ல.சு.கட்சியினின்று பிரிந்து இடதுசாரி முனைப்புடைய ஸ்ரீலங்கா மக்கள் கட்சியை உருவாக்கிய சந்திரிகாவின் கணவரான விஜயகுமாரணதுங்க போன்றோரும் சிங்களத் துரோகிகளாகக் கருதப்பட்டுக் கொல்லப்பட்டனர். கலாநிதி விக்கிரமாகு கருணாரத்தினவும் துப்பாக்கிச் சூடு பட்டும் உயிர் பிழைத்த ஒருவர்.

இரண்டு பெரிய முதலாளியக் கட்சிகளதும் போதாமைகளே ஜே.வி.பி. 1990களில் மீளவும் அரசியலில் தலைதூக்க உதவியது. இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் பேரினவாதத்தைப் பயன்படுத்துவதைத் தனது அரசியல் மூலோபாயமாக்கிக் கொண்ட ஜே.வி.பி.. சிஹல உறுமய போன்ற பேரினவாதிகளையும் மீறிய பேரினவாதக் கட்சியாகத் தன்னை 2000வது ஆண்டில் அறிமுகப்படுத்திக் கொண்ட ஜே.வி.பி. தனது இடதுசாரித் தோற்றத்தை வெகு வேகமாகவே களையத் தொடங்கி விட்டது. 2001 தேர்தல் அறிக்கையை சிங்கள பௌத்தத்தில் கண்டிய கொவிகம ஆதிக்கத்தின் தலைமைப் பீடங்களான அஸ்கிரிய. மல்வத்த மத பீடங்களின் மகா நாயக்கர்களிடம் காலில் விழுந்து சமர்ப்பிப்பதன் மூலம் ஜே.வி.பி. தலைமை 30 வருடம் முன்பு தலதா மாளிகைக்கு மலர்கள் கொண்டு சென்ற கொல்வின் ஆர் டி சில்வாவையே மிஞ்சி விட்டது.

இன்றைய ஜே.வி.பி. – பொதுசன முன்னணி (உண்மையில் ஸ்ரீ.ல.சு.க.) உடன்பாடு என்பது ஒரு புறம் ஒன்றை ஒன்று அழிப்பதில் முனைப்பாக இரு தரப்புகளிடையிலான உடன்பாடாகிறது. ஜே.வி.பி. – ஸ்ரீ.ல.சு.க. முரண்பாடு போல என்றுமே பாராளுமன்ற இடதுசாரிகட்கும் ஸ்ரீ.ல.சு.கட்சித் தலைமைக்குமிடையே தனிப்பட்ட குரோதம் இருந்ததில்லை. கொலை முயற்சிகள் நடந்ததில்லை. தேசிய இனப்பிரச்சினையில் ஸ்ரீ.ல.சு.கட்சி இனவாதத்தையும் மீறி நடைமுறை அரசியல் தேவை காரணமாக தமிழ் மக்களுக்கான சுயாட்சியையும் பாரம்பரியப் பிரதேசத்தையும் ஏற்குமாறு நிர்ப்பந்தித்துள்ளது. ஆனால் ஜே.வி.பி. இன்று தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகவே ஏற்காத நிலையை நோக்கி நகர்ந்து வருகிறது.

இந்த உடன்படிக்கைக்கு ஒரே ஒரு நோக்கம் தான் உண்டு. யூஎன்.பி. ஆட்சியைக் கவிழ்த்து அதிகாரத்தைப் பிடிப்பது எப்படி என்பதுதான்.

அதிகாரத்தைப் பிடித்த பிறகு என்ன செய்வது என்பது பற்றிய தெளிவு இரு தரப்பினருக்கும் இல்லை. யூஎன்.பி.யின் பொருளாதாரக் கொள்கையை பொதுசன முன்னணி தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்துள்ளது. ஜே.வி.பி. யுடன் இணைவதால் ஒரு மாற்றுக் கொள்கை உருவாவதற்கான அடையாளமே இல்லை.

2001ம் ஆண்டு ஸ்ரீ.ல.சு.கட்சிக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்க முற்பட்டதையும் அது எப்படிப்பட்ட ஆதரவாக இருந்தது என்பதையும் ஸ்ரீ.ல.சு.க. தலைவர்கள் மறந்து போயிருக்க முடியாது. ஆட்சி கவிழாமல் இருக்கப் பாராளுமன்றத்தில் பத்துப் பேர் கையுயர்த்துவதற்குப் பிரதியாக ஜே.வி.பி.யால் சந்திரிகாவிடம் பல நிபந்தனைகளை விதிக்க முடிந்தது.

இன்றைய ஜே.வி.பி. தலைமை பதவி ருசி கண்ட தலைமை. சொகுசு வாழ்வுக்குப் பழக்கப்பட்ட தலைமை. அதன் நோக்கங்கள் இப்போது பா.உ. பதவிக்கு மேலாக அமைச்சர் பதவிகளையும் இங்கு வைக்கின்றன. இப்போது ஜே.வி.பி. வேண்டுவது அதிகாரப் பகிர்வும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குச் சமமான அதிகாரமுமாகும். இதன் மூலம் பழைய

தொடர்ச்சி 11ம் பக்கம்..

# ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாதம் பேச்சுவார்த்தையால் மறைந்து விடவில்லை!

இலங்கையில் இனவாதத்தை வளர்த்து பேரினவாதமாகவும் ராணுவ ஒடுக்குமுறையாகவும் நடைமுறைப்படுத்தி வந்ததில் ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல. ஆனால் இவ் இரு கட்சிகளும் பேரினவாதத்தை நடைமுறைப்படுத்துவதில் வெவ்வேறு வழி முறைகளைக் காலத்திற்குக் காலம் கைக் கொண்டு வந்துள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சி மிக மோசமான பேரினவாதத்தை நடைமுறைப்படுத்திய வேளைகளில் தமிழ் மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகள் அவற்றை மௌனம் காத்து உள்ளூர ஆதரித்து வந்த நடைமுறையைக் காணலாம். ஆனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பேரினவாதத்தை நடைமுறைப்படுத்தும் வேளைகளில் ஐயோ குய்யோ என ஓலம் வைப்பார்கள். காரணம் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உயர் வர்க்க பந்த பாசமாகும். இந்த விடயத்தில் தமிழ்த் தலைமைகளும் விதி விலக்கல்ல. அவர்களது நெருக்கமும் விசுவாசமும் எப்பொழுதும் ஐ.தே. கட்சியின் பக்கம் தான். இதனாலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தமது ஆட்சிக் காலத்தில் உதிரியான தமிழ்ப் பிரமுகர்களைத் தன்னுடன் இணைத்து வைத்தக் கொள்வதை நடைமுறையாக்கி வந்துள்ளது. இதன் வழியிலேயே அல்பிரட் துரையப்பா முதல் இன்றைய லக்ஷ்மக் கதிர்காமர் வரை இருந்து வந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி எந்தளவிற்கு பேரினவாத நிலைப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் ஜி.ஜி. பொன்னம்பலம். எஸ். தொண்டமான். மு. திருச்செல்வம். ஆறுமுகம் தொண்டமான். பி. சந்திரசேகரன் வரை அமைச்சர்களாக இருந்து தமது வர்க்க விசுவாசத்தை தெரிவித்து தங்களையும் வளர்த்து வந்துள்ளனர்.

இங்கே உள்ள ஒரு வரலாற்று முரண் சுவை என்னவெனில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்த தமிழ்த் தலைவர்கள் போற்றப்பட்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தவர்கள் துரோகிகளாகவும் காட்டப்பட்டு வந்தமையாகும்.

இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியும். ஜே.வி.பி.யும் இணைந்து பேரினவாதப் பிரச்சாரப் புயல் கிளப்புவதில் முன் நிற்கின்றன. அதிகாரப் பசி மட்டுமன்றி அடிப்படையில் பேரினவாத வெறித்தனம் அவர்களிடையே படிந்து காணப்படுகின்றது. அதனாலேயே மீண்டும் ஒரு யுத்தம் வர வேண்டும். புலிகள் இயக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் எனக் கூக்குரல் இடுகின்றனர். இவற்றை இன்று பகிரங்கமாகக் காண முடிகின்றது.

ஆனால் ரணில் விக்கிரமசிங்காவின் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் புலிகளுடன் புரிந்துணர்வுக்கு வந்து பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதால் அதனிடம் மிகக் கெட்டியாகப் படிந்திருந்து வந்த பேரினவாதம் அற்றுப் போய் விடவில்லை என்பது நினைவில் இருத்த வேண்டியதாகும். நாட்டின் பொருளாதார. அரசியல். சமூகச் சூழலும் அதேவேளை சர்வதேச நிலைமைகளும் ஏற்படுத்திய ஒரு நிர்ப்பந்த சூழலிலேயே ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுவார்த்தைக்குச் சென்றதே தவிர முற்று முழுதான பாவ மன்னிப்பு கேட்டு ஞானஸ்தானம் செய்து பேரினவாதத்தைக் களைந்து விட்டு பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லவில்லை என்பது கண்டு கொள்ளப்பட வேண்டியதாகும்.

அ. பூபதி

இவ்வாறு இருப்பதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுக்கும் பேச்சுவார்த்தை எவ்வகையிலும் நிராகரிக்கப்பட வேண்டியதில்லை. அரசியல் தீர்வு முயற்சிகள் புறம் தள்ளப்பட வேண்டியதுமில்லை. ஆனால் அந்தக் கட்சியின் வர்க்க இனத்துவ இயல்பும் நிலைப்பாடும் தெளிவுடன் நோக்கப்படல் வேண்டும். அதன் பேரினவாதப் போக்குகளையோ அன்றி செயற்பாடுகளையோ கண்டும் காணாதது போன்று இருந்து விடக் கூடாது. தமிழ்த் தலைமைகள் மற்றும் தமிழ் மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகள் ஐக்கிய தேசியக் கட்சி யின் பேரினவாதத்திற்கு புனுகு தடவி நிற்க முற்படக் கூடாது. பேரினவாதம் எங்கிருந்து எந்தக் கட்சியின் ஊடாக வெளிவந்தாலும் கடூரமாக அதனை எதிர்த்து நிற்றல் வேண்டும்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சர்கள் பி.தயாரத்தினா. ராஜித சேனரத்தினா ஆகியோர் பகிரங்கமாகவே சிறுபான்மை இனக் கட்சிகள் பற்றி மிகவும் ஏளனமான தொனியில் பேசி இருக்கிறார்கள். ஏற்கனவே நவீன் திசநாயக்கா. ஆறுமுகம் தொண்டமானைத் தாக்கி இனவாதம் கக்கி உள்ளார். உயர் பாதுகாப்பு வலயங்கள் வழக்கு கிழக்கில் அகற்றப்பட முடியாது என மிலிந்த மொறகொட உறுதிபடக் கூறி உள்ளார். அரசியல் தீர்வு பற்றிப் பேசும் போது ரணில் விக்கிரமசிங்கா உட்பட ஐக்கிய தேசியக் கட்சியினர் "சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு" என்றே சுட்டிக் காட்டி நிற்கின்றனர். ஒடுக்கு முறைக்கு உட்பட்டு நிற்கும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வு என்று இவர்கள் பேசுவதில்லை.

இவை யாவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாத நிலைப்பாட்டையே வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

எனவே எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாத நிலைப்பாடும் ஏகாதிபத்திய விசுவாசமும் மறைக்கப்படக் கூடாது என்பது மட்டுமன்றி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் முன்னெச்சரிக்கையாகவும் விழிப்பாகவும் இருந்து கொள்வது அவசியமாகும். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி பற்றி தமிழ் மக்கள் மத்தியில் போலித்தனமான நம்பிக்கைகளையும் மாயத் தோற்றத்தையும் பரப்பி வரும் தமிழ் மேட்டுக்குடி உயர் வர்க்க சக்திகள் பற்றியும் அவர்களது அரசியல் தலைமைகள் பற்றியும் தமிழ் மக்கள் தெளிவுடன் இருப்பதும் தேவையானதாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் பேரினவாத நிலைப்பாட்டை அளவிட்டுக் கொள்ள கீழ்வருமாறு பார்த்தால் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதாகும். அதாவது தற்போதைய புரிந்துணர்வு. பேச்சுவார்த்தையை சந்தர்ப்ப சூழலால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி முன்னெடுக்கும் நிலை தோன்றியிருந்தால் ஐக்கிய தேசியக் கட்சியானது எத்தகைய நிலைப்பாட்டை எடுத்து நின்றிருக்கும் என்பதைக் கற்பனையாகச் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். நிச்சயம் பேரினவாத நிலைப்பாட்டை எடுத்திருக்கும் என்பது உறுதியானதாகும். ஆதலால் புரிந்துணர்வு யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை என்று ஐக்கிய தேசியக் கட்சி தற்போது வழி நடந்து சென்றாலும் அதன் அடிப்படை நோக்கும் போக்கும் பேரினவாத பெரு முதலாளித்துவ ஏகாதிபத்திய நிலைப்பாடாகும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்க முடியாது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (12)

~ தேச பக்தன் ~

## துண்டுப் பிரசுரங்கள் வேறும் சாத்தியப்பாடுகள்

துண்டுப் பிரசுரங்கள் பிரசாரத்துக்கு முக்கியமான பங்களிப்பன. சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் தேர்தல் பிரசாரத்தில் வகிக்கும் பங்கும் அரசியல் நடவடிக்கைக்கு ஆதரவான வெகுசன அணிதிரட்டலிலும் அவை நீண்டகாலமாகவே பங்காற்றி வந்துள்ளன. எனினும் பத்திரிகைகள் போன்றோ. சஞ்சிகைகள் போன்றோ அவை ஆவணப்படுத்தவது குறைவு. எனினும் அரசியல் சமூக முக்கியம் வாய்ந்த துண்டுப் பிரசுரங்கள். சுவரொட்டிகள் சில நீண்ட காலத்தின் பின்பும் மீளவும் பிரசுரிக்கப்படுவதும் பார்வைக்கு வைக்கப்படுவதும் உண்டு.

குறிப்பாக முதலாளிய சனநாயக உரிமைகளின் மறுப்பின் விளைவாகவே 'சுதந்திர' ஊடகங்கள் மூலம் கருத்துக்களை மக்கள் நடுவே கொண்டு செல்ல வசதி இல்லாததாலே அரசியல் இயக்கங்கள் துண்டுப் பிரசுரங்களையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இதை நாம் வெகுசனப் போராட்டங்களின் போதும் புரட்சிகர இயக்கங்களின் போதும் காண முடியும். அதேவேளை. துண்டுப் பிரசுரங்கள் மூலம் இனவாதிகளும். ஃபாஸிஸ வாதிகளும். மத வெறிகளுங் கூடப் பிரசாரத்தில் ஈடுபடுவது நாம் காணக் கூடியதே.

பத்திரிகைகளையோ. சஞ்சிகைகளையோ போன்று குறிப்பிட்ட இடங்களிற் பெற இயலாதன என்பதாற் துண்டுப் பிரசுரங்கள் தபால் மூலமோ நேரடியாகவோ மட்டுமே விநியோகிக்கப்படுகின்றன. விநியோகத்தில் உள்ள இடர்ப்பாடுகள் என்னவாயிருந்தாலும் அவற்றின் சிறிய உள்ளடக்கங் காரணமாக. விரும்பிப் பெறுவோரால் அவை முழுமையாக வாசிக்கப்படுகின்றன. குறிப்பிட்ட நோக்கத்திற்கு வெகுசன ஆதரவு குறைவாக இருந்தால் அவை குப்பை போல எறியப்படுகின்றன.

சட்டப்படி துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுவோர் யார். அச்சிட்டோர் யார் என்பன பற்றித் துண்டுப் பிரசுரங்கள் தெரிவிக்க வேண்டும். அவற்றின் உள்ளடக்கமும். பத்திரிகைகளினது போன்று சட்ட விதிகட்கு உட்பட்டவையாக அமைய வேண்டும் என்ற போதும். சில சூழ்நிலைகளில் சமூக விடுதலைக்கான துண்டுப் பிரசுரங்கள் மட்டுமன்றி. அவற்றைவிட அதிகளவில். சமூக விரோதமான துண்டுப் பிரசுரங்களும் சட்ட விதிகளை மீறி வெளியிடுவோர் பற்றிய தகவல்களை மறைத்து வெளியாகின்றன. இவற்றை அரசும் சட்ட நிருவாகத் துறையும் எவ்வாறு கையாளுகின்றன என்பது அரசின் தன்மையையும் அரசியற் சூழ்நிலையையும் சார்ந்து வேறுபடும் என்பது நாம் எதிர்பார்க்கக் கூடியதே. நவீன தொழில் நுட்ப ஒலி. ஒளிப்பதிவுக் கருவிகளை இயலுமாக்கிய பின்பு. இசைத்தட்டுக்கள் புகைப்படங்கள். திரைப்படங்கள் என்ற நிலைகளூடாக வளர்ந்து தகவல் ஊடகங்களாக ஒலிநாடா. வீடியோப் பேழைகள். ஒலி. ஒளி லேசர்த் தட்டுக்கள் போன்ற வசதிகள் இன்று பயன்படுகின்றன. இன்று கல்வி. தகவல். பொழுது போக்கு ஆகிய நோக்கங்கட்காக இந்த விதமான வசதிகள் பயன்படுவதை நாம் அறிவோம்.

பிரசார நோக்கிலேயே இன்று வெகுசனக் கல்வியும் தகவலும் வழங்கப்படுகின்றன. குறிப்பாக. மேலை நாடுகளின் தகவல் வெளியீட்டகங்கள் சில இன்று தகவற் துறையிற் பெற்று வரும் மேலாதிக்கத்தின் விளைவாக. மானுடவியல். பண்பாடு. வரலாறு போன்ற துறைகளில் முதலாளிய நலன் சார்ந்து தகவல்கள் பக்கச் சார்பாகவோ திரிக்கப்பட்டோ வழங்கப்படுவதை நாம் காணலாம். நவீன தகவற் தொழில்நுட்பம் முதலாளியத்தால் தகவல் மீது ஏகபோக ஆளுமையாக்கப்பட்டு வருவது எதிர்பார்க்க வேண்டிய ஒரு விடயமே.

அதற்கு மாற்றாக. மின்னியல் ஒலி ஒளி உபகரங்களை விடுதலைக்கான இயக்கங்களும் பாவித்தே வருகின்றன. ஒலிப் பேழைகள் இன்று பரவலான அளவில் மக்களை எட்டக் கூடிய நிலையில் உள்ளன. தனிப்பட்ட முறையில் ஒலி நாடா. லேசர்த்தட்டு. வீடியோ உபகரணங்களை உழைக்கும் மக்களிற் பெரும்பாலோரால் வைத்திருக்க வசதி இல்லாவிடினும். அவர்களுக்கு எட்டக் கூடிய விதமாக ஒலி நாடா. வீடியோ உபகரணங்கள் உள்ளன. இவ்வாறான வசதிகள் புலம்பெயர்ந்த தமிழராற் சில காலம் 'சஞ்சிகைகள்' நடத்தவும் பயன்பட்டன. ஒலி ஒளிப் பேழைகளை நாம் இன்னமும் முழுமையான அளவிற் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. ஆயினும் அவற்றுக்கான தேவை ஏற்படலாம் என்பது உண்மை. விடுதலைப் புலிகள் அயல் நாடுகளிற் பிரசார. நிதி திரட்டற் பணிகட்கு ஒலி. ஒளி உபகரணங்களை இன்னமும் பெருமளவிற் பயன்படுத்துவது கவனிக்கத்தக்கது. இவற்றின் பிரசார வலிமை பெரிது என்பது ஒருபுறமிருக்க. திரைப்படம். மட்ட ரகமான படப் பாடல்கள் போன்றவற்றுக்கு எதிரான ஒரு மாற்றுக் கலாசார ஊடகமாக இவ் வசதிகளை விருத்தி செய்வது பற்றி நாம் கவனிப்பது பயனுள்ளது.

பிற்குறிப்பு : இக் கட்டுரைத் தொடரின் நோக்கம் முதலாளிய சமுதாயத்தில் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம். ஊடகச் சுதந்திரம். ஊடகங்களின் நடுநிலை என்பன பற்றி நம்மிடையே உள்ள மயக்கங்களைத் தெளிவுபடுத்துவது மட்டுமே. முதலாளிய சனநாயகம் எவ்வளவு தூரம் வரையறுக்கப்பட்டதாகவும் முதலாளிய முறையின் காரணமாகவும் உள்ளதோ அவ்வளவுக்கு அந்தச் சனநாயகத்தின் பிரபலப்படுத்தப்பட்ட ஒவ்வொரு அம்சமும் வரையறுக்கப்பட்டும் முதலாளிய நலன் சார்ந்துமே உள்ளது என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அதேவேளை. குறைபாடுடைய முதலாளிய சனநாயகத்தின் மூலம் எவ்வாறு வர்க்கப் போராட்டத்தை முன்னெடுப்பதிற் சட்டரீதியான அணுகுமுறைகள் பயன்படுகின்றனவோ. பாரளுமன்றமும் பாரளுமன்றத் தேர்தல்களும் பயன்படுகின்றனவோ. அவ்வாறே ஊடகங்களையும் பயன்படுத்த இயலுமா என்ற கேள்விக்கு நாம் விடை தேட வேண்டியுள்ளது.

இது பற்றிய கருத்துக்கள் புரட்சிகரக் கட்சி. வெகுசன இயக்கங்கள். பரந்துபட்ட அணிகள் போன்றவற்றிற் கவனிக்கப்பட்டு உரிய தந்திரோபாயங்களும் வகுத்துக் கொள்ளப்பட வேண்டும். புரட்சிகர மாற்றத்துக்கான பிரதானமான போராட்டப் பாதை பற்றிய பூரணமான தெளிவுடனேயே பிற போராட்ட வாய்ப்புக்களை நாம் கருத்திற் கொள்கிறோம். சரியான நடைமுறை என்று முன்கூட்டியே வகுக்கக் கூடிய எதுவும் இல்லை. அது கூட்டு முயற்சி. கலந்தாலோசனை. சனநாயக மத்தியத்துவம். கொள்கை வழியான நடைமுறை என்பன மூலமே வந்தடையப்படுகின்றது. எனவே நாம் ஊடகங்கள் மூலம் என்ன செய்யலாம் என்பது பற்றிய விரிவான ஒரு கலந்துரையாடல் தொடரும் என்று நம்புகிறேன்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்தியக் கரங்களுக்கு

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தைப் படிப்படியாக தனியார் மயப்படுத்த அரசு முனைந்து வருகிறது. அதேவேளை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தை படிப்படியாக இந்தியா பொறுப்பேற்கக்கூடிய வகையில் திரை மறைவு நடவடிக்கை நடைபெறுகிறது. சில விடயங்கள் ஏற்கனவே பகிரங்கமாக ஒப்பந்தங்கள் ஆகியுள்ளன.

2002ம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவடைந்த வருடத்தில் கூட்டுத் தாபனத்தின் புரள்வு 10500 கோடி ரூபாயாகும். (பத்தாயிரத்து ஐந்நூறு கோடி) வரியாக அரசு பெற்ற தொகை 2600 கோடி ரூபாய் (இரண்டாயிரத்து அறுநூறு கோடி). கூட்டுத்தாபனத்தின் இலாபம் 8500 கோடி ரூபாய் (எண்ணாயிரத்து ஐந்நூறு கோடி).

இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்கும் ஆயுதப் படையினருக்கும் வேறு அரச நிறுவனங்களுக்கும் எந்த ஒரு நேரத்திலும் வழங்கப்படும் கடன் எல்லை முன்னூறு (300) கோடி ரூபாவாகும்.

அரச நிறுவனங்களுக்கு இப்பாரிய தொகையைக் கொடுத்துவிட்டு அடிக்கடி பாவனையாளருக்கான விலையை கூட்டுத்தாபனம் அதிகரித்து வருகிறது. இந்தியாவின் கைகளுக்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முற்றுமுழுதாகச் சென்றடைந்த பின்பு பெற்றோலியப் பொருட்களின் விலைகள் மேலும் உயர்த்தப்படுவது திண்ணம். உதாரணத்திற்கு ஷெல் காஸ் கம்பனிக்கு ஏகபோக தனியார் உரிமை வழங்கியதன் மூலம் ஏற்பட்ட எரிவாயுவின் விலை ஏற்றத்தை எடுத்துப்பார்த்தல் போதுமானதாகும்.

# உலக வங்கியின் ஒரு ஊடுருவல்!

கொமர்ஷல் வங்கியின் 15% பங்குகளை உலக வங்கியின் அங்கமான இன்ரநேஷனல் பினான்ஸ் கோப்பரேஷன் வாங்கியுள்ளது. இலங்கையில் பங்குகள் முதலீட்டில் ஆகக்கூடிய முதலீடாக இது விளங்குகிறது.

இந்த 15% பங்குகள் என்பது 58 இலட்சத்து 50 ஆயிரம் பங்குகள். ஒரு பங்கிற்கு ரூ. 165/- கொடுத்து 96 கோடி 52 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இந்த முதலீடானது எமது நாட்டின் நிதித்துறையில் அது அதிகரிக்கும் அழுங்குப்பிடியை குறிக்கிறது. அரசுக்கும் உலக வங்கிக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாட்டில் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தால் கொமர்ஷல் வங்கியில் இடம்பெற்றிருந்த 29.92 மூ பங்குகளில் 20மூ த்தை விற்பதென அரசு முடிவு செய்ததன் விளைவே உலக வங்கி கொம்ர்ஷல் வங்கியில் 15/- பங்குகளை வாங்க வழி சமைக்கப்பட்டது. அது மட்டுமல்ல அதன் சார்பில் ஒரு இயக்குனரையும் அது கொம்ர்ஷல் வங்கியில் கொண்டிருக்கும் நிலையையும் உருவாக்கியுள்ளது.

கொம்ர்ஷல் வங்கிக்கும் உலக வங்கியின் ஒரு அங்கமான இன்ர நேஷனல் பினான்ஸ் கோப்ப ரேசனுக்குமிடையில் ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி யுள்ளது.

உலக வங்கி இலங்கையின் பொருளாதார சமூக கல்வி பண்பாட்டுத் துறைகள் அனைத்திலும் எவ்வாறு புகுந்து கொள்ள முடியுமோ அவ்வளவிற்கு மிகவும் நாசுக்காகவும் தந்திரமாகவும் புகுந்து வருகின்றது.இதன் விளைவு மிகப்பாரதூரமானதாகவும் நாட்டின் சாதாரண உழைக்கும் மக்களைக் கடுமையாக பாதிப்பதாகவுமே அமைந்து வருகின்றன. ஏற்கனவே அரசாங்க கட்டுப்பாட்டில் இருந்து வரும் வங்கிகளை தனியார் மயமாக்குமாறு உலக வங்கி வற்புறுத்தி வருகின்றமை சிந்திக்க வேண்டியவையாகும். தாராளமயம். தனியார் மயம். உலகமயமாதல் ஆகிய மூன்று பெரும் கொடிய அரக்கர்களே இன்று மூன்றாம் உலக நாடுகளும் மக்களும் எதிர்நோக்கி நிற்கும் பயங்கர எதிரிகள். அவ் எதிரிகளுக்கு வழிகாட்டி நிலைகொள்ள உதவி புரிந்து நிற்பதே உலக வங்கியாகும்.

• • • • • • •

# யாழ்ப்பாணமும் நீர்வளமும்

## யாழ் குடா நாடு பாலைவனமாகுமா?

நிலநீர் ஆய்வாளர் க. நடனசபாபதி

மனித சிறுநீரில் 1 லீற்றருக்கு 7 கிராம் உப்பு இருக்கிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு நாளொன்றுக்கு 1.5 லீற்றர் சிறுநீர் வெளிப்படுகிறது. ஆகவே ஒரு மனிதனால் ஒரு நாளுக்கு சுமார் 10 கிராம் உப்பு வெளிப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களின் சிறுநீர்க் கழிக்கும் பழக்கத்தை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். யாருமே கழிவிடத்தில் சிறுநீர் பாய்ச்சுவதில்லை. வெளியிடத்தில் வெறும் தரையில். மரங்களைச் சுற்றி சிறுநீர் பாய்ச்சுகின்றனர். யாழ்ப்பாணத்தில் கழிவுநீரை அகற்றும் பொது ஏற்பாடுகள் ஒன்றுமில்லாத காரணத்தால் சிறுநீர் அனைத்தும் நிலத்திலேயே படிகிறது. யாழ்ப்பாணத்தில் ஆண்டில் 300 நாட்களுக்கு மழை பெய்வதில்லை. ஆகவே அண்ணளவாக கோடை முழுவதும் 3000 கிராம் உப்பு ஒருவரால் நிலத்தில் படிகிறது. சுமார் ஒரு இலட்சம் சனங்களைக் கொண்ட யாழ்ப்பாண நகரில் எத்தனை கிலோ கிராம் உப்பு நிலத்தில் படியும்? இவை அனைத்தும் மழைநீரினால் கழுவப்பட்டு நிலத்திற்கு அடியில் நன்னீரோடு சேர்ந்து செல்கிறது அல்லது வெள்ள நீரோடு எடுத்துச்செல்லப்படுகின்றது. இதன் காரணமாக மாரிகாலத்தில் சில கிணறுகள் மட்டும் உவர்த்தன்மை அடைகிறது.

ஒரு வலுவான காரணமாக இதனைக் கருதலாம்.

ஒரு காலத்தில் நாட்டில் நல்ல வசதி படைத்த அரசாங்க உத்தியோகத்தர்-றோட் ஓவசியர்கள் இவர்களை 'கண்டாக்கர்' என்று மக்கள் அழைத்தனராம். அக்காலத்தில் சுண்ணக்கற்களைக் கொண்டு இவர்கள்தான் றோட்டுகளை அமைத்தார்கள். இந்த றோட்டு கற்கள் அனைத்தும் மழைக் காலத்தில் கரைந்து வீதி ஓரத்தில் ஒதுங்கிவிடும். இதனால்தான் ஒரு கூற்று அன்று பிரபலமாக இருந்தது. அதாவது "கோடை வந்தால் கல்லெல்லாம் றோட் ஆகும். மீண்டும் மாரிகாலம் வந்தால் றோட் எல்லாம் கல்லாகும்". இதனால் றோட் ஓவசியர்கள் வசதி படைத்தோராக அன்று விளங்கியிருக்கிறார்கள். மழைநீர் சுண்ணக்கற்களைக் கரைக்கும் இரசாயனத் தாக்கம் ஒரு சிலருக்கா வது நன்மை பயத்திருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரியதே.

### வற்றாக் கிணறுகள்

புத்தூர் நிலாவரைக் கிணறு

இதனை ஆழம் தெரியாக் கிணறு என்று கூறுவர். இது யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதியில் 10வது மைலில் மேற்கே இரண்டு மைல் தூரத்தில் அமைந்துள்ளது. இது நீள் சதுர வடிவில் கேணி உருவில் அமைந்துள்ளது. இது சுமார் 192 அடி ஆழம் கொண்ட நீர் நிலையாகும். சுமார் மேல்மட்டத்திலிருந்து 40" ஆழத்திற்கு நன்னீரைக் கொண்டிருக்கிறது.

முற்காலத்தில் திருடப்பட்ட பொருள்களை இதற்குள் போட்டு திருடர்கள் தப்பிக்கொள்வர். காதலில் தோல்வி கண்ட தம்பதிகளுக்குப் புகலிடம் அளித்து வந்ததும் இக்கேணிதான். நன்னீருக்குக் கீழே உள்ள நீர் கடல் நீரை விடவும் உவர்த்தன்மை கொண்டது.

நீர் மின்சார இறைப்புப் பொறிகளைப் பயன்படுத்தி தெற்குப் புறமாக அமைந்த விவசாயிகளின் தேவைகளை நிறைவு செய்கிறது. நீர் விவசாயிகளுக்கு இலவசமாகவே வழங்கப்படுகிறது.

இந்நிலாவரைக் கிணற்று நீர் ஆராய்ச்சி மேற்கொண்ட விஞ்ஞானிகள் நீரின் தன்மை சீரழியாமல் தொடர்ந்தும் இருக்க வேண்டுமாயின் நீர் இறைப்பை கீழ்க் காணுமுறையில் கடைப்பிடிக்க வேண்டுமென்று பணித்தனர். காலை 6.00 மணிமுதல் மு.ப. 11.00 மணி வரைக்கும். பி.ப. 1.00 மணிமுதல் 6.00 வரைக்கும் அதாவது மொத்தமாக ஒரு நாளில் 10 மணிநேரம் மட்டும் இறைத்து இடையே இரண்டு மணிநேர ஓய்வு வழங்கி வந்தால் நீரின் தன்மை பாதிக்கப்படாதிருக்கும் என்று கண்டனர். இந்த விதி இறைப்புக்குப் பொறுப்பாயிருந்த ஊழியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. அன்றாடம் அன்றாடம் நீர் இறைக்கு முன்பும்ள இறைப்பை நிறுத்தும் போதும் நீரின் தன்மை மாறிவிட்டதா என்பதை அறிந்துகொள்ள இரு நீர் மாதிரிகளை நாள் தோறும் எடுத்து ஆய்வு கூடத்திற்கு இரசாயனப் பகுப்பிற்காக அனுப்பிவைக்கப்பட்டது. ஆனால் நீர் இறைப்பை நிறுத்தும் போது நீரின் தன்மையில் பெரிய மாறுதல் காணப்பட்டது. இந்நிலை எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. இதனை இறைக்கும் இடத்தை நேரே பார்வையிட்டபோது பி.ப. 6.00 மணிக்கு நிறுத்த வேண்டிய இறைப்பு விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க இரவு 9.00 மணி வரைக்கும் கூட இறைக்கப் பட்டது தெரியவந்தது. ஊழியர்களோ தாம் 10 மணி நேரங்களுக்குமேல் இறைப்பதில்லை என்று உறுதியாகக் கூறினர். ஊழியர்களிடமிருந்து உண்மைத் தகவலைப் பெறமுடியாது என்பதை அறிந்த நாம் மின் இறைப்புப் பொறியைத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் மின்மானி காட்டும் அளவீடுகளை அனுப்பிவைக்கும்படி கேட்டோம். அதன்பின்தான் இறைப்பு நேரத்தை சரிவர அறிந்துகொள்ள முடிந்தது. இறைக்கும் நேரம் 10 மணித்தியாலத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. அதற்கு மேல் நீரை இறைத்தால் அது உவர்நீரையே பாய்ச்சும். அந்நீர்ப் பாவணையாளர் ஒருவரை அணுகி வழங்கிவரும் நீரின் தன்மையை விசாரித்தபோது. 'இந்நீரைக் கொண்டு வாழையை மட்டுமே பயிரிடலாம். வெறொன்றும் இந்நீரில் வளராது' என்று கூறினார். இக்கூற்றில் உண்மையில்லாமலில்லை. உவர்நீரில் பயிர்கள் நன்றாக வளர்வதில்லைதானே?

இக்காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கச்சேரியில் மாவட்ட விவசாயக்குழு ஒன்றுகூடி. நிலாவரை நீரைப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு நிலத்தை திருத்தம் செய்து நீரை வழங்கும் திட்டம் ஒன்றை வகுத்தது. அத்துடன் ஒரு ஏக்கர் நிலத்திற்கு குறித்த ஒரு தொகையை விவசாயி களிட மிருந்து அறவிடவும் அது முடிவு செய்தது. இத்திட்டத்தில் விவசாயி களுக்கு உடன்பாடு இருக்கவில்லை. இதன் காரணமாக இத்திட்டம் கைவிடப் பட்டது. ●

# முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளும் தமிழ் முஸ்லீம் தலைமைகளும்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு தனியே சிங்களவர்-தமிழர் என்ற அடிப்படையில் தேடக்கூடியது அல்ல. இது பற்றி மார்க்சிச லெனினிச வாதிகள் நீண்டகாலமாகவே எச்சரித்து வந்திருக்கிறார்கள். சிங்களப் பேரின வாதிகள் முஸ்லிம்களை நீண்டகால மாகவே இலக்கு வைத்து வந்திருக் கிறார்கள். தென்னிலங்கையில் முஸ்லிம் களை விளிம்பு நிலைக்குத் தள்ளுகிற முயற்சியில் பல்வேறு பேரினவாத அமைப்புக்கள் விடாது முயற்சி செய்து வருகின்றன. இவை பற்றி நம் நாட்டு முஸ்லிம் தலைவர்கள் அறிவார்கள். ஆனாலும் சிங்கள-தமிழ் முரண்பாட்டில் தங்களுக்கான தனிப்பட்ட லாபம் தேடுவதிலேயே முஸ்லிம் பாராளுமன்ற அரசியல்வாதிகள் மும்முரமாக இருந்து வந்திருக்கிறார்கள்.

முஸ்லிம்களுக்கும் தமிழருக்குமிடையே இன முரண்பாடு என்று குறிப்பிடக் கூடிய விதமாக 1970 வரை கூட எதுவும் இருந்ததாகக் கூற முடியாது. ஆனாலும் தமிழ்த் தேசியவாதத் தலைமையின் பாரிய தவறுகளாலும் கீழ் மாகாண முஸ்லிம் அரசியல்வாதிகளது சந்தர்ப்பவாதத்தாலும் பாராளுமன்ற அரசியலின் பிரச்சனை. இரு சமூகங்கள் இடையிலான பிரச்சனையாக மாறியது. அப்போது தமிழத் தேசிய இனத்தை அடக்குவதையே முக்கிய அரசியல் இலக்காகக் கொண்டிருந்த சிங்களப் பேரினவாதம். முஸ்லிம் தலைவர் களையும் சில தமிழ் தலைவர்களையும் தனக்கு வசதியாகப் பாவித்து வந்தது. என்றாலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் தமிழர்களுக்கு எதிரான பாரபட்சமும் முஸ்லிம்களையும் பாதித்த சூழ்நிலையில் முஸ்லிம்களிடமிருந்து புதிய அரசியற் சக்திகள் எழுந்தன. தமிழ் விடுதலை இயக்கங்களில் முஸ்லிம்கள் இணைந்தபோது முஸ்லிம்களின் தனித்துவத்தைத் தமிழ் விடுதலை இயக்கங்கள் ஏற்கத் தயாராக இருக்க வில்லை. மறுபுறம் முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய பார்வை பிரதேச அடிப்படையில் உருவான அளவுக்கு நாடாளாவிய முறையில் இன்றுவரை அமையவில்லை. இந்தப் பின்னணியில் முஸ்லிம்களில் ஒரு சிறு பகுதியினரைத் தமக்கு வசதியாகப் பாவித்த பேரினவாத அரசாங்கமும் ராணுவமும் அம் முஸ்லிம்களைக் கொண்டு தமிழருக்கு எதிரான தாக்குதல்களை நடத்தியது உண்மை. ஆனால் இந்த நடத்தைக்கும் முன்னாள் விடுதலை இயக்கங்களது நடத்தைக்கும் பெரிய வேறுபாடு இருப்ப தாகக் கூற முடியாது.

நாட்டில் முஸ்லிம்கட்கு எதிரான வன் முறைச் சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன.

இதிற் தமிழர் சம்பந்தப்பட்டவை மட்டுமே கவனமாக நினைவுகூரப்படுகின்றன. முஸ்லிம்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்ற தமிழ்த் தேசியவாதிகளுஞ் சரி. சிங்களப் பேரினவாதிகளுஞ் சரி. முஸ்லிம்கட்கு எதிரான சிந்தனைகளி லிருந்து விடுபட்டவர்களல்ல.

எப்படியென்றாலும். இப்போது நாட்டின் சில பகுதிகளில் தமிழருக்கும் முஸ்லிம் கட்குமிடையே கசப்புணர்வு உரு வாக்கப் பட்டுள்ளது. சரியோ. பிழையோ. தமிழர் ஆதிக்கத்திலுள்ள ஒரு பிரதேச சுயாட்சிக்குக் கீழ் வாழ்வது பற்றி







முஸ்லிம் சமூகத்தினருள் ஒரு அம்சம் இருக்கிறது. தமிழர் சிங்களப் பேரின வாதம் பற்றி அஞ்சுவது எவ்வளவு நியாயமோ அவ்வளவு இல்லாவிட்டாலும் ஒப்பிடக்கூடிய அளவு நியாயமான அம்சம் தமிழர் மேலாதிக்கம் பற்றிய அச்சம் முஸ்லிம்களிடம் உள்ளது. இந்த யதார்த்தத்தைக் காண மறுக்கக் கூடாது.

முஸ்லிம்களின் தனித்துவம் பற்றியும் முஸ்லிம்கட்கான சுயாட்சி அலகுகள் பற்றியும் மார்க்சிச லெனினிசவாதிகள் நீண்டகாலமாக. முஸ்லிம் தலைவர்கள் தனியான பிரதேசம் கேட்கு முன்னரே. பேசி வந்திருக்கிறார்கள். இன்று வடக்கு-கிழக்கில் முஸ்லிம்கட்கான சுயாட்சி அலகுகட்கான தேவை முன்னிலும் அதிக நியாயமுடையது. ஆனால் இது பற்றிய தெளிவு முஸ்லிம் தலைமைகளிடையே போதாமலுள்ளது.

தென்கிழக்கில் ஒரு முஸ்லிம் சுயாட்சிப் பிரதேசத்தைக் கோருவது நியாய மானது என்றாலும் அதன் மூலம் நாட்டிலுள்ள முஸ்லிம்களின் தேசிய இனப்பிரச்சினையதைத் தீர்க்க முடியுமா? முஸ்லிம்கட்கான சுயாட்சி அலகுகள் நாடு முழுவதும் பரவலுமாகத் தேவைப் படாதா? இது பற்றிப் பேசத் தென்னி லங்கை முஸ்லிம்களுடைய தலைவர்கள் ஆயத்தமாக இல்லை. மறுபுறம் தென்னி லங்கை முஸ்லிம்களைப் புறமொதுக்கிக் கிழக்கில் உள்ள முஸ்லிம்களை ஒரு 'முஸ்லிம் தேசமாக' வரையறுக்கிறவர் களும் இதற்கு ஆயத்தமாக இல்லை.

தமிழத் தேசியவாதிகள் தரப்பில். முஸ்லிம் களின் நியாயமான அச்சங்களுக்கு எப்படி முகங்கொடுப்பது என்ற அக்கறை பொதுவாகவே இல்லை. இருக்கிறபோது கூட அதை நடை முறைப்படுத்துகிற அளவுக்கு அரசியற் தெளிவு இல்லை. இதன் பயனாகவே இன்று முஸ்லிம்களைப் பயன்படுத்தி அமைதிப் பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதற்குப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசியல்வாதிகளுக்கு முடிகிறது. முஸ்லிம்கட்கான தனியான பிரதேசங்களுக்குப் பரிந்துரைக்கும் சரத் அமுனுகமவின் இனவாத அரசியல் எந்த முஸ்லிம் தலைமையையும் அறியாமலிருக்க முடியாது. ஆனால் அவரது இனவாத அரசியல் மூலம் அவர்கள் தங்களைப் பயன்படுத்த வேண்டுகிறார்கள். முஸ்லிம்கட்கான தனி அலகைக் கூட ஏற்க மறுக்கும் ஜே.வி.பி.யுடன் ஃபேரியல் அஷ்ரஃப்பும் ஹிஸ்புல்லாவும் ஒத்துழைக்க முடிவதும் முஸ்லிம்கள் பற்றிய அக்கறையாலல்ல.

சிங்களப் பேரினவாதக் கட்சி ஒன்றின் உதவியில்லாமல் தேர்தலில் வெல்ல முடியாத நிலையில் உள்ள ரவுஃப் ஹக்கீமின் பலவீனம். கிழக்கில் முஸ்லிம்களிடையே வலுத்து வரும் பிரதேச உணர்வுக்கும் தெற்கில் உள்ள தனது அரசியல் தளமான வணிகர் களது நலன்களுக்குமிடையே சமநிலை காணுவதற்கு இயலாதுள்ளது தான். மற்ற முஸ்லிம் தலைவர்களை முந்தி விடுலைப் புலிகளுடன் அவர் செய்த உடன்பாடு. அதன் தெளிவீனங்களின் விளைவாக. அவர் எதிர்பார்த்ததற்கு மாறான விளைவுகளை ஏற்படுத்தின.

சென்ற வருட மூதூர் வன்முறைக்குப் பின்னணியில் இருந்தவர்கள் யாரென்று இன்னமும் ஊகங்கள் மட்டுமே நிலவுகின் றன. வாழைச்சேனை வன்முறைக்குப் பின்னால் பல விஷமிகள் சம்பந்தப்பட்டுள் ளனர். இது விடுலைப் புலிகளின் நம்பகத் தன்மையைக் கேள்விக்குட்படுத்தியிருக் கின்றதென்றால் அதற்கு விடுலைப் புலிகளிடையே உள்ள முஸ்லிம் விரோதப் போக்குக்களும் பதில் சொல்லியாக வேண்டும். மறுபுறம் இவ்வாறான வன்முறையை ஊக்குவிக்கவும் முஸ்லிம்களிடையே புதிய ஆயுதமேந்திய குழுக்களை உருவாக்க வும் எடுக்கப் படும் முயற்சிகளில் தமிழ் -முஸ்லிம் பகை மையை வளர்ப்பதன் மூலம் லாபமீட்ட நினைக்கும் சில தமிழ். முஸ்லிம் சந்தர்ப்ப வாதிகளின் பங்கும் சிங்களப் பேரின வாதிகளது பங்கும் பற்றி அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

நம்மை எதிர்நோக்கும் உடனடியான பிரச்சனைகளின் அடிப்படையில். கிழக்கு முஸ்லிம்களது பிரச்சனைகள் தொடர் பாகச் சில விடயங்களில் அடிப்படையான உடன்பாடு தேவை.

பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் தரப்பு ஒன்று பங்குபற்றுவதை விடுலைப் புலிகள் எதிர்க்க அவசியமில்லை. ஆனால் முஸ்லிம் தரப்பு என்பது வடக்கு-கிழக்கு முஸ்லிம்களின் குறிப்பான பிரச்சனைகள் பற்றியதா அல்லது தேசிய அளவிலான முஸ்லிம் களின பிரச்சனைகள் பற்றியதா என்பதிற் தெளிவான பதில் தேவை.

நாடாளாவிய முஸ்லிம்களின் பிரச்சனை யைப் பற்றிப் பேசுவதில்லை என்றால். வடக்கு-கிழக்கு முஸ்லிம்களது பிரதிநிதிகள் மட்டுமே பங்குபற்றுவது போதுமானது. அப்படியானால் முஸ்லிம்களது பிரதிநிதிகள் யார் என்ற கேள்வி எழுகிறது. இது பற்றிச் சம்பந்தப்பட்ட முஸ்லிம் மக்கள் தான் முடிவு செய்ய இயலும்.

அதேவேளை. இன்றைய தேசிய இனப்பிரச்சினையின் விளைவான போர் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை யையே மையமாகக் கொண்டது என்பதையும் பிரச்சினையின் தீர்வுக்கு மிரட்டலாக முஸ்லிம்களின் பிரச்சினை களைப் பார்க்கிறவர்களை மறிப்பதனால் முஸ்லிம்களின் கோரிக்கைகள் என்ன என்பது பற்றிய அடிப்படையான உடன்பாடு தேவை. முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதியாக மட்டுமன்றித் தலைமைப் பிரதிநிதியாகவும் யாரும் தம்மை முன்னிறுத்தும் .முயற்சிகட்குப் பலியானால். அதனால் நட்டப்படுவோர் முஸ்லிம்களே.

மறுபுறம் தமிழ் மக்களின் சார்பாகப் பேசும் உரிமை உள்ள காரணத்தால் தமிழ் மக்களது ஒரே ஒரு குரலாகிவிட முடியாது. தேர்தலில் வெல்லுவதற்காக விடுலைப் புலிகள் என்ன சொல்கிறார் களோ அதுவே நமது கருத்து என்று சொன்னவர்கள் கூடத் தமது நிலைப் பாட்டை மாற்றி உள்ளனர். அவர்களது அரசியல் நேர்மை பற்றிப் பொதுமக்கள் தமது சொந்த முடிவுகட்கு வரட்டும்.

தமிழ் மக்களது தேசிய அடையாளம் தமிழ்ச் சமுதாயத்தினுள் உள்ள வர்க்க. சாதி. மத அடையாளங்களை மறுக்க முடியாது. தமிழ் மக்களின் பொதுவான சமூகத் தேவைகட்கும் அச் சமூகத்தின் வெவ்வேறு பிரிவினருடைய குறிப்பான தேவைகட்குமிடையிலான முரண் பாட்டை மறுப்பதன் மூலம் ஒடுக்குமுறை யாளர்கட்கே நன்மை கிட்டும்.

உடனடியான தேவைகள் போர் நிறுத்தமும் இடைக்காலத் தீர்வுமாக இருக்கலாம். நீண்டகாலத் தீர்வு பற்றி யோசிக்கும்போது முழு இலங்கையிலும் உள்ள முஸ்லிம்கள். தமிழர். மலையகத் தமிழர் பற்றிப் போதிய கவனம் காட்ட வேண்டியுள்ளது. நமது தேசியவாதத் தலைமைகள் அதற்கு ஆயத்தமா?

இங்கேதான் மாக்சிச லெனினிச வாதிகளின் தீர்க்கமான சிந்தனை அவர்கட்கு வழிகாட்டும்.

# போதையூட்டும் கிரிக்கெட்

கிரிக்கெட் விளையாட்டின் விதிமுறை களே தெரியாதவர்கள் கூட "கிரிக்கெட் ஸ்கோர்", 'வெற்றி தோல்விகள்' பற்றி கதைப்பதுடன் ஆட்ட வெற்றித் தோல்வி கள் பற்றி விமர்சனம் செய்பவர்களாக இருக்கின்றனர். எங்கு சென்றாலும் கிரிக்கெட் பற்றியே பேச்சு. அந்தளவிற்கு உலக கிண்ணத்திற்கான கிரிக்கெட் போட்டி சாதாரண மனிதனையும் வெகு வாக பாதித்துள்ளது. தொலைக்காட்சி. வானொலி மூலம் வீடுகள். வீட்டு படுக்கை அறைகள். சமயலறைகள் வரை கிரிக்கெட் ஆழமாக சென்று விட்டது. எல்லாருமே கதைக்கக் கூடிய தாகிவிட்டது. கதைக்காதவர்கள் சமூக அந்தஸ்தற்றவர்களாக்கப்படு கின்றனர்.

விளையாட்டு திறமையை ரசித்து போற்றுவதாக சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் அமைவதில்லை. பல்தேசிய கம்பெனிகளின் உற்பத்திப் பொருட்க ளுக்கு விளம்பரத்தை தேடிக் கொடுப் பதற்காகவும். போட்டிகளின் போது பொருட்களை விற்பதற்காகவும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் திட்டமிட்ட சந்தர்ப்பங்களாக பயன் படுத்தப்படுகின்றன. அதேபோன்று நாடுகளை ஆளுகின்ற அரசாங்கங் களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழு வதைத் தடுத்து மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக அதீத தேசிய வெறியை ஊட்டுவதற்கும் இவ் விளை யாட்டுப் போட்டிகள் பயன்படுத்தப் படுகின்றன.

விளையாட்டுப் போட்டிகளை நடத்தி அதன் பலன்களை பல்தேசியக் கம்பெனி களும். தேசிய அரசாங்கங்களும் பெற்றுக் கொள்கின்றனர். மக்கள் அவர்களது நேரம், பணம். உழைப்பு என்பவற்றை விரயம் செய்வதுடன் இனம், மதம். நாடு போன்ற குறுகிய சிந்தனைகளுக்குள் ஆழ்த்தப்படு கின்றனர். பல்தேசிய கம்பெனிகள் அவற்றின் வியாபாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு லாபத்தை சம்பாதித்துக் கொள்கின்றன. தேசிய அரசாங்கங்கள் அவற்றின் ஆட்சியை நடத்துவதற்கான தேசிய வெறியை பரப்புவதுண்டு. விளையாட்டுப் போட்டி களை காட்டி மக்களை திசை திருப்புவ துண்டு. விளையாட்டுப் போட்டிகளால் மக்களிடையே ஏற்படும் பிளவுகளும் கூட தேசிய அரசாங்கங்களுக்கு பலமாக அமைந்து விடுகின்றன.

கிரிக்கெட் போன்ற தேசிய விளையாட்டு அணியில் திறமையிருந்தாலும் அரசியல் செல்வாக்கின்றி வீரர்கள் அங்கம் வகிக்க முடிவதில்லை. இலங்கை கிரிக்கெட் அணியினர் இலங்கையின் வேறெந்த துறையிலும் இருப்போர் பெறாத அளவிற்கு கூடிய சம்பளத்தைப் பெறுகின்றனர். கிரிக்கெட் அணியில் கூடிய மாதாந்த சம்பளம் 1 லட்சத்து 50 ஆயிரமும் குறைந்த சம்பளம் 55 ஆயிரமும் வழங்கப்படுகிறது. இதைவிட அவர்கள் போட்டிகளில் பங்கெடுப் பதற்கும் வெற்றி வெறுவதற்கும் பணப் பரிசுகள் மேலதிகமாக வழங்கப்படுகிறன. இலங்கையின் ஜனாதிபதி பெறுகின்ற மாதாந்த ஊதியத்தை விட கூடுதலாக கிரிக்கெட் அணியில் இருப்போர் பெறுகின்றனர்.

கால்பந்தாட்ட சர்வதேச போட்டிகளிலும் பல்தேசிய கம்பெனிகள் பாரிய லாபம் சம்பாதிக்கின்றன. சர்வதேச கால்பந் தாட்ட கழகம் ஒரு போட்டியின் முடிவில் பெறுகின்ற லாபம் மூன்றாம் உலக நாடுகளின் வருடாந்த லாபத்தை விட அதிகமாக இருப்பதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அதேவேளை இன்னும் ஆசிய. ஆபிரிக்க நாடுகளில் பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்தாடு கிறது. ஆனால் சர்வதேச விளை யாட்டுப் போட்டிகளை நடத்துவதில் ஈடுபட்டுள்ள பல்தேசிய கம்பெனிகள் பெருமளவு லாபம் சம்பாதிக்கின்றன.

இவ்வருட உலக கிண்ணத்துக்கான சர்வதேச கிரிக்கெட் போட்டி இலங்கை. இந்திய மக்களை பல வழிகளிலும் பாதித் துள்ளது. இந்திய அணி தோல்வி யடைந்த வேளைகளில் அணியின் வீரர்களின் வீடுகள் தாக்கப்பட்டுள்ளன. வெற்றி பெற்ற வேளைகளில் அவர்களின் படங்களுக்கு இந்திய மக்கள் பூஜை செய்துள்ளனர்.

இலங்கை அணி இறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்படவில்லை என்பது இலங்கை மக்களை வெகுவாக பாதித்துள்ளது. அதேவேளை இலங்கை அரசின் மீதும் அரசாங்கத்தின் மீது வெறுப்படைந்தவர்களில் பலர் இலங்கை அணியின் தோல்வியை இலங்கை அரசின் தோல்வியாக கொண்டு மகிழ்ச்சியடைகின்றனர்.

இலங்கை கிரிக்கெட் அணியினர் உண்மையில் இலங்கை நாடு பற்றிய அக்கறை கொண்டவர்களாகவும் இல்லை. (ஏறக்குறைய எல்லா நாடு களிலும் அப்படியே இருக்கலாம்) ஏனெனில் அவர்கள் பல்தேசிய கம்பெனி களுக்கும் இலங்கை அரசிற்கும் பணி புரிபவர்களாக இருக்கின்றனர். யுத்தம் நடைபெறும்போது தேசிய பாதுகாப்பு நிதிக்கு பங்களிப்பு செய்வதில் காட்டிய ஆர்வம் சமாதானம் நிலைநாட்டப்பட



வேண்டும் என்பதில் இருக்கவில்லை. இலங்கை அரசாங்கத்தினால் தெரிவு செய்யப்படும் கிரிக்கெட் அணி அரசாங் கத்தின் எண்ணங்களை பிரிதிபலிப்பதாக இருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது. இறுதியில் கிரிக்கெட் இரசிகர்கள் கூட அரசியல் கருத் துக்கள் மற்றும் இன. மத அடிப்படையில் பிரிந்தே இலங்கை அணியை ஆதரிக் கின்றனர் அல்லது எதிர்க்கின்றனர்.

மக்களை மகிழ்வூட்டி ஓய்வு நேரங்களை ஒழுங்கமைக்க ஏதுவாக இருந்த உயர்ந்த சமூகப் பண்பாட்டை நோக்கி வளர வேண்டிய விளையாட்டுக்கள் ஏகாதிபத்திய உலகமயப்படுத்தலுக்கு ஏற்ப மக்களிலிருந்து விளையாட்டுக்கள் பிரிக்கப்பட்டு ஏமாற்றும் வித்தைகளாகி. மக்களை சுரண்டும் வியாபாரமாக்கப் பட்டுள்ளன. ஏகாதிபத்திய உலகமயமாக் கலின் கீழ் விளையாட்டுக்கள் உலக வர்த்தகமாக்கப்பட்டுள்ளன. மக்கள் அப்போட்டிகளை நுகர்வோராக ஆக்கப்பட்டுள்ளனர்.

போட்டிகள் மட்டுமன்றி போட்டியில் ஈடுபடுகின்ற வீரர்களும் பந்தயங்களுக் காக விலை போகிறார்கள் அதாவது பந்தயங்காரர்களை ஜெயிக்க வைப்பதற் காக பல வீரர்கள் திறமையாக விளை யாடாமல் தோல்வியடைந்த சந்தர்ப்பங் களும் வெளிச்சத்திற்கு வந்துள்ளன. அதாவது மாதாந்த சம்பளம். சன்மானம் என்பவற்றை விட பந்தயங்காரர்கள வழங்கும் பணம் அதிகம் என்பதால் அணியின் வீரர்கள் நேர்மையாக விளையாடுவதில்லை.

அத்துடன் விளையாட்டுப் போட்டிகளை மையமாகக் கொண்ட விபச்சாரம். கடத்தல் போன்றவையும் திட்டமிட்ட ரீதியில் செய்யப்படுகின்றன.

இந்நிலையில் விளையாட்டுப் போட்டி களில் திறமைக்கே இடம் என்பதும் மக்கள் திறமையையே இரசிக்கிறார்கள் என்பதும் விளையாட்டில் மகிழ்வடை கிறார்கள் என்பதும் செல்லுபடியாகும் விடயங்களல்ல. மாறாக மக்கள் முட்டாள்களாக்கப்படுகின்றனர்.

பல்தேசிய கம்பெனிகளினாலும். தேசிய அரசாங்கங்களினாலும் விளையாட்டில் ஈடுபடும் வீரர்களாலும் மக்கள் முட்டாள் களாக்கப்படுகின்றனர். கிரிக்கெட் போட்டிகள் நடைபெறும்போது அதிகமான அத்தயாவசிய பொருட் களின் விலை அதிகரிக்கப்பட்டு வந்தன என்பது உண்மையேயாகும். ஒட்டு மொத்தத்தில் கிரிக்கெட் என்பது மக்களைச் சகல வழிகளாலும் ஏமாற்றும் ஒரு விளையாட்டாகி நிற்பதையே காண முடிகிறது.

www.padippakam.com



# சமூகப் பன்முகத் தன்மையை மறுக்கும் உலக மயமாதல்

## சூழலை மிக மோசமாகப் பாதிப்படைய வைக்கிறது.

**'பூவுலகின் நண்பர்கள் அமைப்பின்' சி. நெடுஞ்செழியன் கூறுகிறார்**

கேள்வி: ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலான அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளினாலேயே சுற்றுச் சூழலுக்கு அதிகமாகவும், வேகமாகவும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. அதனால் ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிரான போராட்டமும், சூழலை பாதுகாப்பதற்கான போராட்டமும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரிக்க முடியாதிருக்கிறது என்பது பற்றி நீங்கள் கூற விரும்புவதென்ன?

பதில் : உலகமயமாதல் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பிருந்தே சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. உலகமயமாதல் என்பது ஒரு சமூகத்தின் பன்முகத் தன்மையை ஏற்றுக் கொள்ளவில்லை. அரசியல், பொருளாதாரம், பண்பாடு என்பவற்றில் இருக்கும் வித்தியாசங்களையும் வித்தியாசமான பெறுமதியான விடயங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. வித்தியாசங்களையும் வேறுபாடுளையும் ஏற்றுக் கொள்ளாது, மறுத்து எல்லா விடயங்களிலும் ஒரு முனைவான சந்தையின் ஏகபோகத் தன்மையை நிலைநாட்டுவதே உலகமய மாதல். அதன் கீழ் சூழல் மிகவும் வேகமாகவும் பாரதூரமாகவும் பாதிக்கப் படுகிறது. எனவே சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான போராட்டமும் உலகமயமாதலுக்கு எதிரான போராட்டமும் ஐக்கியப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். சூழலைப் பாதுகாக்க வேண்டிய கூடிய பொறுப்பு அந்தந்த அரசாங்கங்களுக்கு இருந்த போதும் அவற்றின் நடவடிக்கைகள் சூழலைப் பாதிப்பனவாகவே இருக்கின்றன. 1965ம் ஆண்டளவில் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய டீ.ரீ.ரீ. அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது. இவ்வாறு சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பல விடயங்கள் உலகமயமாதல் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே இருந்துள்ளன. சூழலுக்குப் பாதிப்பு ஏற்படும் விடயங்களுக்கு எதிரான போராட்டமும் உலகமயமாதல் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்பே இருந்துள்ளது. ஆனால் தற்போது உலகமயமாதலின் கீழ் சுற்றுச் சூழலுக்கு மிகவும் வேகமாகவும் பாரதூரமாகவும் பாதிப்பு ஏற்படுத்தப் படுகிறது. அதனால் தற்போது சுற்றுச் சூழல் பாதிப்புக்கு எதிரான போராட்டம் உலகமயமாதலுக்கு எதிராகவும், இருக்கிறது. அதேபோன்று உலகமயமாதலுக்கு எதிரான போராட்டம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான போராட்டமாகவும் இருக்கிறது. எனவே இரண்டு போராட்டங்களும் ஐக்கியப்படுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும். உலகமயமாதலுக்கு எதிரான போராட்டம் பன்முகத்தன்மை கொண்டது. அது பலவிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் உலகமயமாதலுக்கு எதிரான போராட்டத்தை 'ஒரு அரசியல் சுலோகத்திற்குள் மட்டும்' உள்ளடக்கி விட முடியாது. சூழலைப் பாதுகாப்பதற்கான போராட்டத்தையும் ஏதாவது ஒரு அரசியல் சுலோகத்திற்குள் மட்டும் உள்ளடக்கி விட முடியாது.

கேள்வி: ஏகாதிபத்திய உலகமயமாக்கலுக்கு எதிராகவும் சூழலைப் பாதுகாக்கவும் ஒப்பீட்டு ரீதியில் கியூபாவில் முற்போக்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதற்கு கியூப ஆட்சிமுறையே நியாயமான பங்களிப்பு செய்கிறது என்பதை ஏற்றுக் கொள்வீர்களா?

பதில் : நிச்சயமாக கியூப ஆட்சிமுறை சூழலை பாதுகாப்பதற்கு உலகமயமாதலுக்கு எதிரான போராட்டம் முன்னெடுப்பதிலும் பொறுப்பான பங்களிப்பைச் செய்கிறது. சூழலை பாதுகாப்பதில் கியூப மக்களுக்கு பாரம்பரியமும் இருக்கிறது. கியூப தேசியத் தலைவர்களில் ஒருவரான 'ஜொசி மார்டி' 'ஒரு பொருளை உபயோகிப்பதற்கு முன்பு அது எப்படி உற்பத்தி செய்யப்பட்டது என்ற அறிவு இருக்க வேண்டும்.' என்று கூறியிருந்தார். அக்கூற்று ஒரு விதத்தில் சூழலைப் பாதுகாப்பதற்கான அடிப்படையான கூற்றாகும்.

பொருளாதார, அரசியல் நிர்ப்பந்தங்கள் காரணமாக இருந்த போதும் இயற்கை வேளாண்மை போன்ற சூழலைப் பாதிக்கும் விடயங்களுக்கு மாறான மாற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் கியூபா முன்னிலையிலும் முன்னுதாரணமாகவும் இருக்கிறது. உலகமயமாதல் தொழிலாளர்களை பொருள் உற்பத்தியிலிருந்து அந்நியப்படுத்துவது போல் விவசாயிகளை விவசாயத்திலிருந்து அந்நியப்படுத்தி வருகிறது. இவ்வாறான உலகமயமாக்கலுக்கு எதிராக போராடுவதிலும் கியூபா முன்னுதாரணமாக இருந்து வருகிறது. அதற்கு அங்கிருக்கும் ஆட்சிமுறை முக்கிய பங்களிப்புச் செய்கிறது என்பது சரியானதே. மூன்றாம் உலகநாடுகளின் அபிவிருத்தி, சூழலியல் நெருக்கடிகள் பற்றி 1992ஆம் ஆண்டு ரியோவில் நடைபெற்ற பூமி பற்றிய மாநாட்டில் கியூபா தலைவர் பிடல் கஸ்ரோ ஆற்றிய உரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதன் மூலம் கியூப அரசாங்கத்தின் சூழலியல் மீதான அக்கறையை வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கேள்வி: மனித முன்னேற்றத்துக்காக இயற்கையை வெற்றி கொள்வது, விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி என்பதும் 'சூழலை அழிப்பதும் வெவ்வேறான விடயங்களாகும் என்பது பற்றி உங்களின் கருத்தென்ன?

பதில் : இயற்கை என்பது மனிதனுக்கு மட்டும் உரியதல்ல. அது அனைத்து ஜீவராசிகளுக்கும் உரியது. எனவே இயற்கை மனிதனுக்காக மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளுக்காகவும்



பாதுகாப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. நான் இயங்கியலை ஏற்றுக்கொண்ட நிலையிலேயே சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறேன். அதனால் சூழலைப் பாதுகாப்பது என்பது மனிதன் கற்காலத்துக்கு திரும்பி போக வேண்டுமென்பதல்ல. எவ்வாறான அரசாங்கம் ஒரு விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்பை செய்கிறது என்பதிலேயே அது மக்களுக்கானதா என்பது தங்கியுள்ளது. அதிகமான கண்டுபிடிப்புகள் இராணுவ தேவைகளுக்கான கண்டுபிடிப்புகளாகவே இருக்கின்றன. பின்னர் அவை மக்கள் மீது திணிக்கப்படுகின்றன. உதாரணமாக இண்டர்நெட் தொலைதொடர்பு, உடனடி உணவு (பாஸ்ட் புட்) பிளாஸ்றிக் உபயோகம் என்பன இராணுவ தேவைகளுக்காகவே கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் மக்கள் மீது திணிக்கப்பட்டன. நான் ஒரு விடுதலை சூழலியலாளர் என்ற ரீதியில் அணுகுண்டை மட்டுமன்றி அணு சக்தியையே எதிர்க்கிறேன். அது மனித குலத்திற்கு பாதிப்பானது என்றே கருதுகிறேன்.

எந்தவொரு விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்பும் மக்களுக்கானதாக, மக்கள் அதன்மீது மேலாண்மை செலுத்தக் கூடியதாக இருக்கும்போதே சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. அவ்வாறில்லாத விஞ்ஞான, தொழில் நுட்ப கண்டுபிடிப்பு ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல. சூழலுக்கு பாதிப்பற்ற வாழ்க்கை முறையை வரலாற்றில் கொண்டிருந்த நாங்கள் மேற்கத்தைய பழக்க வழக்கங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது விஞ்ஞான, தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளை ஏற்றுக் கொள்வதாகாது. எங்களது சூழலுக்கு ஒத்துவராத, எமக்கு தேவை இல்லாதவற்றை, எமக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருப்பனவற்றை விஞ்ஞான, தொழில் நுட்ப கண்டுபிடிப்புகள் என்ற பெயரில் ஏற்றுக் கொள்வது சரியாகாது.

கேள்வி: சூழலையும் மனித வாழ்வையும் பாதிக்கும் பொருட்களுக்குப் பதிலாக மாற்றுப் பொருட்களை பாவிப்பதும், சூழலையும் மனித வாழ்வையும் பாதிக்கும் வாழ்க்கை முறைக்குப் பதிலாக மாறான வாழ்க்கையை கடைப்பிடிப்பதும் உலகமயமாதலுக்கும், சூழல் மாசடைவதற்கும் எதிரான இன்னொரு வகையான எதிர்ப்பு நடவடிக்கைகள் மட்டுமே. அதற்கேற்ற ஒரு ஆட்சிமுறை இல்லாவிட்டால் உலகமயமாதலுக்கும், சூழல் மாசடைவதற்கும் எதிரான நிரந்தர தீர்வு இருக்க முடியாது என்பது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில் : வெறும் எதிர்ப்புகள் மட்டுமன்றி மாற்றுப் பொருள் பாவனை மாற்று வாழ்க்கை முறை என்பன நிரந்தரமான மாற்று சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளாகும். சில ஜேர்மனிய இடதுசாரிகள் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர். பின்னர் மாற்று நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இடதுசாரிக் கட்சிகளின் அக்கறை குறைவாக இருந்தபடியால் பின்னர் அந்த சிலர் பசுமை கட்சி (Green Party)யை அமைத்தனர். தேர்தலில் போட்டியிட்டு சில ஆசனங்களை கைப்பற்றியுள்ளனர். தற்போது அரசாங்கத்துடன் கூட்டிணைந்து அழுத்தங்களை கொடுத்து சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தும் வருகின்றனர். சூழல் பாதிப்பு திட்டங்களை முன்னெடுப்பதை தடுத்து நிறுத்துகின்றனர். அவர்கள் முழு அளவிலான அரசியல் அதிகாரத்தைப் பெற்றால் சூழலுக்கு பாதுகாப்பளிக்கும் ஆட்சியை நடத்த முடியும். மாற்று நடவடிக்கைகள் என்பது வெறும் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு அப்பால் சூழல் பாதிப்பு நடவடிக்கைகளை செயலிழக்கச் செய்யும் நிர்ப்பந்தங்களாக அமைய முடியும். இடதுசாரி, புரட்சிகர அரசியல் நிகழ்ச்சி நிரலில் சூழல் பாதுகாப்பு முக்கிய இடம் பெறாமையாலேயே அதற்கென தனியான நிகழ்ச்சி நிரல்கள் ஆக்கப்பட்டன.

கேள்வி: ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு சூழல் மாசடைவதற்கும் எதிராக உலக நாடுகளில் பரவலாக முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் யாவும் 'இன்னொரு உலகம் சாத்தியமானது' என்பதற்கான பிரசாரமாகவே அமைந்துள்ளது. அந்த இன்னொரு உலகம் பற்றிய தெளிவும், அதனை சிருஷ்டிப்பதற்கு அரசியல் அதிகாரமும் அவசியம் என்பது பற்றி என்ன கூறுவீர்கள்?

பதில் : இன்னொரு உலகத்தை சிருஷ்டிப்பதற்கு அரசியல் அதிகாரம் அவசியம். அதனை சிருஷ்டிப்பதற்கு அரசியல் நடவடிக்கை மட்டுமோ, ஒரு அரசியல் சுலோகம் மட்டுமோ போதாது. இன்னொரு உலகத்தை சிருஷ்டிக்க பலவிதமான நடவடிக்கைகள் அவசியம். அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கான நிகழ்ச்சி நிரலும் அவசியம். அவ்வாறு பல நடவடிக்கைகளுடனும் அரசியல் அதிகாரத்தை பெறுவதற்கான நிகழ்ச்சி நிரலுடனும்தான் ஜேர்மனிய பசுமை கட்சி இயங்குகிறது என்று நம்புகிறேன்.

விடுதலை சூழலியல் என்பதை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டில் இயங்கும் 'பூவுலகின் நண்பர்கள்' அமைப்பினைச் சார்ந்த திரு. சி. நெடுஞ்செழியன் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த போது புதிய பூமிக்கு வழங்கிய பேட்டியை இங்கு தருகிறோம்.




## தேச அரசுகள் அர்த்தமற்றுப் போய்விட்டனவா?

தேச அரசு என்பது முதலாளியத்தின் தோற்றத்துடன் உருவானது. அதற்கு முந்திய நிலைகளில் நிலவுடமைச் சமுதாய அடிப்படையிலான அரசுகளும் பேரரசுகளும் தோன்றி வளர்ந்து மறைந்து வந்துள்ளன. எனினும் அரசு என்பது தேசமாக அடையாளங் காணப்பட்ட ஒரு மண்ணுடனும் மக்களுடனும் அடையாளங் காணப்பட்டு விருத்தி பெறுவதில் முதலாளிய சமுதாயத்தின் தோற்றத்துக்கு ஒரு முக்கிய பங்குண்டு. தேசமும் தேசிய அடையாளமும் முதலாளிய நலன் சார்ந்தே விருத்தி பெற்றன. எனவே ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரை தேசம் என்பது அவர்களது நலன் கருதி உருவானதல்ல. பாட்டாளி மக்களுக்குத் தேசம் என்பது இல்லை என்பது அந்தளவுக்குச் சரியானது. ஆனால் இக் கருத்தை ஒரு வரட்டுச் சூத்திரமாக்கினால் நாம் உலகின் உண்மை நிலையை உணராதவர்களவேயாம். முதலாளியம் தனது நலன்களைக் காக்கத் தேசிய அடையாளத்தைப் பாவிக்கிறது. தேசத்தின் பேரால் அரச இயந்திரத்தைக் கொண்டு தன் அதிகாரத்தை நிலை நிறுத்துகிறது. அதே தேச நலன்களின் பேரால் தன் தேசிய எல்லைக்கு அப்பாற் தனது சுரண்டலையும் கொள்ளையடிப்பையுங் கொண்டு செல்கிறது. எனவே அது தன் தேசிய எல்லைகட்கு அப்பால் உள்ள உலகின் பிற நாடுகளையும் பிரதேசங்களையும் தனது ஆதிக்கத்துக்குள் கொண்டு வர முயல்கிறது. ஏகாதிபத்தியம் கொலனித்துவ ஆட்சி முறை மூலம் தனது அரச அதிகாரத்தைத் தனது தேசிய எல்லைகட்கு அப்பாற் கொண்டு போகிறது.

இதன் விளைவாக ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளில் எதிர்ப்புணர்வு எழுகிறது. அதற்குத் தலைமை தாங்கும் நிலையில் உள்ள உள்நாட்டு அதிகார வர்க்கத்தின் ஒரு பகுதி தனக்கென ஒரு தேசிய அடையாளத்தை வகுத்துக் கொள்கிறது. இதன் விளைவாகத் தேசிய விடுதலைப் போராட்டங்கள் வெடித்தெழுகின்றன. முன்னாட் கொலனிகளில் தேசங்களாக உருவான நாடுகளைக் கவனித்தால் அவற்றின் உருவாக்கம் தேசிய அடையாளம் என்ற மனித அடையாளத்தை விட முக்கியமாகக் கொலனிய ஆதிக்கம் விட்டுச் சென்ற பிரதேச அடையாளம் சார்ந்தது எனக் காணலாம்.

முதலாளியம் நவகொலனியமாக வளர்ந்துள்ள இன்றைய நிலையில், விடுதலை பெற்ற பல முன்னாட் கொலனிகள் வலுவிழந்து ஏகாதிபத்தியத்தின் குற்றேவற்காரர்களாக இயங்கும் அரசுகளைக் கொண்டுள்ளதை நாம் காணலாம். இந்த வகையில், கொலனிய ஆட்சிக்கு உட்பட் நாடுகளின் ஆளும் வர்க்கம் போராடியோ போராடாமலோ பெற்ற சுதந்திரமும் கட்டியெழுப்பிய தேசியமும் அமைத்த தேச அரசும் உண்மையான அதிகாரமற்றும் ஒரு சமூக அடையாளமாகக் கூட ஒருங்கிணைய முடியாமற் பிளவுபட்டும் இருக்கிற நிலையை காணுகிறோம். இதனை முன்வைத்தே பின்நவீனத்துவவாதிகள் மட்டுமன்றிக் குழம்பிப்போன சில இடதுசாரிகளும் தேசம் என்பது அர்த்தமற்றது என்கின்றனர். மறுபுறம், வலிய ஏகாதிபத்திய நாடுகளின் அரசுகள் தமது சமூகப் பொறுப்புகளைத் தட்டிக் கழிக்கிற போக்கும் அரச நிர்வாகத்தின் பல அதிகாரங்களையும் கடமைகளையும் தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் போக்கும் பெருகி வருகிறது. இது றேகன், தச்சர் ஆட்சிக் காலங்களில் வேகமாக வளர்ந்து வந்த ஒரு போக்கு. இவற்றை முன்வைத்து, உண்மையான அதிகாரம் பெரிய பன்நாட்டுக் கம்பனிகளிடமும் நிதி நிறுவனங்களிடமுமே உள்ளது என்பதால் அரசு என்பது செயலற்றும் போய்க் கொண்டிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது.

உண்மையான நிலை என்ன? மூன்றாம் உலக நாடுகளில் கல்வி, உடல்நலம், தகவற் பரிமாற்றம், போக்குவரத்து, நீர் விநியோகம் போன்ற பல துறைகளில் அரசாங்கத்தின் பொறுப்புக்கள் தனியார் வசமாகின்றது உண்மை. ஆனால் அரச அடக்குமுறை யந்திரம் மிகவும் பலப்படுத்தப்பட்டு வருகிறது. மூன்றாம் உலக அரச யந்திரம் என்பது உண்மையான எசமானர்களது நலன்களைக் காப்பதற்காகக் கவனமாக வலுப்படுத்தப்பட்டே வருகின்றன. மறுபுறம் தேசிய முதலாளியமும் தரகு முதலாளியமும் தனித்தும் கூட்டுச் சேர்ந்தும் தமது நலன் பேணுவதற்காகப் பிராந்திய மேலாதிக்க முயற்சிகளில் ஒரு வலுவான அரச இயந்திரம் ராணுவம் கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் ஆள் வலிமையையும் ஆயுத வலிமையையும் பெருக்கும் முயற்சிகள் குறையவில்லை. இவ்விடயத்தில் ஏகாதிபத்தியத்திய நாடுகள் கடந்த தசாப்தத்திற், சோவியத் யூனியனுடனான கெடுபிடி யுத்தம் நெகிழ்ந்து போன பிறகும் தமது படைபலத்தையும் ஆயுத வலிமையையும் கூட்டியுள்ளனவே ஒழியக் குறைக்கவில்லை.

எனவே தேச அரசின் பணிகள் முதலாளிய உலக மயமாதலுக்கமைய மாறி வருகின்றனவே ஒழிய அதற்கான தேவை எவ்வகையிலும் குறைந்துவிடவில்லை. அரசு என்பதை ஒரு சமூக சேவை நிறுவனமாகப் பார்த்துப் பழகியவர்கட்கு அரசு என்பது அர்த்தமிழந்துவிட்டதாகத் தெரியும். ஆனால் அரசு என்பது வர்க்க அடக்குமுறைக்கான ஒரு கருவி ஒரு அதிகார இயந்திரம் என்பதைப் புரிந்து கொண்டவர்கட்கு அரசு யந்திரம் தொடர்ந்தும் செயற்படும் என்பதும் தனது உண்மையான உருவத்தில் அது தன்னை இன்னுமின்னும் வெளிக்காட்டும் என்பதும் தெளிவாகவே விளங்கும்.

கொலனி யுகத்திலிருந்து விடுதலை பெற்ற பின்பு உருவான புதிய தேச அரசுகள் தேசிய முதலாளிய நலன்களைப் பேணுவதற்காகச் செயற்பட்டன. அவை மீண்டும் நவகொலனியத்துக்கு உட்பட்ட பின்பு அவற்றால் தமது தேசிய நலன்களைப் பேண இயலாது போகிறது. அந்தளவில் 'தேசிய' முதலாளிய வர்க்கத்துக்குத் தேச அரசு பயனற்றுப் போகிறது. என்றாலும் அந்த அரசு உண்மையான அதிகார வர்க்கம் எதுவோ அதற்கு அவசியமாகிறது. எனவே ஒவ்வொரு நவகொலனிய நாட்டிலும் உள்ள உழைக்கும் மக்களை அடக்கியொடுக்க நவகொலனியவாதிகளான ஏகாதிபத்திய நாடுகட்கும் அவர்களது பெரு முதலாளியப் பன்னாட்டு நிறுவனங்கட்கும் தேவை உள்ளது.

முன்னைய கொலனிய ஆட்சியின் ராணுவமும் பொலிசும் செய்ததை ஆதிக்கத்துக்குட்பட்ட நாட்டின் பொலிசும் ஆயுதப் படைகளும் பெருவல்லரசுகளின் வழி நடத்தலின் கீழ்ச் செய்கின்றன. இந்தளவில் தேச அரசு மாறியுள்ளது.

நவகொலனியத்தை மறுத்து நிற்கும் நாடுகளிலும் சோஷலிஸ நாடுகளிலும் இதற்கு மாறான ஒரு அரசு தேவைப்படும். அது யாருடைய அரசு என்பது அது யாரை அடக்கியொடுக்க முயல்கிறது என்பதைத் தீர்மானிக்கிறது. மற்றப்படி தேச அரசின் முக்கியத்தை மறுப்பது ஒடுக்கப்பட்ட மக்கள் தமது அதிகாரத்துக்காகப் போராடுவதைத் தடுக்கும் பல முயற்சிகளில் ஒன்றே ஒழிய வேறல்ல.

– இமயவரம்பன் –

படிப்பகம்

www.padippakam.com



# ஈராக் மீதான அநீதிப் போர்!

## நவீன ஹிட்லர் டபிள்யூ புஷ்



உலகோன்

ஈராக் மீது 1991ம் ஆண்டு தொடக்கப் பட்ட போர் உண்மையில் என்றுமே முடியவில்லை. கடந்த பனினிரண்டு ஆண்டுகளாக ஈராக் மீதான விமானத் தாக்குதல்கள் பிரித்தானிய. அமெரிக்க அரசாங்கங்களால் நடத்தப்பட்டு வந்தன. ஐ.நா.சபையின் அங்கீகாரமில்லாமலே ஈராக் மீதான பல்வேறு கட்டுப்பாடுகள் அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ளன. ஈராக் மீதான தாக்குதல்கள் பற்றிக் கண்டித்துப் பேச எந்த வலிய நாடுமே முன்வரவில்லை.

சதாம் ஹூசைன் ஒரு சமாதான தேவையில்லை. அவர் மனித நேயத்தின் மனித உருவமும் இல்லை. சதாம் ஹூசைனைக் கவிழ்ப்பதன் மூலம் ஈராக்கிய மக்களுடைய சனநாயக உரிமைகள் மீட்கப்பட வேண்டுமானால் அது ஈராக்கிய மக்களின் புரட்சியா லேயே இயலுமாகும். அந்தப் புரட்சிக் கான தலைமை ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலிருந்து எழ முடியுமே ஒழிய அமெரிக்காவின் எடுபிடிகளாக உள்ள சில பிரமுகர்களால் அப் பங்கை வகிக்க முடியாது.

ஈராக் மீதான தாக்குதலை முழு அளவிலான போராக மாற்ற வேண்டிய தேவை 2001 செப்தெம்பர் 11க்குப் பிறகு துரிதப்படுத்தப்பட்டதே ஒழிய இப் போரின் உள்ளார்ந்த நோக்கம் ஒன்றும் புதியதல்ல. சோவியத் யூனியனின் சரிவை அடுத்து உலகின் மீதான பூரண இராணுவ ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அதன் மூலம் முழுமையான பொருளாதார ஆதிக்கத்தைப் பெறாமல். உலகின் மூலவளங்களை. குறிப்பாக எண்ணெய் வளத்தை ஆதிக்கமாக மாற்றாமல். அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது உலக ஆதிக்கத்தை முழுமைப்படுத்தாமல் இருந்தால் ஏகாதிபத்தியம் என்ற சொல்லுக்குக் கருத்தே இல்லை.

சதாம் ஹூசைனைக் கவிழ்ப்பது தான் அமெரிக்காவின் நோக்கம் என்றால் அதற்கான வழிகளில் அமெரிக்கா முயன்றதாகக் கூற முடியாது. கொங் கோவில் லுமும்பா ஈரானில் மொசா டெக் சிலேயில் அயெண்டே போன் றோரை 'வெற்றிகரமாக்' கொலை செய்த அமெரிக்காவின் சதி வலையில் சதாம் அகப்படவில்லை என்பதை விட. சதாமைக் கவிழ்ப்பது அப்போது அமெரிக்காவுக்கு விசுவாசமான ஒரு ஆட்சி வரும் என்ற உத்தரவாதம் இல்லை என்பதால் சதாமைக் கவிழ்க்க அமெரிக்கா முயலவில்லை. பலவீனமான நாடு ஈராக் அமெரிக்காவுக்கும் போதியதாக இருந்தது.

இப்போது. அமெரிக்கா போர் மூலம் சதாமை ஒழித்தக்கட்டிடத் தனத கைப்பாவைகளைப் பதவியிலமர்த்தும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஐ.நா.சபை என்பது ஆக மிஞ்சினால் சில கொடுமைகளை எதிர்த்துத் தீர்மானங் களை நிறைவேற்றும். மற்றப்படி ஐ.நா.சபையின் பேரால் எடுக்கப்பட்ட ஒவ்வொரு ராணுவ நடவடிக்கையும். கொரிய யுத்தம் முதல் பொஸ்னியா வரை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நன்மைக்காகவே மேற்கொள்ளப்பட் டுள்ளது. அதற்குத் தீனி போடும் எசமான் யாரோ அவருக்காகவே அது பணி புரிகிறது. முதுகெலும்புள்ள எந்த ஒரு ஐ.நா. செயலாளர் நாயகமும் இரண்டாவது முறை பதவியில் அமர அனுமதிக்கப்பட்டதில்லை. இதுதான் ஐ.நா.சபையின் வரலாறு. நமது பாராளுமன்றங்களின் கடைந்தெடுத்த ஏமாற்றுக்காரர்களின் இன்னொரு பாராளுமன்றம் தான் ஐ.நா. பொதுச்சபை அதற்கு ஒரு அதிகாரமும் இல்லை - தீர்மானங்களை நிறைவேற்றுவதை விட்டால்.

எனினும் அமெரிக்காவுக்கு ஐ.நா.சபை யால் பயன் இருக்கிறது. தனது ஆக்கிரமிப்புக்கும் அடக்குமுறை நடவடிக்கைகட்கும் நியாயங் கற்பிக்க ஐ.நா.சபையின் அங்கீகாரம் பயன் படுகிறது. அதைப் பெறுவதற்காகவே ஈராக்கின் ஆயுதக் கனளவக்கும் பரிசோதனைக்கும் ஐ.நா.சபையைப் பயன்படுத்தியது.

சில ஆண்டுகள் முன்பு ஐ.நா. பரிசோதகர்கள் என்ற பேரில் அமெரிக்க உளவாளிகளை அனுப்பி ஈராக்கின் ராணுவ. பாதுகாப்பு மையங்கள் மீது குண்டு வீசுவதற்கு வேண்டிய தகவல்களை அமெரிக்கா பெற்றது. இதன் விளைவாகவே ஈராக் ஆயுதப் பரிசோதகர்கள் விடயத்தில் மிகவும் பிடிவாதமாக மறுப்புத் தெரிவித்து வந்தது.

அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுப்ப தாக முடிவு செய்த பின்பு தான் ஐ.நா.பாதுகாப்புச் சபை மூலம் பேரழிவு ஆயுதப் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. பரிசோதனையின் முடிவுகள் எப்படி அமைந்தாலும் போர் நடக்கும் என்பதும் எல்லாரும் அறிந்ததே. பரிசோதகர்கள் தமது பணியைச் செய்கின்றபோதே பிரித்தானிய. அமெரிக்கப் படைகள் தாக்குதலுக்கு ஆயத்தமாக ஈராக்கைச் சூழ்ந்து விட்டன. எனவே ஐ.நா.பாதுகாப்புச் சபை என்ன முடிவை எடுத்தாலும் அமெரிக்கா போர் தொடுக்கும் என்பது நிச்சயமாயிற்று.

அப்படியானால் அமெரிக்கா ஏன் ஐ.நா.பாதுகாப்புச் சபையைத் தன் வழிக்குக் கொண்டு வர இவ்வளவு தூரம் முயல வேண்டும் என்ற கேள்வி எழுகிறது. இதற்கு ஒரு பிரசார நோக்கம் இருந்தது. அதில் அமெரிக்கா முழு வெற்றி பெறவில்லை. மறுபுறம் ஹான்ஸ் பிளிக்ஸ் மூலம் ஈராக்கிடம் நச்சு வாயுக்களோ நச்சு உயிரிகளோ கொண்ட ஆயுதங்கள் இல்லை என்று உறுதி செய்த பின் போர் தொடுப்பது. இதில் அமெரிக்கா வெற்றி கண்டுள்ளது.

ஈராக்கின் வசம் இருந்த உயிர்கொல்லிப் போர்க்கலங்கள் எல்லாமே அமெரிக்க. பிரித்தானிய உபயமாக 1980களில் வழங்கப்பட்டவை. அவற்றை ஈராக் மேலும் விருத்தி செய்துள்ளதோ என்ற ஐயம் அமெரிக்காவுக்கு இருப்பது நியாயமானது தான். ஆனால் ஈராக் அவற்றைத் தனது குர்திய. சிறுபான்மைத் தேசிய இனத்திற்கு எதிராகப் பாவித்த போது கவலைப்படாத அமெரிக்கா. ஈராக் அதைப் பாவிக்காமலிருந்த காலத்தில் கவலைப்படுவதன் நியாயம் என்ன?

உண்மையில் சதாம் ஹூசைன ஒரு சர்வாதிகாரி என்பதை விட்டால் அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுக் கிறதற்காக முன்வைத்த எந்தவொரு குற்றச்சாட்டும் உண்மை யல்ல என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. நேபாளத்தின் சர்வாதிகார மன்னராட்சிக்கு மக்கள் ஆட்சிக்கான போராட்டத்தை நசுக்க ஆயுதங்களை வழங்கிக் கொண்ட அமெரிக்கா சதாம் ஹூசைனின் சர்வாதிகார ஆட்சி பற்றிப் பேசுகிறது.

அமெரிக்காவின் நோக்கமும். வஞ்சகமும், நியாயப்படுத்தப்பட இயலாத போரும் பற்றி எவருக்கும் ஐயமில்லை. இதனாலேயே இப் போர் பற்றிய உலக நாடுகளின் தலைமைகளின் நிலைப்பாடு மிகவும் வெட்கக் கேடானதாக இருக்கிறது.

அமெரிக்காவின் நோக்கங்கள் பற்றி கியூபா. வடகொரியா. லிபியா போல சில நாடுகளும் நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்களுமே வன்மை யாகக் கண்டித்துள்ளதைக் காணலாம். பொதுவாக. அமெரிக்கா ஏற்கனவே எதிரிகள் என்று அடையாளங் கண்ட நாடுகளே அமெரிக்க நோக்கம் பற்றி வெளிவெளியாகப் பேசத் துணிந்துள்ள அதேவேளை மலேசியா போன்ற நாடுகளின் நிலைப்பாடு இந்தியா வினதும் பாக்கிஸ்தானினதும் குறிப்பாக இலங்கையினதையும் விட மெச்சத்தக்க தாக இருப்பதையும் காணலாம்.

அரபு ஐக்கியம். இஸ்லாமிய ஐக்கியம் என்பனவும் அணிசேராமையும் தமது இயலாமையை முற்று முழுதாகவே வெளிக்காட்டியுள்ளன. இது ஏனென் பதைக் கவனித்தால். இன்று மூன்றா முலகில் நவகொலனிய ஆதிக்கத்துக் குட்பட்ட நாடுகளில் உள்ள தேசிய முதலாளியம் பொதுவாகத் தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு வலிமையை இழந்து அமெரிக்காவுக்குப் பணிந்து போகிற நிலைக்கு விழுந்து விட்டது. எனவே இந்த ஆட்சியாளர்களால் எதுவும் செய்ய இயலாது.

மறுபுறம் உழைக்கும் மக்கள் மட்டுமில் லாமல் நடுத்தர வர்க்கத்தின் பெரும் பகுதியினரும் புத்திஜீவிகளும் அமெரிக்காவின் அண்மைக்கால நடத்தையால் மிகவும் வெறுப்புற் றுள்ளனர். அவர்களது உணர்வுகளை நடைமுறைப்படுத்தும் ஆற்றல் ஒரு அரசியல் இயக்கத்துக்கு மட்டுமே கிட்டக் கூடியது. எனவே அமெரிக்க ஆதிக்கத்துக்கும் போர் வெறிக்கும் எதிரான வெகுசன இயக்கங்கள் கட்டியெழுப்பப்படாமல் மூன்றாமுலக நாடுகளின் அரசாங்கங்களை நம்பி அமெரிக்காவின் போர் வெறியை எதிர்த்துப் போராட முடியாது.

ஒரு நாள் ஆர்ப்பாட்டங்களையும் பத்திரிகை அறிக்கைகளையும் பொதுக் கூட்டங்களையும் விட அமெரிக்காவை நோகச் செய்கிற காரியங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று அமெரிக்க வணிக நலன்களை இலக்கு வைப்பதாகும். அமெரிக்க உற்பத்திகளையும் அமெ ரிக்க முதலீட்டாளர்களது உற்பத்தி களையும் பகிஷ்கரிக்கும் இயக்க மொன்றுக்கான தேவையை நாம் குறைத்து மதிப்பிடலாகாது. தொடக்கத் தில் பெரிய அமெரிக்கக் கம்பெனிகளை இலக்கு வைத்துக் குறிப்பிட்ட சில உற்பத்திப் பொருட்களிற் தொடங்கி அதன் பின்பு அதை மேலும் விரிவுபடுத்து வது பயனுள்ளது.

போர்வெறிபிடித்து அலையும் அமெரிக் கா. இலங்கையின் சமாதான முயற்சி களில் குறுக்கிடுவது பற்றி அனைத்துத் தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவிப்பது நமது சூழலில் மிகவும் பொருத்தமான மேலதிக நடவடிக்கையுமாகும்.

---

# இந்துத்துவத்திற்கு துணைபோகும் அலகாபாத் நீதிமன்றத் தீர்ப்பு


அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது தொடர்பான வழக்கில் அலகாபாத் உயர் நீதிமன்றம் கொடுத் திருக்கும் தீர்ப்பு வேடிக்கையானது. அங்கு இராமர் கோயில் இருந்ததா என்பதை அறிய அகழ்வாராய்ச்சி நடத்தும்படி அகழ்வாராய்ச்சி துறைக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதற்கிணங்க டில்லியிலிருந்து வந்த குழுவினர் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். சில இந்து முஸ்லிம் பிரமுகர்கள் பார்வையிட அனுமதிக்கப் பட்டுள்ளனர். பொதுமக்களுக்கு அவ்விடத்திற்கு செல்லமுடியாது தடை விதிக்கப்பட்டுள்ளது. ஊடகவிய லாளர்களுக்கும் அங்கு சென்று நிலைமைகளை அறிவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அகழ்வாராய்ச்சியின்படி அங்கு இராமர் கோயில் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்தால் அங்கு இராமர் கோயில் கட்டலாம் என்ற தீர்ப்பை அலகாபாத் உயர்நீதிமன்றம் வழங்கலாம்.

இவ்வாறு அகழ்வாராய்ச்சிகளை செய்து கொண்டு போனால் ஆதிவாசி களுக்கும். வேடர்களுக்குமே உலக நாடுகள் அனைத்தும் சொந்தம் என்ற முடிவுக்கே வரவேண்டி வரும். மதங் களையும் சமயங்களையும் கொண்டி ராமல் வாழ்ந்த மனிதர்களிடமே எல்லா வற்றையும் ஒப்படைக்க வேண்டி வரும்.

அயோத்தியில் பாபர் மசூதிதான் இருந்தது என்று முஸ்லிம்களும் . அங்கு இராமர் கோயில் இருந்ததாக இந்துக் களும் கூறுவது மட்டுமன்றி அங்கு




அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடம்

பௌத்த விகாரை இருந்ததாக பௌத்த அமைப்பொன்று கூறியுள்ளது. அயோத் திக்கு சமணர்களும் ஜயனர்களும் கூட உரிமைகோரியுள்ளனர். இவ்வாறு பலரும் உரிமை கோரினால் அயோத்தி யில் எல்லா சமயங்களும் இருந்ததற் கான சான்றுகள் கிடைக்கலாம்.

இங்கு பிரச்சினை யாதெனில் அயோத்தி யில் இருந்த பாபர் மசூதி இடிக்கப் பட்டது சரியா? அந்த இடத்தில் இராமர் கோயில் கட்டுவ்து சரியா? என்பனவே தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை களாகும். இவ்விடயம் தொடர்பான வழக்கு விசாரணைகளில் இதுவரையும் நீதி மன்றங்கள் கொடுத்துவந்த தீர்ப்பைவிட அகழ்வாராய்ச்சி செய்ய வேண்டும் என்ற தீர்ப்பு குழப்பமான தாகும். ஏனெனில் அம்முடிவு நிலைமை யை மேலும் சிக்கலாக்கலாம்.

இந்தியாவிலிருக்கும் பொலிசார். நிர்வாகத்தினர் என்போரின் அடாவடித் தனங்களிலிருந்து ஓரளவாவது மக்களை பாதுகாப்பது நீதித்துறைதான் என்று விதிவிலக்காக பரவலாக பேசப் படுவதுண்டு. அயோத்தி விவகாரத்தில் தற்போது நடைபெறும் அகழ்வாராய்ச்சி "இந்தியாவின் மதசார்பின்மைக்கு" மேலும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி யுள்ளது. இந்திய ஆளும் வர்க்கம் திட்ட மிட்ட ரீதியில் முன்னெடுக்கும் முஸ்லிம் எதிர்ப்பு இந்துத்துவ நிலைப்பாடு இந்திய நாட்டை மேலும் மேலும் பிளவுக்குட் படுத்தவே வழி செய்யும். அதற்கு நீதிமன்றங்கள் துணைபோகாது என்ற எதிர்பார்ப்பு இருக்க முடியாது.

பாகிஸ்தானின் ஆளும் வர்க்கத்தினரின்



இந்துமத வெறியர்கள் அயோத்தியில் கட்ட உள்ள இராமர் கோவிலின் மாதிரி அமைப்பு

இஸ்லாமிய நிலைப்பாட்டினால்தான் இந்திய ஆளும் வர்க்கம் முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கை களை எடுத்துவருகிறது என்று கூற முடியாது. ஆனால் அந்நடவடிக்கைகள் இந்தியாவில் வாழும் முஸ்லிம் மக்களை அந்நியப்படுத்தி அவர்களை இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் பக்கம் தள்ளுவ தாக அமைகிறது. இந்துத்துவத்தை நிலைநாட்டுவது இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கு பதிலாகாது. முஸ்லிம் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகள் இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிரானதாக அமைய முடியாது. பெரும்பான்மை மத அடிப்படைவாதம் சிறுபான்மை மத அடிப்படைவாதத்திற்கு வழிவகுக்கிறது. அதேபோன்று பெரும்பான்மை மத அடிப்படைவாதமும் சிறுபான்மை மத அடிப்படைவாதமும் ஒன்றுக்கொன்று துணைபுரிவன வாகவே வளர்ச்சியடைகின்றன.

கூட்டு வாழ்க்கைக்கு ஏற்றதான சில சமய விடயங்கள் நடவடிக்கைகள் எல்லா மதங்களிலும் இருக்கின்றன. அவை பொதுவானவை. தனியொரு மதத்திற்குரிய குறிப்பான அம்சங்களும் இருக்கின்றன. மதங்கள் விஞ்ஞான ரீதியான மனித வாழ்வுக்கு அடிப்படை யாகவோ வழிகாட்டியாகவோ இருந்த தில்லை. இருக்கப்போவதுமில்லை. ஆனால் கூட்டுவாழ்க்கைக்கு ஓரளவா வது துணைபுரியக்கூடிய. பொது நலத்திற்கு துணைபுரியக்கூடிய பொதுவான விடயங்களையும் கொண்டு வேறுபட்ட மதங்களை தழுவுபவர் களிடையே ஒற்றுமையை ஏற்படுத்த முடியும். ஏற்படுத்த வேண்டும். அதுவே மதவேறுபாடுகளை தடுப்பதற்கான தற்காலிக வழிமுறையான மதசார்பின் மையாகும். மதங்களில் காணப்படும் கூட்டு வாழ்க்கைக்கு எதிரான. பாதக மான விடயங்களை மதசார் பின்மை யால் மட்டும் தோற்கடிக்க முடியாது.

அதற்கு மதம் பற்றிய விஞ்ஞானப் பூர்வமான கண்ணோட்டமும் அதனை நடைமுறைப்படுத்தும் வழி வகைகளும் தேவை. அவற்றை மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுக்களால் மட்டுமே முன்னெடுக்க முடியும்.

www.padippakam.com



# புதிய பூமி ஊடாக ஒரு கடிதம்



## பேராசிரியர் சிவத்தம்பியிடம் சில கேள்விகள்

கடந்த 16.03.2003 வீரகேசரி வார இதழில் பேராசிரியர் கா. சிவத்தம்பி யாழ். பொது நூலகத் திறப்பு நிகழ்வு நிறுத்தப்பட்டமை பற்றி ஒரு சிறப்பு பேட்டி வழங்கி இருந்தார். மேற்படி சம்பவம் இடம்பெற்று ஒரு மாதத்திற்குப் பின் பேராசிரியர் தனது கருத்தைக் கூறி இருக்கிறார். அவரது கருத்துக்கள் என்னிடம் சில கேள்விகளை எழுப்பி உள்ளன. அவற்றைப் புதியபூமி ஊடாக முன்வைக்கின்றேன்.

பேராசிரியர் தனது பேட்டியில் யாழ். பொது நூலகம் பேரினவாத எரியூட்டலின் ஒரு குறியீடாக இருக்க வேண்டும் என்றும் இனிமேல் சண்டை வராது என்ற நிலையில் தான் நூலகம் திறக்கப்பட வேண்டும் எனவும் கூறி இருக்கிறார். மக்கள் வீடு இழந்து வீதி இல்லாது நிர்க்கதியாக இருக்கும் போது பொது நூலகம் திறக்க வேண்டுமா எனக் கேள்வி எழுப்பி உள்ள அவர் நூலகத் திறப்பு தடுக்கப் பட்டமைக்கு சாதி காரணம் அல்ல வென்றும் வாக்குமூலம் அளித்திருக் கிறார். மேலும் யாழ்ப்பாண சமூகத்தில் சாதி முறை இருக்கிறதை ஒப்புக் கொண்டுள்ள பேராசிரியர் அதனை அங்கு அழித்துவிட முடியாது என்றும் கூறிவிட்டு, அதே சாதி அரசியல் சிந்தனையில் இல்லை என்றும் அடித்துக் கூறியதுடன் அதற்கு உதார ணமாக நல்லையாவைச் செனட்ட ராகவும் இராஜலிங்கத்தை பாராளு மன்ற உறுப்பினராகவும் ஆக்கிய கட்சிதான் மேயருக்கும் பதவி கொடுத் தது எனவும் வாதாடி இருக்கிறார்.

கனம் பேராசிரியர் அவர்களே! பொது நூலகம் பேரினவாத எரியூட்டலின் குறியீடாக இருக்க வேண்டும் என்ற உங்கள் கதையை ஆறு வருடங் களுக்கு முன்பு சந்திரிகா அம்மையார் "ஒரு செங்கல்லும் ஒரு புத்தகமும்" எனக் கூறி எரிந்த நூலகத்தை மீளப் புனரமைப்புச் செய்யத் தொடங்கிய வேளையில் அல்லவா கூறி இருக்க வேண்டும். அவ்வேளை இக் கருத்தைத் துணிந்து கூறி அதற்கான ஒரு வெகுஜனப் போராட்டத்திற்கு வழிகாட்டி யிருந்தால் உங்கள் துணிவையும் தூரநோக்கையும் பேரினவாத விரோதத் தையும் பாராட்டியிருக்கலாம். ஆனால் அன்று ஏதோ காரணத்தால் மௌனம் காத்த நீங்கள் இன்று அந்த எரியூட்ட லின் சுவடுகளே தெரியாதவாறு 95 வீத புனரமைப்பு முடிந்த பின் உங்கள் நியாயம் எவ்வாறு செல்லுபடியாக முடியும்.

அடுத்து சண்டை வராது என்ற நிலையில் தீர்வு வந்த பின்புதான் நூலகம் திறக்கப்பட வேண்டும் என்பது நூலகத் திற்கு மட்டும் உரிய அளவுகோலா அல்லது குண்டு போட்டும் எரித்தும் அழிக்கப்பட்ட அனைத்திற்கும் உரிய அளவு கோலா என்பதைப் பேராசிரியர் கூறுவாரா? இப்பொழுது பேச்சு வார்த்தையில் தீர்வுக்கு முன்பு அல்லவா புனரமைப்புகள் இடம்பெற இருக் கின்றன. பேராசிரியருக்கும் அவரது பிள்ளைகளுக்கும் அல்லது அவரைப் போன்ற கொழும்பு வாசித் தமிழருக்கும் பொது நூலகம் தேவைப்படாது. ஆனால் யாழ்ப்பாணத்து சாதாரண மக்களுக்கும் அவர் தம் பிள்ளை களுக்கும் அதன் பயன்பாடு இன்று அவசியமாகின்றது. வீரசிங்கம் மண்டபம் புனரமைக்கப்பட்டு விட்டது. 'தந்தை' செல்வநாயகத்தின் நினைவாலயம் மிக வேகமாகப் புனரமைக்கப்படுகிறது. மத்திய கல்லூரி அழிவுகள் மறுசீரமைப்பு நடைபெறுகிறது. நீதிமன்ற வளாகம் கட்டப்பட உள்ளது. இவை எல்லாம் பேரினவாத யுத்தத்தால் அழிக்கப்பட்ட வைகள்தான். ஆனால் பொது நூலகம் மட்டும் திறக்கப்படக் கூடாதா?

மேலும் யாழ்ப்பாணத்தில் சாதி முறை இருக்கிறதெண்டால் அது அழிக்கப்பட முடியாது என்றால் அது அரசியல் சிந்தனையில் மட்டும் எவ்வாறு இல்லா திருக்கும். "சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும்". "உள்ளத்தில் இருப்பது உதட்டில் வந்து கொள்ளும்" போன்ற முது மொழிகளின் தர்க்கத்தை யாவது பேராசிரியர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். மறந்து போன மாக்சிசக் கண்ணோட்டத்தை ஒரு கணமாவது நினைவுபடுத்தியிருந்தால் மேற்படி சாதி பற்றிக் கூறி இருக்க மாட்டார். நல்லையாவை செனட்டராக வும் இராஜலிங்கத்தை பாராளுமன்ற உறுப்பினராகவும் தமிழரசு–கூட்டணி யினர் ஆக்கியவை சாதியை ஒழிப்பதற் கல்ல என்பதைக் கூடப் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு பேராசிரியர் சிவத்தம்பி தமிழ்த் தேசியத்தை விழுங்கி சித்தங் கலங்கிநிற்பதையே அவரது பேட்டி எடுத்துக் காட்டுகிறது.

இளமைக் காலத்தில் மாக்சிச வேடமும் முதுமைக் காலத்தில் தமிழ்த் தேசிய வேடமும் போட்டு நிற்கும் பேராசிரியரின் கருத்துகள் இன்று சபை ஏற முடியாத வையாகவே காணப்படுகின்றன. இனிமேல் அவரிடம் நியாயமான தர்க்க ரீதியான எதையும் எதிர்பார்க்க முடியாது என்பதே எனது தாழ்மையான எண்ணமாகும்.

கந்தையா சிவலோகநாதன்
யாழ்ப்பாணம்

# தாயகம் புதுப் பொலிவுடன்



தாயகம் சஞ்சிகை புதிய பொலிவுடன் உள்ளடக்கச் செறிவுடன் அட்டைப்பட அழகுடன் மார்ச் 2003 இதழாக வெளிவந்துள்ளது. மாதாந்த இதழ் என்ற கூறிக் கொண்ட போதிலும் தாயகத்தால் அவ்வாறு வெளிவரமுடிய வில்லை. வாய்ப்பு வசதிகள் வளங்கள் அற்ற நிலையில் தனது விடா முயற்சியுடன் தாயகம் தனது வரவில் தொடர்ச்சியைப் பேணி வந்துள்ளது. இப்போது கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழ் எனக் குறிப்பிட்டு காலாண்டு இதழாக வெளிவரும் எனக் கூறி நிற்கிறது.

பதிய ஜனநாயகம் புதிய வாழ்வு புதிய பண்பாடு என்னும் அடிப்படையிலான மக்கள் இலக்கியப் பாதையில் பயணிக்க திடசங்கற்பம் பூண்டு நிற்கும் தாயகத்திற்கு அதன் விலை நாற்பது ரூபாவாகும். மக்கள் இலக்கியத்தை முன்னெடுத்து வரும் இலக்கியவாதி களும் அவர்களோடு பயணம் செய்ய முன்நிற்கும் புதிய தலைமுறை எழுத்தாளர்களுக்கும் தாயகத்தை வளம்படுத்த அணிசேர்ந்து நிற்கின்றமை வரவேற்கக்கூடியதாகும்.

6ம் பக்க தொடர்ச்சி..

### ஜே.வி.பி. ...

இடதுசாரிக் கட்சிகள் செய்த பிழைகளையே ஜே.வி.பி. செய்கிறது என்ற வாதம் செல்லாது. ஏனென்றால். பழைய இடதுசாரி களுடன் சமரசம் செய்த தேசிய முதலா ளியம் ஒரு வலிய தேசிய முதலாளியம். தனது ஏகாதிபத்திய எதிர்ப்பு மூலம் வெகுசன ஆதரவைக் கொண்டிருந்த ஒரு தேசிய முதலாளியம். அப்போது பாராளுமன்ற ஆசனங்களை இழந்து கொண்டிருந்த இறங்கு திசையிலிருந்த இடதுசாரிகது அரசியல் ஆற்றாமையை ஸ்ரீ.ல.சு.கட்சி தனக்கு வசதியாக்கிக் கொண்டது.

இன்று. நிலைமை வித்தியாசமானது ஸ்ரீ.ல.சு.கட்சி ஆதரவாளர்களிடம் ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வு இருந்தாலும் கட்சித் தலைமை இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புக்கு வழிகாட்ட இயலாத நிலையில் உள்ளது. அமெரிக் காவின் இன்றைய நடத்தையைக் கண்டித்து சந்திரிகா என்றுமே பேசமாட்டார் என்பது உலகறிந்தது. தேசிய இனப்பிரச்சினையின் தீர்வைக் குழப்புவதன் மூலம் யூஎன்.பி. ஆட்சி யாளருக்கு மக்கள் நடுவே செல்வாக்குப் பெற்றுத் தரக் கூடிய ஒரே ஒரு பயனுள்ள சாதனையை மறுப்பதன் மூலம் யூஎன்.பி.யை அதிகாரத்திலிருந்து நீக்குவதுதான் ஸ்ரீ.ல.சு.கட்சியிடம் உள்ள ஒரே மாற்றுத் திட்டம். இதற் கூடாகக் கட்சிக்குள் பாரிய பிளவுகள் உள்ளன. சந்திரிகாவும் அரசியல் கோமாளியாகி விட்ட தம்பி அநுராவும் குடும்ப அரசியல் அதிகாரத் தைத் தக்க வைப்பதற்காக எதையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஜே.வி.பி. தனியே ரோபட்டியிட்டுப் 15 ஆசனங்களைக் கூட வெல்வது கடினம். ஏனெனில் ஜே.வி.பி.யின் அரசியல் திசை மாற்றம் கீழ் மட்டங்களில் அதன் ஆதரவுத் தளத்தைப் பலவீனப் படுத்தி சிங்கள வணிகர்கள் நடுவிலும் நடுத்தர வர்க்கத்தினர் நடுவிலும் அதன் ஆதரவைச் சிறிது பெருக்கியுள்ளது. எனினும் மேற்கொண்டு அதன் வளர்ச்சி ஸ்ரீ.ல.சு.கட்சியின் இயலாமையால் விரக்தி கொண்டவர்களைக் கவருவதிலேயே தங்கியுள்ளது.

ஸ்ரீ.ல.சு.கட்சியை விடத் திறமையாக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் கூட்டங் களும் போடும் ஆற்றல் ஜே.வி.பி.க்கு உண்டு. சந்திரிகாவின் தலைமை அதன் கவர்ச்சியை இழந்த நிலையில் இரண்டாம் படி நிலையில் இருந்தவர்கள் சோர்ந்தும் கட்சியிலிருந்தும் விலகிய சூழ்நிலையில். வலதுசாரியும் பச்சை இனவாதியுமான சரத் அமுனுகம இன்று ஸ்ரீ.ல.சு.கட்சியின் முக்கிய பேச்சாளராகியுள்ளார். அவர் மூலமும் அனுர பண்டாரநாயக்கா, தினேஷ் குணவர்த்தன போன்றோர் மூலமுமே ஜே.வி.பி.யுடனான உறவு பெருக்க மடைகிறது. பேரியல் அஷ்ரப் தன் சந்தர்ப்பவாதத்துக்காக இதற்கு உடந்தையாக இருக்கிறார். எனினும் ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் ஒரு பிளவு ஏற்படும் வாய்ப்பு இப்போது அதிகம்.

யூஎன்.பி. ஆட்சியைத் தனது பதவிக் காலம் முடியு முன்னரே கலைக்கிற நோக்கம் சனாதிபதி சந்திரிகாவுக்கு உண்டு. எனவே அடுத்த பதினெட்டு மாதங்கட்குள் எப்படி யூ.என்.பி. ஆட்சியின் இடத்தில் பொதுசன முன்னணி–ஜே.வி.பி. முன்னணியை அதிகாரத்துக்குக் கொண்டு வருவது என்பதிலேயே அவரது கவனம் உள்ளது.

இந்தக் கூட்டணி நடைமுறைக்கு வந்தால் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஓரங்கட்டப்பட்டு சரத் அமுனு கமவின் வலதுசாரிப் பேரினவாதப் போக்கு ஸ்ரீ.ல.சு.கட்சிக்குள் ஓங்குவது போக. பழைய பாராளுமன்ற இடதுசாரி கட்கு ஒதுங்குவதற்கு நிழல் இல்லாத நிலைமை ஏற்படும். அவர்களால் இனி ஸ்ரீ.ல.சு.கட்சி பெறக் கூடிய நன்மை எதுவும் இல்லை என்று அவர்களும் அறிவார்கள். அரசியற் செல்லாக்கா சாகிவிட்ட அவர்களது சரித்திரம் என்றோ முடிந்து விட்டது. அவர்கள் இன்று பொதுசன முன்னணி அரவணைப்பில் உள்ள அநாதைகள். நாளை அவர்களை ஏற்க ஒரு அநாதை இல்லமும் இல்லை என்பதுதான் பரிதாபகரமான உண்மை.

இவை எல்லாவற்றையும் விட. ராணுவமும் கடற்படையும் போர் நிறுத்தத்தைத் திட்டமிட்டுக் குழப்ப முயல்வதும் யூ.என்.பி. ஆட்சியின் தடுமாற்றமான போக்கும் சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றத்துக்குத் தடையாகவே உள்ளன. ஸ்ரீ.ல.சு.க.–ஜே.வி.பி. இனவாத அரசியல் வலுப்பெற்றால். யூஎன்.பி.யும் அதே அரசியல் ஆட்டத்தில் இறங்கும் அபாயம் உண்டு. எனவே இதனால் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மிகுந்த நெரக்கு வாரத்துக்குள்ளாகும்.

மீண்டுமொரு முறை போர் மூளுமாயின் அதற்கான, விலையைக் கொடுக்கப் போவது பேரினவாத அரசியற் கட்சிகளல்ல. நாட்டின் பொது மக்களே. அது பற்றி யூ.என்.பி.க்கோ ஸ்ரீ.ல.சு.கட்சிக்கோ ஜே.வி.பி.க்கோ என்ன கவலை!

4ம் பக்க தொடர்ச்சி..

### மலையக மக்கள்...

அதிகமானோர் உழைப்பாளிகள் என்பதை ஏற்றுக் கொள்ளவே தயங்கு கின்றனர். மலையகத் தமிழ் மக்களின் அதிகமானோரின் தொழிலாள வர்க்க தன்மையை ஏற்றுக் கொள்வதை தரக்குறைவாக நினைக்கிறார்கள். சி.வி. சாதாரண உழைப்பாளிகளுக்காக எழுதினார் என்பதை அடக்கி வாசிக்க முயல்கிறார்கள்.

சி.வி.வேலுப்பிள்ளையை இந்தியாவின் ரவீந்திரநாத் தாகூருடன் ஒப்பிடு வதையும் இவர்களெல்லாம் விரும்பு கிறார்கள் இல்லை. பல விடயங்களில் ரவீந்திரநாத் தாகூர் என்ற மனிதாபி மான எழுத்தாளனை விட முழுக்க முழுக்க சாதாரண உழைப்பாளிகள் பற்றியே சி.வி. எழுதியுள்ளார். அவர் அந்த உழைப்பாளிகளின் வாழ்க்கையில் மாற்றம் வேண்டும் என்று விரும்பிய வராவார். எனவே எழுச்சி கொள். வெட்டு, சுடு என்றெல்லாம் எழுதா விடினும் சி.வி. அக்கால கட்டத்தில் புரட்சிகரமானவராகவே இருந்துள்ளார். சீன எழுத்தாளர் லூசுனின் எழுத்துக் களும் மிகவும் ஆரவாரமற்றவை. அவை மென்மையானவைதான். ஆனால் அவரை சீன மக்கள் புரட்சிகர எழுத்தாளனாகவே கொள்கின்றனர்.

மேற்படி நூல் வெளியீட்டு விழாவில் பேசிய மு.சிவலிங்கம் அரசியல் வாதிகளையே தலைவர்கள் என்று ஏற்பது தவறு என்றும் ஒரு சமூகத்தின் தலைவனாக எழுத்தாளனும் இருக்கி றான் என்றும் குறிப்பிட்டுள்ளார். அப்படி யானால் மு.சிவலிங்கம் இரட்டைத் தலைவன். அவர் ஒரு எழுத்தாளர். அவர் ஒரு அரசியல்வாதி. எழுத்தாளன் என்றால் யார் என்று லூசுன் கூறியதை இவ்வேளை நான் நினைவுபடுத்திக் கொள்கிறேன்.

'சுட்டும் ஆயிரம் விரல்களை மீறி
முற்றும் பணிந்த எருது போல்
குழந்தைகளுக்காக சேவை செய்கிறேன்'

என்றே லூசுன் அவரைப்பற்றி அவரே குறிப்பிட்டிருந்தார்.

சி.வி. எழுதி 30 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்ட 'தேயிலை தேசத்தின்' தமிழ்மொழி யாக்கம் பற்றி குறிப்பிடாமல் விட முடியாது. சி.வி.யின் மூலத்தின் தன்மை அப்படி தமிழ் மொழியாக்கத்தில் இல்லை. சில இடங்களில் நேரடி மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளதால் சி.வி.யின் மூல உணர்வு சிதைக்கப்பட்டுள்ளது. வுாந நெற றநயிழெ என்ற கதையின் தலைப்பு ஒரு புதிய ஆயுதம் என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. இங்கு ஆயுதம் என்ற நேரடி மொழிபெயர்ப்பு பொருந் தாது. அதனால் 'ஒரு புதிய போராட்டம்' என்பதே பொருந்துவதாக இருக்கும். ஒரு தொழிலாளர் தலைவன் தாடியை நீளமாக வளர்ப்பது அவனது ஒரு வகை எதிர்ப்பு போராட்டமேயன்றி அவனது தாடி ஒரு ஆயுதமல்ல.

சில இடங்களில் சில வரிகளை நேரடியாக மொழியாக்கம் செய்யப்படாத தால் தவறான புரிதல்களை ஏற்படுத்தும் நசலைய ஹுழசயள (பெரிய துரை) என்ற கதையின் தலைப்பை தேயிலை தேசத்து ரோஜா என்று இட்டதன் மூலம் பெரிய துரையின் துரைத் தனங்களை வெளிக் கொணர முடியாது போகிறது.

'When death comes' என்ற கதை வைகுந்த அம்மானை என்று மொழி யாக்கப்பட்டுள்ளது. இக்கதையில் மரண வீட்டில் நடக்கின்ற சாதி ரீதியான சம்பிரதாயங்களை மொழிபெயர்ப்பில் சாதியத்தை அழுத்திக் கூறுவதாக அமைந்துள்ளது. மொழியாக்கம் செய்யும் போது நேரடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டியவை எவை? விளக்கமாக வேறு விடயங்களுடன் ஒப்பிட்டு மொழி பெயர்க்கப்பட வேண்டியவை எவை? என்பது பற்றி தெளிவிருக்க வேண்டும். படித்தவர்கள் நிறைந்திருக்கும் மலையகத்தில் இப்படியொரு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டது ஏன் என்று எண்ணத் தோன்றுகிறது.

சி.வி.யைப் பற்றிய பார்வைக் கோளாறு கள். மொழிபெயர்ப்பு விகாரங்கள் என்பனவற்றைப் பார்க்கும் போது மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் திட்ட மிட்டு திணிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளின் ,விளைவா 'மலையக தேசம்' என்று சந்தேகிக்க வைக்கிறது.

வெளியீட்டு விழாவில் பேசிய மு.சிவ லிங்கம் எழுத்தாளர்கள் முற்போக்கு, பிற்போக்கு. நற்போக்கு என்று மூன் றாகப் பிரிந்திருந்தனர் என்றும் பின்னர் எல்லாமே வயிற்றுப்போக்காகி விட்ட தாகவும் கூறியுள்ளார். எல்லா எ்ழுத் தாளர்களையும் அவ்வாறு பொதுமைப் படுத்துவது சரியாகாது. அத்துடன் அவருக்கும் 1960களில், எழுதும் போதும் சோஷலிஸ்ட் பல்கேரியாவிற்கு புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் கற்கச் சென்ற போதும் ஒரு போக்கிருந்தது. அதற்குப் பிறகு இன்னொரு போக்கிருந்தது. அரசியல் வாதியாகி மாகாணசபை உறுப்பினரான பிறகு இன்னொரு போக்கிருக்கிறது என்று அந்த வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட சிலர் முணுமுணுத்ததை கேட்கக் கூடியதாக இருந்தது.

மொழிபெயர்ப்புச் செய்பவரின் கருத்து மூலக்கதையின் ஆத்மாவை சிதைத்து விடக்கூடாது. 'உழைக்கப் பிறந்தவர் களின்' ஆத்மா தேயிலை தேசத்தால் குற்றுயிராக்கப்பட்டுள்ளதாகவே உணர முடிகிறது.

உழைக்கப் பிறந்தவர்கள் என்னும் சி.வி.யின் அர்த்தமுடைய தலைப்பை தேயிலை தேசம் எனக் கொச்சைப் படுத்தலாமா?

4ம் பக்க தொடர்ச்சி..

### தாய்லாந்....

கருத்துக்கள் நம்பிக்கையீனமானதாக இருக்கின்றன.

யுத்த நிறுத்தம் தொடர்வதும், பேச்சு வார்த்தை முறிவில்லாமல் தொடர்வதும் நல்ல விடயங்கள்தான். அவற்றின் நீட்சி தமிழ் மக்களுக்குக் கொண்டு வரப்போ கின்ற நன்மைகள் என்ன?

தனிநாட்டுக் கோரிக்கையை கைவிடு வதற்கான நியாயப்பாடாக 'உள்ளக சுயநிர்ணய உரிமை' பற்றி பலபேர் கதைத்து வருகிறார்கள். பேச்சு வார்த்தைகளில் வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்க்கை ஏற்படுவதற்கான அபிவிருத்தி நடவடிக்கைகள் என்றும். நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டு வதற்கான அரசியல் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகள் என்றும் இரண்டு விதமான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இயல்பு வாழ்க்கையை ஏற்படுவதற்கான அடிப்படை முட்டுக்கட்டைகள் தகர்க்கப் படவில்லை. இருந்த தடைகள் அவ்வா றே இருக்கின்றன. அரசியல் தீர்விற் கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படுவதாகத் தெரியவில்லை.

அவ்வாறெனின் தமிழ் மக்களின் தரப்பில் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் செய்ய வேண்டிய விடயங் களும் ஆற்ற வேண்டிய காரியங்களும் நிறையவே இருக்கின்றன.

அத்துடன் பேச்சுவார்த்தைக்கு உரிய விடயங்கள் என்பது ரணில் அரசாங்கத் திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் திற்கும் மட்டும் உரிய விடயங்களாகத் தொடர்ந்தும் இருக்க முடியாது என்பதையும் உணர்த்துகிறது. யப்பான் பேச்சுவார்த்தைக்குப் பிறகும் ஊர்ந்து செல்லும் 'சமாதான யாத்திரை' கடந்த கால இலங்கைத் தமிழ்த் தலைமை களை ஞாபகப்படுத்துகின்றன. அந்த அனுபவங்கள் செழுமையான எதிர் காலத்திற்கு வித்திட வேண்டும் என்பதே விடுதலையை விரும்பும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

படிப்பகம்

புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 10 ஏப்ரல் 2003 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 57

- அரசியல் தீர்வை வற்புறுத்தி
- உலக மயமாதலை எதிர்த்து
- வாழ்க்கைச் செலவைக் குறைக்க கோரி
- அமெரிக்க போர் வெறியை கண்டித்து

## புதிய ஜனநாயக கட்சியின் புரட்சிகர மேதினம்

**2003 மே 1**

**பொதுக் கூட்டம் - ஊர்வலம்**
**யாழ் நகரில் - ராகலையில்**

# தொழிற்சங்கப் போராட்டங்கள்
## சமாதானத்திற்கு எதிரானவை அல்ல.

தொழிற்சங்கப் போராட்டங்கள் எவ்வகையிலும் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானவையல்ல. தற்போது போராட்டங்களை நடத்திவரும் தொழிற் சங்கங்கள் தொடர்ந்து யுத்தத்தை எதிர்த்தும் சமாதானத்தை விலியுறுத்தியும் வந்துள்ளன. தொழிற் சங்க போராட்டங்களை சமாதான விரோத நடவடிக்கைகளென பிரசாரம் செய்வதை அரசாங்கம் கைவிட வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவை இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பை எதிர்த்தும் தனியார் மயத்தை எதிர்த்தும் சம்பள உயர்வைக் கோரியும் தொழிற்சங்கங்கள் நடத்திவரும் போராட்டங்களில் வடக்கு-கிழக்கு தொழிலாளர்களும் இணைந்துள்ளனர். அத்துடன் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதும் தொழிற்சங்கப் போராட்டக் கோரிக்கைகளில் முக்கியமானதாக இருக்கிறது. இடதுசாரி தொழிற்சங்கங்கள் எவ்வித நிபந்தனையுமின்றி யுத்தத்தை எதிர்த்து சமாதானத்தை ஆதரிக்கின்றன. அதேபோன்று எவ்வித விட்டுக் கொடுப்புமின்றி தொழிலாளர்களின் உரிமைக்காக போராடும் கடப்பாடுடையன என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

ஐ.தே.மு., பொ.ஐ.ஐக்கிய முன்னணி என்பவற்றின் தவறான பொருளாதார கொள்கைகளாலேயே இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்து மக்கள் கஷ்டப்படுகின்றனர். தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்கள் அவர்களின் பொருளாதார கோரிக்கைகளை முன்வைத்து போராட வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவர்களின் போராட்டங்கள் சமாதான விரோத நடவடிக்கைகளெனக் கூறிக் கொண்டு சமாதான முயற்சிகளுக்கு இடதுசாரி தொழிற்சங்கங்களின் ஆதரவை ஐ.தே.மு. அரசாங்கம் பெற முடியாது. அத்துடன் தொழிலாளர் போராட்டங்களை சமாதான விரோத நடவடிக்கைகளென காட்டினால் அது இனவாதிகளுக்கும், சமாதான விரோதிகளுக்கும் துணைபுரிவதாகும்.

தற்போது அரசாங்க ஊழியர்கள் நடத்திவரும் போராட்டங்களில் சமாதானத்தை எதிர்க்கும் ஜே.வி.பி.யின் தொழிற் சங்கங்கள் கலந்து கொள்ளவில்லை. இந்த போராட்டங்களை முன்னெடுக்கும் இடதுசாரி தொழிற்சங்கங்கள் சமாதானத்தை நிபந்தனையின்றி ஆதரிக்கின்றன. இதனால் தொழிற் சங்கப் போராட்டங்களை கைவிட முடியாது. அதேபோன்று தொழிற்சங்கப் போராட்டங்களை நடத்துவது சமாதானத்திற்கு எதிரானதுமல்ல.


விலைவாசி உயர்வை எதிர்த்து சம்பள உயர்வு கோரி சமாதானத்தை ஆதரித்து கொழும்பில் நடைபெற்ற தொழிலாளர் பேரணி

தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்குவதற்காக அவற்றை சமாதானத்துக்கு எதிரானதாக காட்டும் முயற்சிகளை அரசாங்கம் கைவிட வேண்டும். தொழிலாளர்களுக்கு உரிமைகளை வழங்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். யுத்தம் நடைபெற்ற காலத்தில் நடைபெற்ற தொழிற்சங்கப் போராட்டங்கள் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவானதென கூறப்பட்டது. தற்போது நடைபெறும் தொழிற்சங்கப் போராட்டங்களை சமாதான எதிர்ப்பு நடவடிக்கைகளாக காட்டப்படுகிறது. இது அர்த்தமற்றதுமாகும் என்றும் இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்கள் பிரதமரிடம் தெரிவித்தனர்.

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு இடதுசாரி தொழிற்சங்கங்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இடதுசாரி தொழிற்சங்கத் தலைவர்களுடன் பிரதமர் நடத்திய கலந்துரையாடலின்போது மேற்படி விடயங்களை இடதுசாரித் தலைவர்கள் எடுத்துரைத்தனர்.

இடதுசாரி தொழிற்சங்கங்கள் எப்போதும் சமாதானத்தின் பக்கமே இருக்கும் என்றும் சமாதானத்திற்கு எதிரான சக்திகளைத் தோற்கடிக்கும் இனவாதத்திற்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளில் இணைந்து கொள்வது கொள்கை ரீதியில் சாத்தியமில்லாவிடினும் சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஆதரவை இடதுசாரி தொழிற்சங்கங்கள் வழங்கும் என்றும் மேலும் தெரிவித்தனர்.

# மலையக மக்களின் பிரச்சினைகளை முன்வைக்க தலைமைகள் மறுப்பதேன்?

மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மிகப் பாரியவைகளாகும். இன வர்க்க அடிப்படையில் பேரினவாத பெரு முதலாளித்துவ ஆளும் வர்க்க சக்திகளால் தொடர்ந்தும் உரிமைகள் பறிக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்த மக்கள் மலையக மக்கள். மலையக மக்களுக்காக தொழிற் சங்கம் வைத்தும் கோரிக்கைகள் கேட்டும் வந்த தொழிற் சங்கத் தலைமைகள் தங்களையே வளர்த்துக் கொண்டன. அவ்வாறே பாராளுமன்ற அரசியலில் இறங்கிய தொழிற்சங்கங்களுக்கு ஊடாக வந்த தலைமைகளும் தங்களை அமைச்சர்கள் அந்தஸ்துவரை உயர்த்தி வளர்த்துக் கொண்டார்களே தவிர மக்களுக்கு எதுவும் செய்து கொள்ளவில்லை.

இன்று தேசிய இனப்பிரிச்சினைக்கான பேச்சுவார்த்தை ஆறு கட்டங்களைத் தாண்டி விட்டது. அந்தப் பேச்சுவார்த்தையில் மலையக மக்களின் பிரச்சிரனைகளும் பேசப்பட வேண்டும் என மலையக அரசியல் தலைமைகள் என்று கூறப்படுவோர் ஒரு வார்த்தை தானும் பேசவில்லை. உலக ஒப்பினைக் காவது மலையக மக்களுக்கு வழங்கப் படவேண்டிய இவைகள் தாம் என்று வரையறுத்துக் கூற முற்பட வில்லை.

ஏன் என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது. இந்தக் தலைமைகளிடம் தான் முதுகெலும்பு இல்லை யென்றால் மலையகத்தின் புத்திஜீவிகள் என இருப் போராவது ஏதாவது கோரிக்கைகளை முன் வைத்து வலியுறுத்தியிருக்க வேண்டும். சிலர் எடுத்த முயற்சிகளுக்குக் கூட குறைந்தளவு ஒத்துழைப்புத் தானும் கிடைக்க வில்லை.

அமைச்சர் பதவி முதல் அடிமட்டப் பதவிகளைப் பெறுவதிலும் அதற்காக அரசியல் தலைமைகளைச் சுற்றி நின்று ஆமாம் சாமி போட்டு நிற்பதிலுமே மலையகத்தின் படித்தவர் காலத்தைக் கழித்து வருகிறார்கள். ஆனால் மலையக மக்களின் அன்றாட வாழ்வில் இருந்து எதிர்கால இருப்பு வரை மிகப் பெரும் கேள்விகளுடனம் அபாயங்களுடனும் சென்று கொண்டிருக்கிறது.

இனிமேலும் தொழிற்சங்க. பாராளுமன்ற தலைமைகளையே அல்லது அவர்களுக்கு சேவகம் செய்து தங்களை மட்டுமே வளப்படுத்தும் கனவான்களையோ நம்பிப் பயன்இல்லை. "அடிமைத்தனத்துடன் வாழும் ஒரு சமூகம் தனது அடிமைத் தலைகளை அறிந்து அவற்றை அறுத்தெறிவதற்குப் போராட முன் வராது விடின் அச்சமூகம் அடிமையாக இருப்பதற்கு மட்டுமே தகுதியானது" என்பது தோழர் லெனின் அவர்களது கூற்றாகும். எனவே அடிமைத் தனங்களை அடையாளம் கண்டு அவற்றுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் மார்க்கத்தை புதிய தலைமுறை நாடி முன்னேற வேண்டும்.

இங்கு ஒரு திட்டவட்டமான தீர்வு யோசனை அரசாங்கத்தின் அனுசரனையுடன் வெளிநாடுகளுக்குச் சென்று சமஷ்டி பற்றி ஆராயப் புறப்பட்டுச் சென்றுள்ள வேடிக்கையை எவ்வாறு அழைப்பது. பிரதமருக்கோ அன்றி அரசாங்கத்திற்கு மலையக மக்களது பிரச்சினை என்ன என்பதை விளக்க வக்கற்ற ஏமாற்று அரசியல் தலைமைகள் ஜேர்மனியில் மலையக மக்கள் பற்றி விளக்கவுரை கொடுக்கச் சென்றுள்ளமை தான் விநோதமானதாகும்.

எனவே மலையக மக்கள் மத்தியில் குறிப்பாக இயற் தலைமுறையினர் மத்தியில் அரசியல் விழிப்புணர்வும் உரிய மார்க்கத்தில் அணி திரள்வும் அவசியமாகிறது.

# யாழ் நகரில் படைமுகாம் வேண்டாம்
## புதிய ஜனநாயக கட்சி கண்டனம்

யாழ் நகர மத்தியில் புதிய இராணுவ முகாமை அமைக்கும் முயற்சி மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறான ஒன்றாகவே அமைகின்றது. இம்முயற்சி உடன் கைவிடப்பட வேண்டும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வட பிரதேசச் செயலாளர் கா.கதிர்காமநாதன் வெளியிட்டுள்ள அக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

யாழம் நகரம் சிதைவடைவதற்கு முன்னர் பெருமளவு மக்களின் நடமாட்டம் மிகுந்த பகுதியாகவும் மக்களின் தேவைகளுக்குரிய இடமாகவும் யாழ் மாநகர சபை வளாகமும் அதனை அண்டிய பிரதேசங்களும் இருந்து வந்தன.

அத்துடன் இப்பகுதியோடு இணைந்து கடற் பிரதேசமும் மீனவர்களின் தொழிலுக்கு உகந்த இடமாக இருந்து வந்தது. யுத்தத்தினால் அழிக்கப்பட்ட அத்தகைய பகுதிகள் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளமைப்பதற்காக புனரமைக்க வேண்டிய இக்கட்டத்தில் இராணுவ முகாமை அமைக்க முயல்வது புரிந்துணர்வுக்கும் சமாதான முயற்சிக்கும் இடையூறாகவே அமையும்.

எனவே யாழ் கடற்கரையோரம் மாநகர சபைக் காணியில் பாரிய ராணுவ முகாம் அமைப்பதை புதிய ஜனநாயக கட்சி வன்மையாக எதிர்க்கிறது. அம் முயற்சியைக் கைவிடுமாறு வற்புறுத்துகிறது என அவ் அறிக்கை தெரிவித்துள்ளது.

# மின்னல் நிகழ்ச்சி தடுக்கப்பட்டதேன்? தமிழ்த் தலைவரின் தலையீடாம்

சக்தி தொலைக்காட்சியில் வாராவாரம் ஞாயிற்றுக்கிழமைளில் மின்னல் என்ற அரசியல் விவாத அரங்கு இடம் பெற்று வந்தது. கடந்த மார்ச் 30 திகதி நடைபெற இருந்த மின்னல் நிகழ்ச்சி பற்றி முன் கூட்டியே விளம்பரமும் செய்யப்பட்டது. கூட்டமைப்பின் பிரமுகர்கள் கலந்து கொண்டு காரசாரமான விவாதம் தமக்குள் நடத்துவதை விளம்பரத்தில் காண முடிந்தது. ஆனால் அறிவித்தபடி மின்னல் நிகழ்ச்சி உரிய நர்ளில் நடைபெறவில்லை. தமிழர் கூட்டமைப்பினரின் காரசார விவாதத்தைக் காண இருந்தவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

இவ்வாறு அந்நிகழ்ச்சி இடம் பெறாது போனமை தற்செயலானதல்ல. தன்னைப் பற்றி கடுமையான தாக்குதல் தனது சக கூட்டடைப்புப் பிரமுகர்களிடம் இருந்து வந்ததைப் பெறுக்க முடியாத கூட்டணித் தலைவர் சீற்றம் கொண்டாராம். உடனே அயலகத்து தூதுவராலயத்துடன் தொடர்பு கொண்டு முறையிட்டாராம். தூதுவராலய பெரும் புள்ளிகள் சக்தி தொலைக்காட்சி நிறுவன உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டார்களாம். இறுதியில் நிகழ்ச்சி ஒளிபரப்பப் படவில்லையாம். இந்தத் தடைக்குப் பின் தன்னால் எதையும் செய்ய முடியும் என்று அந்தத் தலைவர் துள்ளிக் குதித்து நிற்கிறாராம். தடுக்கப்பட்ட நிகழ்ச்சியை தணிக்கையுடன். மாற்றங்களுடன் அடுத்த வாரம் ஒளிபரப்ப திரை மறைவு முயற்சி இடம் பெறுகிறதாகவும் அறிய முடிகிறது. ஆனந்தமாகக் தொடங்கிய கூட்டமைப்பு அவலப்பட்டு அம்பலத்திற்கு வந்து அடிபிடிப் படுகின்றதைப் பார்க்கும் போது சிரிப்பதா அல்லது அழுவதா என்றே தமிழ் அன்பர்கள் கேட்கின்றனர்.

# தேவையற்ற அந்நிய உற்பத்திகளைப் பகிஷ்கரியுங்கள்

இன்று கவர்ச்சிகரமான பலமுனை விளம்பரங்களுடன் மக்களது வாழ்வுக்கு தேவையற்ற பல்வேறு பொருட்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. அவற்றின் ஒரேநோக்கம் வியாபாரமும் கொள்ளை லாபமுமேயாகும். இவற்றைய பல்தேசிய நிறுவனங்களும் அவற்றுடன் இணைந்த உள்ளூர் முகவர் நிறுவனங்களும் மக்கள் மத்தியில் பல்வேறு உத்திகளைப் பாவித்தும் பணமாக்கி வருகின்றன. இதில் மக்களின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடிய உணவுப் பண்டங்கள் சந்தையில் தாராள விற்பனை க்கு விடப்பட்டுள்ளன. போத்தல்கள். பிளாஸ்ரிக் புட்டிகள். பொலித்தீன் உறைகள் மற்றும் கடதாசிப். பெட்டிகள் என்பனவற்றில் உணவு வகைகளை அடைத்து வர்ண வகைகளில் விளம்பரம் அச்சிட்டு மக்கள் மத்தியில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள உணவுப் பதார்த்தங்கள் நமது சூழலுக்கும் சுகாதாரத்திற்கும் உடல் நலத்திற்கும் கேடு விளைவிக்கக் கூடியனவையாகும். வைத்திய நிபுணர்கள் பலர் இது பற்றி விளக்கங்களையும் எச்சரிக்கைகளையும் விடுத்து வந்த போதிலும் மக்கள் பல்வேறு விளம்பரக் கவர்ச்சிகளின் ஊடாக ஏமாற்றப்படுகின்றனர். உடல் நலத்தைக் கெடுத்து கடுமையான நோய்களைக் கொண்டு வரக் கூடிய இவ் உணவுப் பதார்த்தங்களை மக்கள் பகிஷ்கரித்து நிராகரிக்க வேண்டும். நமது மண்ணில் விளைந்தவற்றையும் நமது பாரம்பரிய உணவு வகைகளையும் உதாசீனம் செய்து விட்டு பணம் பறிக்கும் பல்தேசியக் கம்பனிகளின் ஏமாற்று வலையில் விழர்திருப்போம்.

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட். 334A, K சிறில் சி. பெரேரா மாவத்தை. கொழும்பு 13.